ஓம்

லலிதாம்பிகாயை நம:

# ஜெயத்ஸேனா

லலிதாங்கி, ஜலஜாக்ஷி, தேவிசந்திரப்ரபா, ஜோதிஷ்மதி,
நிர்மலா, ஆனந்தமஹிளா, ஹேமாம்பரி, ஸரஸ்வதி,
கௌரி, ஞானரஞ்சனி, ஸுஜாதா, வநஸுதா,
விராஜினி, ஆரியகுமாரி, ஸ்ரீகரி,

ஆகிய

புத்தகங்களை எழுதிய

பண்டிதை விசாலாக்ஷி அம்மாளால்

இயற்றப்பட்டது.

Accn. No. 171072

No of Pages: 96

முதற்பதிப்பு—1,000 பிரதிகள்

சென்னை

"ஜி. சி. லோகநாதம் பிரதர்ஸ் அவர்களால்"

கார்டியன் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1911

*Copy right Registered*] [விலை அணா 8.

OFFICE OF THE ... MADRAS 30 MAY 1911

2424
894.08113
17/0/72
O,3Mv19,J
M4

MADRAS : G. C. LOGANADHAM BROS
THE GUARDIAN PRESS, MOUNT ROAD

B

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
30 MAY 1911
MADRAS.

# முன்னுரை

ஆரியஸகோதர ஸகோதரிகளே!

"ஹிதகாரிணி" யின் அபிவிருத்தியைக்கோரி நீங்கள் செய்துள்ள ஸகாய ஸம்பத்துக்களுக்காக மிகுந்த நன்றி பாராட்டக்கடமைப்பட்டிருக்கிறேன். முதல் வருஷத்தில் "வஙஸ௱தா" என்ற தமிழ் நாவலும், இரண்டாவதாண்டில் "ஆரியகுமாரி" என்ற புஸ்தகமும் மூன்றுவது ஸம்வத்ஸராரம்பத்தில் "ஜெயத்ஸேனு" என்ற ஆச்சர்யகரமான கிரந்தத்தையும் இனுமாயளித்து வந்திருக்கின்றேன். லாபத்தை உத்தேசித்தாவது கியாதியை விரும்பியாவது பத்திரிகா புஸ்தகங்களை வெளியிடவில்லை என்பது பத்திரிகா நண்பர்களுக்கு நன்றுய்த்தெரியும். "ஜெயத்ஸேநா" என்ற இப்புஸ்தகம் நூதனமாயும், சமத்காரமாயும், படிப்பவர்களுக்கு ரஸமாயும், யுக்தி யுக்தவார்த்தைகளோடும் அமைந்திருப்பதால் ஸோதர ஸோதரிகள் திருப்தியடைவார்களென் றெண்ணுகிறேன். ஜனசார சீர்திருத்தம் அவசியமென்று கூறுவோர்கள் இதைப் படித்து அதிக ஸந்தோஷமடைந்து சீக்கிரத்தில் அச்சிடும்படி ஆஞ்ஞாபித்தார்கள். அவர்களிஷ்டப்படியே "ஜ்வலிதாங்கி"யைப் பின்னுல் அச்சிடத் தீர்மானித்து இந்தப் புஸ்தகத்தை வெளியிட்டு முடித்தேன். இது ஹிதகாரிணிப் பத்திரிகையின் சந்தாதாரர்களுக்கென்றே வெளியிட்டிருப்பதால் மற்றவர்களுக்கு விலைக்குக் கிடைக்காது. பத்திரிகா விருத்தியைக்கோரும் ஸ்திரீபுமான்கள் அதை எந்நாளும் ஆதரித்து வரும்படி மன்றுடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். குணஞ்ஞர்கள் குற்றத்தை மறந்து குணத்தை ஏற்றுக்கொள்ளும்படி தாழ்மையோடு வேண்டும்,

கல்பகவிலாஸ், மதராஸ்.
16—1—11.

விசாலாக்ஷி.

30 MAY 1911
MADRAS.

ஓம் லலிதாம்பிகாயை நம:

# ஜெயத்ஸேனை

## மனோன்மணி

கல்பாவதீ! நீ என்ன சொல்லுகிறாய்? உனக்கு விவாகம் செய்ய வெண்ணி யிருக்கிறேன். உன் தந்தை ஆசார சீர்திருத்தக்காரராயிருக்கிறாராம். கல்யாணம் செய்யக்கூடாதென்று தடுக்கிறார். நான்கு வருஷமாய் அனேக வரன்களைப் பார்த்து வருகிறேன். எல்லா வரன்களுக்கும் விவாகம் நடந்ததென்று தெரிகிறது. இப்பொழுதும் முழுகிப் போகவில்லை. என் தமையன் பிள்ளையிருக்கிறான். உன் அத்தை மகன் தார்வாரில் படிக்கிறான். இவர்களும் வேண்டாமென்றால் நீ ருது வாய்விடுவாய். பிறகு உன்னை யாரும் ஜாதியில் சேர்த்துக்கொள்ள மாட்டார்கள். என்னையும் இழப்பாய். நமது பந்துக்களும் மற்றவர்களும் உன்னிடம் வரமாட்டார்கள். உன் தந்தையுடன் நீ தனித்திருந்து உலகோர் நகைக்கக் காலம் கழிக்க நேரிடும். பிராம்மண ஜாதியில் பிறந்து கன்யாதானம் செய்து கொடாமலிருப்பது மகா பாபம். 20-வது வயதில் நீ இஷ்டப்படும் புருஷனுக்கு உன்னைத் தாரைவார்த்துத் தரப் போகிறாராம் உன் பிதா! தலையும் நரைத்து முகமும் சுண்டி, கட்டை மரம்போலுள்ள கிழவனுக்கோ, பறையனுக்கோ, பரம சண்டாளனுக்கோ நீ வாழ்க்கைப்படப்போகிறாய். இன்றிரவு உன் தந்தைக்கும் எனக்கும் பிரமாதமான சச்சரவு நடக்கப்போகிறது. கண்ணே! உன் பிதாவைக் கெஞ்சிக்கொள். இந்த அவமானத்தை நான் எப்படி ஸகிப்பேன்! ஒருவேளை இரங்கினாலாகாதா என்று 30-வயதுள்ள ஓர் அழகிய மாது அருமையாய்ப் பெற்றெடுத்தத் தன் மகளிடம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

அம்மணீ! நானென்ன செய்வேன்? அன்னையாகிய உங்கள் வார்த்தையைக் கேட்பேனா? தந்தையாகிய அவர் சொல்லை ஏற்பேனா? ஒன்

றும் தெரியவில்லையே! என்னுலியன்றவரையில் அவரை வணங்கிக் கேட்கிறேன். மனமிரங்கினுலாயிற்று. இல்லையேல் என்ன செய்வீர்? நீர் வருத்தப்படுவதைப் பார்க்க என்னுல் ஸகிக்க முடியவில்லை என்று சிறிய பெண்ணுன கல்பாவதி கூறினுள். அவர் என்னிஷ்டப்படி உன்னைத் தர்ம சாஸ்திர ரீதியாய் விவாகம் செய்து கொடுத்தாலாயிற்று. இல்லையேல் என் தாய் வீட்டுக்கு உன்னையும் அழைத்துச் சென்று அங்கிருந்தே விவாகம் நடத்தி விடுகிறேன். அவர் என்னைச் சிக்ஷித்தாலும் பாதகமில்லை. ஜாதியாசாரம் போகாமல் காரியமானுல் போதும். இதுவே என்னுடைய தீர்மானம் என்றுள் தாய்.

உங்களிஷ்டம். கல்யாணமோ ஒட்டியாணமோ அது இன்னதென்று எனக்குத் தெரியாது. அப்பாவின் ஸம்மதமில்லாமல் நீர் பாட்டிவீட்டுக்குப் போனுல் அவர்கள் உங்களைக் காப்பாற்றுவார்களா? பொருளில்லாதவர்கள் வீட்டில் நீர் சென்று ஹிம்சைப்படுத்துவது தர்மமா? மாமாவின் நடத்தை என் தந்தைக்குப் பிடிக்காதிருந்ததால்லவோ என்னைக்கூட இதுவரையில் அனுப்பாதிருக்கிறுர். இப்பொழுது நீர் போனுல் அவர் மிகவும் கோபிப்பார் என்று கல்பாவதி உரைத்தாள்.

பைத்யம்போல் பேசாதே! மாமியார் வீட்டில் வாழ்ந்தாலல்லவோ மக்களுக்குப் பெருமையுண்டு. படிப்பும், பாட்டும், நாகரீகமும் கற்றுக்கொண்டால் உலகத்தார் ஸந்தோஷப்படுவார்களா? புருஷனேடு வாழ்ந்து புத்திரர்களைப் பெற்று மாமிமாமனைப் பணிந்து நாத்தி ஓரகத்திகளுடன் நேசமாயிருந்து நற்பெயரை எடுப்பதே ஸ்திரீகளின் கடமையாகும். கல்பாவதி! உன் மாமனை அவர் வைவது எதற்காகத் தெரியுமா? கர்நாடக ஸம்பிரதாய முள்ளவனென்று வெறுப்பதேயாகும். மற்றக் காலத்தில் அவர்களுக்குள் பேதமேற்பட்டாலும் விவாககாலத்தில் எல்லோரும் ஒரேவித அபிப்பிராயமா யிருப்பார்கள். கண்ணே! உனக்கேன் கவலை. நீ என்னுடன் வருகிறுயா? இல்லையா? உன்தந்தை மிகவும் புத்திசாலி; பொறுமை யுள்ளவர்; குணவான்; செல்வவந்தர். அவைகளை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். இது ஜாதி ஸம்பிரதாயமாயிற்றே! என்ன செய்யலாம். இந்த வருஷத்தில் எப்படியாவது மணம் முடிந்தே தீரவேண்டும் என்றுள் மாதரசி.

இதற்குள் இங்கிலீஷ் சொல்லிக்கொடுக்கும் ஐரோப்பிய துரைசானி கல்பாவதியின் அறைக்குள் வந்தாள். ஒரு வேலைக்காரன் பெண்மணியிடம் துரைசானி வந்திருப்பதாய்த் தெரிவித்தான். கல்பாவதி தாயினிடம் விடைபெற்றுப் படிக்கச் சென்றாள்.

குமாரி போனதும் மாது கன்னத்தில் கையை வைத்துக்கொண்டு விசாரத்துடன் கண்ணீர் பெருக உட்கார்ந்திருந்தாள். அவளுடைய யோசனை அபாரமாயிருந்தது. தலையைக் குனிந்து துக்கித்தாள். ஓர் தாதி இரண்டு வயதுள்ள அழகிய பெண் குழந்தையைக் கொஞ்சின வண்ணமாய் எஜமானியிடம் கொடுக்கலானாள். மனோன்மணி அதை வாங்காமல் சற்று நேரம் நீயே வைத்திரு. பிறகு நான் எடுத்துக் கொள்ளுகிறேனென்று கூறி அவ்விடத்தை விட்டகல எழுந்தாள். குழந்தை குதித்துத் துள்ளித் தாயின் கழுத்தைக் கட்டிக்கொண்டது. என்ன விலக்கியும் அது விடவில்லை. மனோன்மணி வெறுப்புடன் அதை இடுப்பில் வைத்துக்கொண்டு மேல் மாடிக்குச் சென்றாள்.

ஸ்ரீமதி! நீ ஏன் தொந்திரவு செய்கிறாய்? ஒரு பெண்ணைப்பெற்றுத் துன்பப்படுவது போதாதென்று நீயும் என்னை வாட்டுகிறாயா? நேற்றுப் பிறந்தாள் கல்பாவதி. அவளுக்கு வயது 12½-யாய்விட்டது. என் மனக்கவலையை அந்த ஸ்வாமியே யறிவார். நான் பிரபுவுக்கு வாழ்க்கைப்பட்டேனென்று மகிழ்ந்திருந்தேன். இப்பொழுதல்லவோ என்னைத் துன்பம் சூழ்ந்திருக்கிறதென்று நினைக்கிறேன். நீங்கள் இருவரும் ஏன் பிறந்தீர்கள்? என்னைப்போல் பெண்களைப் பெற்றவர்கள் தங்கள் குமாரிகளுக்கு மணம் முடித்ததைப்பற்றிப் பெருமையாய்ப் பேசி நான் விவாகம் செய்து கொடாமலிருப்பதை விவரித்துச் சிரிக்கிறார்கள். என் செய்வேன் குழந்தாய்! உனக்குப் பேசத் தெரியவில்லையே! அத்தை, அம்மா, அப்பா, தாத்தா, பாச்சி என்று மழலைச்சொற்களை வர்ஷிக்கிறாய். கண்ணே! அப்பாவுடன் என் குறைகளைச் சொல்லி அக்காவுக்கு மணம் முடியுமாறு செய்வாயா? என்று முத்தமிட்டாள். ஸ்ரீமதியும் சிரித்துக்கொண்டே அம்மா! புலு புலு புலு என்று கூத்தாடினாள்.

ஆகா! என்செய்வேன்! அவர் வரும் நேரமாயிற்றே! ஒருநாளும் நான் அவரை எதிர்த்துப் பேசினதில்லையே! என்ன யோசனை செய்தேன்! அவஸரத்தில் புருஷனோடு பகைத்துக்கொள்ள நினைத்தேன். கல்பா

வதியை அல்பப் படிப்பாளிக்கு மணந்து கொடுக்க எண்ணினேன். அவருக்குத் தெரியாமல் விவாகத்தை முடித்துவிட மனங்கொண்டேன். ஜாதிக்குப்பயந்து நான் யோசனை செய்தபடி முடித்துவிட்டாலும் என் ஸ்ரீமதியையும் என்னையும் அவர் நீக்கிவிட்டால் எங்கள் கெதி யென்ன? ஊரி லுள்ளவர்களைத் திருப்திசெய்யச் சென்று என் பதியையும், நிதியையும் இழந்து கெதியில்லாமல் அவல் இடிக்கவும் அப்பளமிடவும் போக வேண்டுமல்லவா? சீ! சீ! இழிவான தொழிலைச்செய்து இச்சரீரத்தை ரக்ஷிப்பதைக் காட்டிலும் ஜீவனை விடுவது மேலாகும். என்னிரு கண் மணிகளும் என் அன்புள்ள நாயகரின் ஆசையாலல்லவோ பிறந்தனர். அவர்களை நானேன் துன்பப்படுத்தவேண்டும். என்னை உலகம் நிந்திக்குமாகில் உயிரைவிடச் சித்தமாயிருக்கிறேன். இதைக்காட்டிலும் எனக்கு உத்தமவழி ஒன்றுமில்லை. என் பிராணநாதரைப் பகைத்துக் கொண்டு மூடர்களின் மத்தியில் வாழ்வதா? அவர் மனம் நோக நான் நடப்பேனுகில் இகபரமிரண்டையும் இழப்பேன். ஸ்ரீமதீ! உன்னுடைய அன்பான முகமல்லவோ என்னை மூர்க்க குணத்திலிருந்து திருப்பிற்று. கண்ணே! குழந்தைகள் பகவதா ஸ்வரூபமென்று பெரியோர்கள் கூறுவது பொய்யல்ல. வித்யாதர ஸ்திரீகளுக்குதிக்கும் குழந்தைகளைப்போல் நீங்களிருவரும் ஜெனித்திருக்கிறீர்கள். உங்களுடைய அழகும் குணமும் சுறுசுறுப்பும் மனிதர்களை வசப்படுத்திக் கொள்ளக்கூடியவை. கண்காள்! என் வாழ்நாள் தாழ்வடையும் காலம் வந்ததே என்று வியஸனிக்கிறேன். ஆம் இன்னொரு யோசனை தோன்றுகிறது. நான் மரிப்பேனுகில் என் மாணிக்கங்களை யார் வளர்ப்பார்கள்? அன்பும், பக்ஷமும் காட்டும் மனிதர்கள் உங்களுக்கில்லையே! இளம்பிராயமுள்ள என் நாதர் வேருெரு பெண்ணை மணந்து கொள்வாராகில் கல்பாவதி, ஸ்ரீமதிகளின் கெதியென்ன? விதியே! விதியே! எந்த வழியும் போகவிடாமல் தடுக்கிறுயே! நான் செத்தாலும் என் குழந்தைகள் கஷ்டப்படும்! இருந்தாலும் என் மானம் நில்லாது. ஒன்றுபோக மற்றொன்று மனதை வாட்டுகின்றதே. ஈசா! ஈசா! பேசாதிருக்கிறீரே! நான் ஏன் ஜெனித்தேன்? வழியொன்றுமில்லையா? என்று மறுபடியும் துக்கித்தாள்.

ஸ்ரீமதி ஓடிவந்து மனோன்மணியைத் தட்டி முகத்தைக்குனிந்து

பார்த்து வீச்சென்று அழலானுள். கண்ணே! ஏன் அழுகிருய்! வேண்டாம். நான் இனி வியசனப்படுகிறதில்லே. நான் துக்கிப்பது உனக்கு ஸகிக்கவில்லேயா என்று அவளே ஸமாதானப் படுத்திக்கொண்டே "சங்கரீ! குழந்தையை அழைத்துக்கொண்டு கோட்டை வேடிக்கையைக் காட்டிவா" என்ருள். ஊ ஊ ஊ என்று தாயை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள் ஸ்ரீமதி. சங்கரி பலமுறை விளேயாட்டுக் காட்டினுள். தலேயை அசைத்துக்கொண்டே தாயை விடாமல் கட்டிக்கொண்டாள் குழந்தை.

வழ வழவென்ற அவயவங்களுடனும், பள பளவென்ற சரீர காந்தியோடும் தங்கநிறத்துடன் குழந்தை விளங்கினுள். தாயின் அழகோ சொல்லிமுடியாது. படிப்படியாய் அமைந்துள்ள தலேமயிரை வெகு அழகாய் முடிபோட்டுக்கொண்டு தளதளவென்று வதனமண்டல காந்தி வீச யௌவனம் தேகத்தில் ஸஞ்சரிக்க கந்தர்வ ஸ்திரீயைப் போல் சோபித்தாள். அப்ஸரகன்யையைப்போலுள்ள கல்பாவதி பாடம் வாசித்ததும் அன்னேயைத் தேடிவந்தாள். குழந்தைகளின் ஸௌந்தர்யமும், தாயின் அழகும் சந்தியாகாலத்தில் விந்தையாய்த் தோற்றின. சித்திரக்காரர்கள் யாராவது பார்த்திருப்பார்களாகில் அந்தக் காக்ஷியைப் படமாய் வரைந்திருப்பார்கள்.

---

## ஸுந்தரி

இரவு 8-மணி யடித்தது. தென்றல் காற்று வீசுகிறது. சந்திரன் மந்தஹாஸமாய்ச் சிரிக்கிருன். வட்டமான அழகிய கட்டடத்தில் ஸுதேச நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. மத்தியில் ஒரு அழகிய சாய்வு நாற்காலி பார்ப்பவர்களே வசியம் செய்துகொண்டிருந்தது. அதனருகில் வழவழவென்ற சிறிய மேஜைகளிருந்தன. அவைகளின் மேல் அன்று வந்த பத்திரிகைகளும் கடிதங்களும் வெகு ஒழுங்காய் வைக்கப்பட்டிருந்தன. எஜமான் வரவை எதிர்பார்த்திருந்தான் ஸேவகன். இக்காலத்தில் வழங்கும் விசித்ர விளக்குகளே ஏற்றியிருந்ததால் அந்த மந்திரம் வெகு அந்தமாய்த் தோன்றிற்று.

சுத்தமான வெள்ளேயுடை தரித்த ஓர் ஸுந்தர புருஷன் மூடியிருந்த கதவைத் திறந்துகொண்டு வந்தான். ஸேவகன் எதிரில் கை

கட்டி நிற்கவே எஜமான் அவனை வெளியிலிருக்கும்படி கூறிச் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கடிதங்களைப் படிக்கலானுன். அவனுடைய உருவம் வெகு கம்பீரமாயிருந்தது. பத்து நிமிஷம் சென்றது. வேலையாள் மெதுவாய் எதிரில் நின்று "பெரிய அம்மணி இப்பொழுதுதான் இரயிலிலிருந்து வந்திருக்கிறுர்களாம். தங்களைப் பார்க்க வரலாமா? என்று கேட்டுவரச் சொன்னுர்களாம். சமையல்கார ஐயர் இந்த ஸமாசாரம் தெரிவித்தார்" என்றுன்.

என்ன! அம்மாள் வரவாவது? திடீரென்று வந்த காரணம் யாதோ! உடனே வரச்சொல் என்றுன் எஜமான். ஸேவகன் வந்தவனிடம் கூற சிறிது நேரத்துக்குள் 40-வயதுள்ள ஒரு மாது அந்தக் கட்டடத்தில் நுழைந்தாள்.

அக்கா! நமஸ்காரம் செய்கிறேன். கடிதம் போடாமலும் தந்தி கொடாமலும் அவஸரமாய்ப் பிரயாணம் செய்யவேண்டிய காரணமென்ன? ஊரில் எல்லோரும் ஸுகமாயிருக்கிறுர்களா? என்று வினவினுன் ஹரேசன்.

அருமைத்தம்பி! ஸுகம்தான். உங்களை எல்லாம் பார்க்கவேண்டுமென்ற ஆசை யுண்டாயிற்று. ஒரே பிடிவாதமாய்ப் புறப்பட்டு வந்தேன். ஹரேசா! நான் வருவதும் போவதும் ஒரு கணக்கா? என்றுள் ஸுந்தரி.

அக்கா! எழுந்திரு. ஸ்நானம் செய்து ஆகாரம் பண்ணு. பிறகு பேசலாம். தார்வாரிலிருந்து பல்லாரிக்கு வந்திருக்கிறுயே! இந்நேரம் வரையில் பசி தாங்குவாயா? உனக்கு ஆகாரம் ஒன்று அதிகமாயிருக்குமே! எதை இழந்தாலும் அதை விடமாட்டாயல்லவா? சீக்கிரம் சாப்பிடு. நானும் வரட்டுமா? என்றுன் ஹரேசன்.

தம்பி! நீ வரவேண்டாம். இளைப்பாறிக்கொண்டிரு. நான் மனோன்மணியோடு சாப்பிட்டு இங்கே வருகிறேன். வந்தவள் மேலே சென்று குழந்தைகளைக் கூட பார்க்கவில்லை என்று கூறிச் சுந்தரி எழுந்தாள்.

அக்கா! சாப்பாட்டில் அதிக நேரம் கழித்தாயானுல் நான் உன்னைத்தொட்டு விடுவேன். பாதிவயிறுகூட நிறைந்திராது; தெரியுமா? என்றுன் ஹரேசன்.

ஹரேசா! உன் விளையாட்டுக் குணம் இன்னும் நீங்கவில்லையா? குழந்தை ஸ்வபாவமே அதிகமாயிருக்கிறது. இதோ வந்து விடுகிறேன். நீ படித்துக்கொண்டிரு என்ருள் ஸுந்தரி.

அக்கா! நீ இருக்க எனக்கென்ன விசாரம்! நான் உனக்குத் தம்பிப் பாபாவன்ரு? என்னைப் பெரியவனென்று எவ்விதம் சொன்னுய்? வா! சண்டையிடப் போகிறேன் என்று மொழிந்தான் ஹரேசன்.

என்னமோ அப்பா! நீ எனக்குப் பச்சைக் குழந்தையே யாவாய் என்று கூறிச் சமையலறைக்குச் சென்ருள்.

மனேன்மணி எதிர்கொண்டழைத்து அக்கா! வெந்நீர் சுட்டாயிற்று. சீக்கிரம் ஸ்நானம் செய்யுங்கள். ஸோமநாதன் சுடச்சுடத் தங்களுக்காகச் சமைத்திருக்கிருன். உங்களுக்குப் பிடிக்குமென்று பாகக்காய்ப்பிட்லே, வெள்ளரிக்காய் கோசுமலி, தயிர்ப்பச்சடி, பன்னீர் ரஸம், வருவல்களைச் செய்து தங்கள் வரவை எதிர்பார்த்திருக்கிருன். வாருங்கள் என்ருள்.

மனேன்மணீ! அந்த அசட்டை ஒன்றும் செய்யவேண்டாமென்று கூறினேனே! எல்லாம் உன்னுடைய ஏற்பாடாயிருக்கும். நான் என்னடீ சாப்பிடப்போகிறேன். என்னைக் கண்டால் உனக்கு ஆவேசம் வந்துவிடும். என்று கூறிக்கொண்டே ஸ்நான அறைக்குச் சென்ருள். இலையில் பக்ஷ்யபதார்த்தங்கள் வெகு ஏற்பாடாய் வைக்கப்பட்டிருந்தன. ஸுந்தரியின் முகம் கௌமார தெசையைக்காட்டிற்று. வெகு உருக்கமான பார்வை. முகத்தில் கருணாரஸம் பெருகிக்கொண்டிருந்தது. 40-வயதாகியும் பரமஸுந்தரியாகவே தோற்றினுள்.

மனேன்மணியும், ஸுந்தரியும் போஜனம் செய்தார்கள். ஸ்ரீமதி தொட்டிலில் படுத்துக்கொண்டிருந்தவள் அழத்தொடங்கினுள். அத்தையம்மா வந்திருக்கிருர். அழுவாளோ என்று கல்பாவதி அவளை எடுத்துக்கொண்டு ஸுந்தரியிடம் கொடுத்தாள். சாப்பாட்டைக்கூட கவனியாமல் ஸ்ரீமதியின் முகத்தில் ஓயாமல் முத்தமிட்டாள் அத்தை. மனேன்மணி போஜனம் செய்யும்படி ஞாபகப்படுத்தவே ஸுந்தரி உண்டாள்.

ஹரேசனிருக்கு மிடத்துக்குப் போகலாம் வா என்ருள் ஸுந்தரி. தாங்கள் வரும்வரையில் விழித்துக்கொண்டிருக்கிறேன். அவருக்கும்

எனக்கும் நடந்த வாக்வாதங்களைச் சொல்லவே தங்களைப் புறப்பட்டு வரும்படி கடிதமெழுதினது. அவருடைய அபிப்பிராயத்தை முற்றிலு மறிந்துகொண்டு புத்தியுரைப்பதில் பிரயோஜன முண்டானுல் பேசுங் கள். இல்லையேல் ஸமயோசித வார்த்தைகளால் பேசி முடித்துவந்து விடுங்கள். பிறகு தங்கள் சொற்படி காரியம் நடக்கட்டும் என்ருள் மனேன்மணி.

ஸுந்தரி சென்று தம்பியைப் பார்த்தாள். சாய்வு நாற்காலியி லேயே தூங்கிவிட்டான் ஹரேசன் என்றறிந்து திரும்பி வந்தாள். மனேன்மணியும், ஸுந்தரியும் பேசலாயினர்.

**மனேன்மணி.**—அக்கா! கல்பாவதியை யாருக்கும் மணம் செய்து கொடுக்கப் போகிறதில்லையாம். பால்ய விவாகம் கெட்டதாம். யௌ வனத்தில் தேகவ்ளர்ச்சி பெற்றிருக்கும் ஸமயத்தில் அவளுக்கே விவாக யோசனை தோன்றுமாம். அப்பொழுதே கல்யாணம் செய்வதாய்க் கூறுகிருர். நான் என்செய்வேன் ?

**ஸுந்தரி.**—இதென்ன அதிசயம். நமது நாட்டிலுண்டா? கூட்டத் தில் நடந்திருக்கிறதா ? இதென்ன வேட்டையா ? ஆச்சரியமாயிருக் கிறது. நான் ஏதாவது சொல்லிப் பார்க்கலாமா ? கேட்பானுகில் வாய் திறக்கிறேன். அவனிஷ்டப்படி நமது குழந்தையை விவாகமில்லாமல் வைப்பது மகாபாபகரம்.

**மனே.**—அக்கா! அவருடன் தாங்கள் பேசுவதில் பலனில்லை. கல்பாவதியின் விவாக விஷயத்தில் யாருடைய புத்திமதியும் கேட்கப் போகிறதில்லையாம். தங்களைக்கொண்டு சொல்லச் சொன்னுல் என்ன செய்வீர்களென்று கேட்டேன். அக்காளுடைய விரோதம் வந்தாலும் தன் தீர்மானத்திலிருந்து திரும்பாராம்.

**ஸுந்த.**—ஸரி. இப்பொழுது நம்முடைய புத்தியை உபயோகப் படுத்தவேண்டியதே நின்றது. தகப்பனிருக்க ஒளித்துக் கல்யாணம் பண்ணும்படியாயிற்று. உன் மகளுக்குப் புருஷனையாவது தெரிந் தெடுத்திருக்கிருயா? மேல் காரியம் நடத்தலாமே.

**மனே.**—அக்கா! என்னைத் தாங்களும் பரிஹஸிக்கிறீர்கள்போ லும். இந்த வீட்டுக்குத் தாயைப்போலிருக்கும் பாக்யலக்ஷ்மி நீங்க ளல்லவா ? கல்பாவதியைப் பெற்றது என்னுடைய காரியமாயிற்று,

மற்றது உங்களுடைய பொறுப்பல்லவா? என்னைப் பரீக்ஷிக்கவேண்டாம்.

**ஸுந்த.**—அம்மாடி! இன்னும் குழந்தையாயிருக்க ஆசைப்படு கிருய். ஏறக்குறைய 30 வயதாயிற்றே. ஸம்பந்தம் செய்யும் இடம் தெரிந்துகொண்டாயா வென்ருல் உடனே அழுகை வரவேண்டுமோ? உன் புருஷனெரு பச்சைக் குழந்தை. நீயொரு அரைச்சிசு.

**மனே.**—அக்கா! நீங்கள் எதை வேண்டுமானுலும் சொல்லுங்கள். ஊரார் வார்த்தைக்கு என்னை யாளாக்காதபடியும், அவர் காதில் விவாக ஸமாசாரம் எட்டாவண்ணமும் காரியத்தை முடியுங்கள். நான் இங் கேயே யிருக்கிறேன். எல்லாம் உங்களுடையதேயன்ருே?

**ஸுந்த.**—போடியம்மா! நீ ஏதாவது ஒரு சாக்குக் கூறி வர வேண்டும். என்னெருவளால் முடியாது. கூடியவரையில் 12 வைதீக விப்ரர்களைக் கோப்யமாய் வரவழைத்து மணம் முடித்துவிடலாம். மண மகன் எங்கே யிருக்கிருனென்று விசாரிப்பேன்?

**மனே.**—ஓரிடத்தில் சென்று தேடுவானேன். ரவிகேஸரிக்கென்ன குறைவு. அவன் தங்களுடைய வயிற்றில் பிறக்கவில்லையே என்ற வருத்தம் ஒன்றே உங்களுக்கு இருக்கலாம். அழகும், குணமும், கல் வியும், செல்வமும் பெற்றிருக்கும் அவ்விளைஞனுக்கே கொடுங்கள். கல்பாவதி உங்கள் பெண்ணுயிற்று. ரவிகேஸரி உங்கள் மூத்தா ளுடைய பிள்ளை யாயிற்று. அவன் விவாகத்துக்கு ஸம்மதிப்பான். 20-வது வயதில் மனைவியுடன் ஸம்ஸாரம் செய்யவேண்டுமென்று உறுதி வாங்கிக்கொள்ளவேண்டும். அதுவரையில் கல்பாவதியும் ரவிகேஸரி யும் கல்யாணமான வதூவரர்களென்றே காட்டிக்கொள்ளக் கூடாது. அதற்குள் தங்கள் தம்பியின் மனம் திருந்திவிடும்.

**ஸுந்த.**—என்ன அதிசயமோ! எப்படி நடக்குமோ! உம்! பார்க் கிறேன். பையன் பெண்ணைக்கண்டு மண்ணில் விழுந்து மயங்குவான். அது நிச்சயம். ஆனுல் ருதுவானதும் மனைவி தன் அருகிலிருக்க விரும்புவானுகில் என்ன செய்வது? கல்பாவதியின் அதிர்ஷ்ட மெப் படியோ!

**மனே.**—அக்கா! எனக்கொன்றும் தெரியாது. நீங்கள் எது செய் தாலும் எனக்கு ஸம்மதமே. உங்கள் தம்பி என்னைச் சினந்துகொள்ளா

திருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள். அவர் என்னை நீக்குவாராகில் பல்லாரிகுளத்துக்கு இரையாவேன்.

**ஸுந்த.**—போதும் உன் சமத்து. வாயை மூடு. நான் பார்த்துக் கொள்ளுகிறேன். ரவிகேஸரி தாண்டுவானுகில் ஆஸ்தி நாஸ்திதான். குடும்ப ரகஸ்யம் யாருக்குத் தெரியாது? பிதுரார்ஜித ஆஸ்தி லேச மும் கிடையாது. எல்லாம் ஸ்வயார்ஜிதமே. கவலையைவிடு.

**மனோ.**—அக்கா! பிழைத்தேன். 8-நாட்களாய் உருகிப்போனேன். கைக்குழந்தையைக் கூட கவனிக்கவில்லை. அவருக்கும் எனக்கும் ஐந் தாறு தினங்களாய்ப் பேச்சில்லை. என் அழுகையை நிறுத்தினுலன்றித் தாம் பார்ப்பதில்லையாம்.

**ஸுந்த.**—இது ஒரு வைராக்யமா? எழுந்திரு வெகு அழகா யிருக்கிறது. நான் குழந்தைகளிடம் படுத்துக்கொள்கிறேன். நீ மாடிக் குச்சென்று கோபத்தைத் தீர்த்துவா! காலத்திரயம் சொன்ன பல்லி கழுநீர்ப்பானையில் விழுந்தகதை போலிருக்கிறது. எல்லோரையும் பரிஹ ஸிப்பது உங்களிருவருடைய வழக்கமாயிற்றே. நீங்கள் ஸதிபதிகள் சண்டையிட்டுக் கொண்டதை நான் பார்த்துச் சிரிக்கிறேன்.

அக்கா! அக்கா! தூங்கிவிட்டேன். மன்னித்துக்கொள் என்று கூறிக்கொண்டே ஹரேசன் அங்கு வந்தான். ஸுந்தரி கபடகோபத் துடன் “ஹரேசா! மனோன்மணியுடன் பேசி எத்தனை நாட்களாயின்” என்று கர்ஜித்தாள். ஹரேசன் வாய்திறவாமல் ஸுந்தரியின் அரு கில் உட்கார்ந்தான்.

## ஸதிபதிகள்

மனோன்மணி தன்னறையிலுள்ள கட்டிலில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள். ஸுந்தரியின் பாந்தவ்ய மில்லாவிடில் அவள் நித் திரை செய்திருக்கமாட்டாள். ஸ்ரீமதி அருகிலிருந்த ஓர் அழகிய தொட்டிலில் படுத்துக்கொண்டிருந்தாள். சங்கரி ஸ்ரீமதியை எடுத்து விளையாடும் தாதி. அவள் எஜமானியிடம் அதிக பக்ஷமுள்ளவள். குழந்தையிட மிருந்த பிரியம் கூட நமது தலைவிக்கு மறந்ததே! எஜ மான் ஒருவேளை அடித்திருப்பாரா என்று யோசித்தாள்.—எழுந்தாள், தொட்டிலிலிருந்த பாலகியை எழுப்பிப் பால் கொடுக்கலானுள். மனோன்

மணிக்கு நித்ராபங்கம் வாராதபடி வெளிக்கூட்டத்திலுட்கார்ந்து ஸ்ரீமதிக்கு ஸேவைசெய்யலானுள் சங்கரி.

11-மணியடிக்கவே ஹரேசன் அவ்வறைக்குள் நுழைந்தான். பிராணஸகி மெய்மறந்து தூங்குகிருளென்றெண்ணி அவள் பக்கத்தில் உட்கார்ந்தான். மனேன்மணிக்கு விழிப்பு அதிகம். யாரோ தன்னருகில் உட்கார்ந்திருப்பதாய் அறிந்து எழுந்தாள். புருஷனென்று தெரிந்ததும் கீழிறங்கலானுள்.

ஹரேசன் கையைப் பிடித்துக்கொண்டு "மனேன்மணீ! இரவில் அதிகமரியாதை வேண்டாம். நேரமாயிற்று. படுத்துக்கொள். நித்திரையிலிருந்து உன்னை எழுப்பிவிட்டேன். நானும் இவ்விடத்தில் தூங்குகிறேன்" என்ருன்.

நாதா! தங்களுக்கு வேண்டிய படுக்கைகளைச் சங்கரியை எடுத்து வரும்படி கூறுகிறேன். தலையணை, போர்வை, மெத்தை, முதலியவைகளில்லாமல் நீங்கள் படுப்பானேன்? என்று எழுந்து சங்கரியிடமிருந்த குழந்தையை வாங்கிக்கொண்டு அவளை அனுப்பினுள்.

பால்குடித்த ஆநந்தம் குழந்தைக்கு அதிகரித்தது. தந்தையைக் கண்டதும் ஒருமுறை சிரித்தாள். தாயின்மடியில் தலையைவைத்துப் பிதாவை உதைக்கலானுள்.

அப்பாவை உதைக்கலாமா? என்று மனேன்மணி ஸ்ரீமதியின் கால்களைத் தன் இருகைகளால் பிடித்துக் கொண்டாள். தன்நிலைமையைக்கண்டு வருந்துவதுபோல் அழலானுள் பாலிகை. அவள் கிடக்கிருள். நீ உதையம்மா! என்னிடம் வருகிருயா என்று பிதா கையை நீட்டவே ஸ்ரீமதி கை கால்களை யாட்டிக்கொண்டு அவனிடம் போகப் பிரயத்னப்பட்டாள். மனேன்மணி பதியினிடம் குழந்தையைக் கொடுத்துப் புருஷனுக்குப் படுக்கை விரிக்கலானுள்.

சற்றுநேரம் விளையாடினதும் ஸ்ரீமதி தந்தையின் கையில் தூங்கிவிட்டாள். சங்கரியிடம் அவளைக்கொடுத்து அறைக்கதவைத் தாளிட்டுக்கொண்டு படுக்கலானுள். ஹரேசன் அவள்மேல் சாய்ந்துகொண்டிருந்தான்.

நித்திரை வரவில்லையா? என்ருள் மனேன்மணி. கண்ணே! என் மனதில் இன்னதென்றறிய முடியாத ஒரு கவலை உதித்திருக்கிறது.

யோசித்துப் பார்த்தேன். ஒன்றும் விளங்கவில்லை. கல்பாவதி என்னைப் பிரிந்ததால் அவ்விதமிருக்குமோ? அவளை இங்கனுப்பும்படி நாளையக் காலையில் தந்தி கொடுக்கலாமென்றிருக்கிறேன். 20 நாட்களாயின. குழந்தையைப் பார்க்கவேண்டுமென்ற ஆசை அதிகமாயிருக்கிறது. என்று ஹரேசன் கூறினன்.

அக்கா அவளை ஆசையோடு அழைத்துச் சென்றிருக்கிறர். தாங்கள் அதற்குள் அவளை அனுப்பும்படி ஸமாசாரம் கொடுப்பீர்களாகில் மிகவும் கோபிப்பார். குழந்தைகளில்லாதவர்களுக்குச் சிறுவர்களிடம் அதிகப் பிரியமுண்டு. கல்பாவதி அங்கிருப்பதில் அதிக ஸுகமாயிருக்கும். இடம் மாற்றுவதில் அதிகப் பிரியங்கொண்டுள்ள தாங்கள் இவ்விதம் சிந்திக்கலாமா என்றுள் மனேன்மணி.

நீ சொல்வது உண்மையே. அக்காவுக்குக் கல்பாவதியைத் தவிர வேறுமக்களில்லை. அவளுடைய காலம் ஸந்தோஷமாய்க் கழிய சிறுமியை அழைத்துச் சென்றிருக்கிறுள். நான் இப்பொழுது கல்பத்தை வரவழைப்பேனுகில் அவள் சினங்கொள்வாள். மறுபடி நான் வருந்தி யழைத்தாலும் வரமாட்டாள். என் மனதையே நான் ஸரிப்படுத்திக்கொள்ளவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கையில் மனேன்மணி தூங்கிவிட்டாள். ஹரேசனும் நித்திரை செய்யலானன். வெகு நேரம் தூக்கம் வரவில்லை. மனேன்மணீ! மனேன்மணீ! என்று அவளைத் தட்டி எழுப்பினன். கண்விழித்துக்கொண்டாள் மாது. ஸ்வாமீ! ஏன் இன்னமும் தூங்காமலிருக்கிறீர்கள் என்று வினவினுள். "கண்ணே! நித்திரைவரவில்லை. சித்தம் தத்தளிக்கிறது. கல்பாவதியின் ஞாபகமே எனக்கதிகமாயிருக்கிறது. அவளைப் பாராதிருப்பதால் இத்தகைய ஸங்கட முண்டாகிறது போலும். அக்காவுக்குக் கோபம் வாராதபடி நான் ஒரு யுக்தி சொல்லுகிறேன். அதன்படி செய்வாயா?" என்றுன்.

மனேன்மணி புருஷனுடைய முகத்தை நன்றுய்ப் பார்த்தாள். கோபத்தால் நோக்கவில்லை. கிருபையுடனிருந்தது. "என்ன செய்யக் கட்டளையிட்டாலும் முடிக்கத்தயாரா யிருக்கின்றேன்" என்றுள். "நாளையதினம் இரயிலில் உன்னையும் சங்கரியையும் அக்காளிடம் அனுப்ப உத்தேசித்திருக்கிறேன். நீ இரண்டு தினங்கள் தங்கியிரு.

உடனே வரும்படி ஒரு தந்தி கொடுக்கிறேன். கல்பாவதியோடு நீ வந்து சேர். அவளுடைய அழகிய முகம் மறந்தேபோயிற்று. அவள் பேச்சைக்கேட்டு எத்தனையோ நாட்களாயின. கண்மணீ! செய்கிறுயா?" என்றுன் ஹரேசன்.

ஸ்வாமீ! அப்படியே ஆகட்டும். நானும் அவர்கள் வீட்டுக்குப் போனது போலாயிற்று. குழந்தையையும் அழைத்து வரலாம். தங்கள் மனப்படியே செய்கிறேன். நீங்கள் இரண்டு மூன்று தினம் தனித்திருக்கவேண்டுமே! ஸம்மதந்தானு? என்று மனேன்மணி கேட்டாள்.

**ஹரேசன்.**—என்ன செய்கிறது! பொறுத்துக் கொண்டிருக்கிறேன். என் அருமைப் பெண்ணை அன்யர்களின் வீட்டில் எத்தனை நாள் விட்டிருப்பேன். பச்சைக் குழந்தையல்லவா அவள்? ஒருநாள் கூட என்னைவிட்டுப் பிரிந்தவளல்ல.

**மனேன்மணி.**—ஆம் நாதா! என் தந்தை கூட இப்படியே சொல்வார். ஆனல் 12-வது வயதில் என்னை மணந்துகொண்ட மன்னர் அதைக் காதில் போட்டுக்கொள்கிறதில்லை. என் மனைவியை என்னுடன் அனுப்ப உங்கள் தயவெதற்கு என்று கோபிப்பார். ஐயோ! பாவம். கல்பாவதியை அதை உத்தேசித்தே விவாகம் செய்யப் பின் வாங்குகிறீர்களென்றெண்ணுகிறேன்.

**ஹரே.**—கல்பாவதியைப் போல் உன்னை வளர்த்திருப்பார்களா? எனக்கல்லவோ என் குழந்தையின் அருமை தெரியும். உன் தந்தைக்கு அநேக மக்களுண்டு. எல்லோரையும் அருமையாய்ப் பார்க்க முடியுமா? உளருதே!

**மனே.**—பிரபோ! என் தாய்தந்தையர் பெற்ற மக்களைத் தெருவில் விட்டு அலைய வைத்தார்கள். அவர்கள் மூடர்கள். ஒருநாள் தந்தை வீட்டில் அதிகமாய்த் தங்குவேனுகில் கோபத்தோடு கடிதமெழுதுவீர்களே! மறந்தீர்கள் போலும். அதை எண்ணியே கல்பாவதிக்குக் கல்யாணம் வேண்டாமென்று உரைப்பது.

**ஹரே.**—போ! போ! உனக்கொன்றும் தெரியாது. நீ ஒரு ஊமை. இப்பொழுது பேசக் கற்றுக்கொண்டாய். பொருள் ஒருவனுக்கு ஸொந்தமாய் விட்டால் அதைப் பிரிந்திருக்க இசைவானு?

கல்யாணமென்ற பேச்சையே எடுக்காதே என்று தெரிவித்திருக்கி றேனல்லவா?

மனே.—நான் இனி பேசவில்லை. உங்களிஷ்டம் போல் நடக்கி றேன். இதுவரையில் கல்பாவதி விஷயமாய் நமக்குள் சண்டையுண் டானது போதும். தங்கள் மகளை மனம் வந்தவர்களுக்கு மணந்து கொடுங்கள். கன்யாமந்திரம் ஏற்படுத்தி ஸந்யாஸினியாக்குங்கள்.

ஹரே.—எத்தனை கோபம்; உன் மனம் நோக நான் எந்தக் காரி யம் செய்திருக்கிறேன். வெறுப்புடன் பேசுகிருயே! இக்காலத்தில் ஆங் காங்குபுத்திமான்கள் கூடிப்பிரஸங்கம்செய்தும்,அனுஷ்டானத்தில் ஆச ரித்தும் வருகிற ஸம்பிரதாயம் மிகவும் சிலாக்யமாயிருக்கிறது. நானும் அதில் ஒரு மெம்பரானதால் அவ்விதம் நடத்த மனங் கொண்டேன்.

மனே.—நாதா! நான் உங்களோடு வாதம் செய்யவில்லையே! அன்றே மகள் உமக்குச் சொந்தமென்று கூறியிருக்கிறீர்கள். மறுபடி அவளைப் பற்றி நான் பேசுவேனு? தாய் ஊழியக்காரியைப்போல் மக் களை அன்புடன் காப்பாற்றக் கடமைப்பட்டவளே யன்றி விவாக, விவேக காரியாதிகளுக்கெல்லாம் தந்தையின் ஸம்மதமே அவசிய மென்று தாங்கள் கூறவில்லையா? உமக்குச் சொந்தமான வஸ்துவை நீர் யாருக்கு வேண்டுமானுலும் கொடுக்கலாம். ஆனல் ஒருவரம் தர வேண்டுகிறேன். மனமிருந்தால் அளியும்.

ஹரே.—மனேன்மணி! நீ மனவருத்தத்துடன் பேசுகிருய். உன் னைத் திருப்திசெய்யுமாறு நான் முயல்வேனுகில் கல்பாவதியை ஆயுள் வரையில் கஷ்டத்தில் விட்ட பாபியாவேன். என்னவரம் சொல். விவா கத்தைத் தவிர மற்றதெல்லாம் உன்னிஷ்டப்படியே நடப்பேனென்று நினை. கண்ணே! வருத்தப்படாதே சொல்.

மனே.—பிராணேசா! தங்களிஷ்டப்படியே நடக்கிறேன். என் கண்மணி பெரியவளாய்த் தங்களிடம் தன் விவாகத்தைப்பற்றித் தெரி விப்பாளாகில் அவள் கோரும் புருஷன் எவனுகட்டும் அட்டி சொல்லா மல் தாங்கள் அவன் கையில் ஒப்புவிப்பதாய்ப் பிரமாணம் செய்யுங்கள். இதுவே என்னுடைய பிரார்த்தனை.

ஹரே.—கண்ணே! வித்தைகற்று 20-வது வயது வந்திருக்கையில் என் அருமைக் குமாரி புத்திசாலியாகவே இருப்பாள். உத்தமநாயகனைத்

தெரிந்தெடுக்கும் ஸாமர்த்தியம் அவளுக்குண்டாகும். அவள் இஷ்டப் பட்டுக் காட்டும் புருஷனுக்கே நான் மணம் செய்து கொடுக்க ஸம்ம தித்தேன். ஸத்யமாய்ச் சொல்லும் வார்த்தை இது. நம்பு.

**மனே.**—நாதா! பிற்காலத்தில் எக்காரணத்தைக்கொண்டும் தாங் கள் இந்த உறுதியிலிருந்து மாறலாகாது. என்னை நேசித்து மணந்தது மெய்யாகில் என் புத்ரி இஷ்டப்படும் மனிதனுக்கே தாங்கள் மணம் முடிக்கவேண்டும். நான் தங்கள் கட்டளைப்படியே 20-வது வயது வரை அவள் விவாக விஷயத்தைக் குறித்துப் பேசுகிறதில்லை.

**ஹரே.**—மனோன்மணி: என் கண்மணி இனி பிழைத்தாள். உனக்கு வந்த உறுதியை நினைக்க எனக்கு வியப்பாயிருக்கிறது. மூடர் களைப்போல் உளறினையே! புத்திசாலியான உன்னை இருள்சூழ்ந்திருக்கிற தே என்று வருத்தமுற்றேன். என்னுடைய பங்கில் ஈசனிருக்கிருர்.

**மனே.**—என்பக்ஷத்திலும் பகவானிருக்கப் பிரார்த்திக்கிறேன். பிராணநாதா! நித்திரை செய்யும். உடம்புக்குக் கெடுதி வாராமல் பார்த் துக் கொள்ளும். நான் சென்று கல்பாவதியை அழைத்துவருகிறேன். விசாரம் வேண்டாம். பொழுது விடியும் தருணமாயிற்று.

அப்படியே ஆகட்டும். மனோன்மணி! நீயும் தூங்கு என்ருன் ஹரேசன். ஸதிபதிகள் படுத்துறங்கலாயினர்.

---

## ரவிகேஸரி

உயர்தரமான ஸௌந்தர்யம். நான் கற்ற கல்வியெல்லாம் உப யோகப்படுத்தி வர்ணிக்கத் தொடங்கினேன். முடியவில்லை. மகா புத்திசாலி. குணஞ்ஞையான பெண். என் பாக்யோதயத்துக்குச் சமானம் எதுவுமில்லை. இளையதாயாயிருந்தும் என்க்ஷேமத்தையே நாடுகிருள். கல்வியும், செல்வமும், அழகுமுள்ள கல்பாவதி எனக் குக் கிட்டுவாளாகில் வேறு ஒன்றும் தேவையில்லை. ஆனல் ஒரு ஸங்கடமிருக்கிறது. விவாகமான மறுநாளே நான் அமெரிக்காவுக்குப் படிக்கப்போகவேண்டுமென்று தகப்பனர் கட்டளை யிட்டிருக்கிருர். ஐந்தாறு வருஷங்கள் அன்னிய நாட்டிலிருந்து படித்துத் தேறவேண் டும். 20-வது வயது நடக்கும்பொழுது மனைவியைப் பார்க்கலா மென்று அம்மாள் சொல்லுகிருள். நான் வரவும், அவள் பெரிய

பெண்ணுயிருக்கவும் ஸரியாயிருக்கும். தந்தை வார்த்தையைத் தாரக மந்திரமாய் ஏற்றுக்கொண்டேன். நமது சாஸ்திரப்படி கல்யாணம் நடத்தினுலும் தந்தை வராதிருப்பது விந்தையாகும். ஏதோ காரண மில்லாமல் நடவாது. ஸரி. இனி மலைக்குச் செல்கிறேன். எல்லோரும் போய்விட்டார்கள் என்று ஓர் யுவாபுருஷன் யோசித்த வண்ணமாய் தார்வார் நகரத்திலுள்ள ஒரு வீட்டில் நின்றுன்.

தந்தையான ரகுநாதன் மகனை அழைக்க இருவரும் ஓர் வண்டியி லேறி அருகேயிருந்த மகேச்வராலயம் சென்றுர்கள். சிறிய குன்று யிருந்தாலும் ஓர் மலையைப்போல் தோற்றும். ஸுந்தரி சிங்காரித்துக் கொண்டு கல்பாவதியை வெகு விசித்திரமாய் அலங்கரித்து வைதிகர் களை வேதவிதிப்படி மந்திரம் கூறச்சொல்லி ரவிகேஸரியைக் கொண்டு மாங்கல்யம் தரிக்கக் கட்டளையிட்டாள். ஓர் வட்டமான தங்கப் பொட்டே கல்பாவதிக்கு மாங்கல்யமாய்க் கட்டப்பட்டது. ரவிகே ஸரியின் கையிலும், குமாரியின் காத்திலும் ஓரேவிதமான மோதிரங் கள் போடப்பட்டன. எந்தக்காரணத்தைக் கொண்டும் அவர்கள் மோதிரங்களை விரலிலிருந்து வாங்காலாகாதென்று கட்டளை கொடுத் தாள் ஸுந்தரி. வைதீகர்களிடம் கையெழுத்து வாங்கி ஓர் கவரில் போட்டு அரக்கு முத்திரைவைத்து ஓர்கடிதம் பத்திரப் படுத்தப்பட் டது. இவைகளெல்லாம் முடிந்தவுடன் வேதவிதிப்படி பிராமணர் களுக்குப் பூரி, வேஷ்டி, தானங்கள் கொடுக்கப்பட்டன. ரவிகேஸரியின் ஆநந்தத்துக் களவில்லை. மனைவியான கல்பாவதியோடு தாய்தந்தை யரை நமஸ்கரித்தான். ஸுந்தரி சில புத்திவார்த்தைகளை ரவிகே ஸரிக்குத் தெரிவித்தாள்.

"குமாரா! இன்று தர்மசாஸ்திரப்படி உனக்குக் கன்யாதானம் செய்யப்பட்டது. ஆனுல் நீ விவாகமானதை மறந்துவிடு. உன் படிப் பில் மனதைச்செலுத்து. ஹரேசனை மாமனுரென்றெண்ணி உறவுகொண் டாடாதே. நான் உன்னுடைய க்ஷேமத்தைக்கோரி இந்த வார்த்தை களைக் கூறலானேன். உன்கல்வி முடிந்ததும் க்ஷேமமாய்த் திரும்பி வரக் கடவாய். உன் மனைவியும் வித்தையைக் கற்று உன்னைச் சந்தோ ஷப்படுத்த வேண்டுமென்ற ஆவலுடன் எதிர்பார்த்திருப்பாள். அப் பொழுது பலர் முன்னிலையில் உன் கல்யாணதினத்தைக் கொண்டாடு

வோம். உன் தாய் தந்தையிடம் உனக்கன்பிருக்குமாயின் என் வார்த்தைப்படி நடப்பாய்."

ரவிகேஸரி அன்னையை வணங்கி "அம்மணீ! என் தாயை ஓர் ஸகோதரியைப் போல் தாங்கள் ஆதரித்து வந்தீர்கள். அவள் குரூபியென்று என் தந்தை நீக்கித் தங்களை மணந்தகாலத்தில் மூத்த ஸம்ஸாரத்தை என்னோடு வைத்து ஆதரிப்பீர்களாகில் உங்களுடன் ஸம்ஸாரம் செய்ய இசைவேனென்று தாங்கள் ஹடம் பிடித்தீர்கள். அத்துடன் திருப்தியடையாமல் ஸந்ததி பிறக்கப் பிரார்த்தனை செய்தீர்கள். அத்தகைய உத்தமியான உங்களை எத்தனை முறை வணங்கினாலும் போதாது. நான் தங்கள் கட்டளையைச் சிரஸாய் வகிக்கிறேன். ஆசீர்வாதம் செய்தனுப்புங்கள் என்று வணங்கினான்.

மகனைத் தூக்கி முத்தமிட்டு "குழந்தாய்! ஸத்வித்தை கற்று ஸத்புத்திரனாயிருந்து தர்மத்தை விருத்திசெய்யென்று ஆசீர்வதித்தாள்" ஸுந்தரி. ரவிகேஸரி தந்தையினிடம் அனுக்கிரகம் பெற்றுக்கொண்டான்.

கல்பாவதிக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால் தன் புருஷன் ரவிகேஸரி என்று தெரிந்துகொண்டாள். தாயும், அத்தையும் கூடி விவாகம் நடத்தினார்களென்று அறிந்தாள். இதனால் நன்மையோ தீமையோ! நான் நடந்துகொள்ளும் வழி எதுவோ! ஒன்றும் தெரியவில்லை என்று யோசித்தாள். இதைப்பற்றி யாரைக்கேட்பது! அத்தை கோபிப்பாளென்றபயம் ஒருபக்கமும், தந்தை இதைக் கேட்டால் தன் தாயை நொந்து கொள்வாரென்ற வருத்தமும் அவளுக்குண்டாயின. ரவிகேஸரி சீக்கிரத்தில் அமெரிக்காவுக்குப் போகிறதை நினைத்து நடுங்கினாள். ஏழு வருஷமாகும்பொழுது தான் பெரிய பெண்ணாயிருப்பேனென்றும் தன்னை அடையாளம் கண்டு பிடிக்காமல் போனால் என் செய்வதென்றும் கவலையடைந்தாள்.

ஸுந்தரி யம்மாள் தம்பியும், மனோன்மணியும் விவாகத்தில் கலவாததைப்பற்றி இரண்டு துளி கண்ணீர் உதிர்த்தாள். நாகரீகமாயிருப்பதே இழிவென்று கூறினாள். பகவானே! குழந்தைகளை க்ஷேமமாய்க் காப்பாற்று மென்று வேண்டினாள்.

ரகுநாதன் எல்லோரையும் அனுப்பி மனைவியோடும் நாதன தம்

பதிகளுடனும் வீடு சென்ருன். அமெரிக்கா தேசம்போக ரவிகேஸரி தன் ஸாமான்களை ஸித்தப்படுத்திக் கொண்டான். 21 வயதுள்ள புருஷ ஞனதால் கல்பாவதியைப் பலமுறை திருஷ்டித்து வருத்த முற்ருன். ஒருவேளை அவள் பிதா தவறி வேருெருவனுக்கு விவாகம் செய்து விடுவார்களாகில் தன் கெதி என்னவாகும் என்று தயங்கினுன். கல்பா வதியிடம் பேசலாமென்ருல் அவள் சிறுமியாயிற்றே. தான் சொல் லும் வார்த்தைகளால் அவள் மனம் ஸந்துஷ்டி யடையுமோ? இல்லையோ வென்று சிந்தித்தான். நவீன ஆசாரமுள்ள அவள் தந்தை பாலிய விவாகம் தன் ஸம்மதத்துடன் ஆகவில்லையென்ருல் என்ன செய்கிறது என்ற யோசனையே அவனைப் பாதித்தது. கல்யாண தினத் தன்றே கவலைப்படும் புருஷனுண்டா? என்று சிரித்தான். கல்பா வதியோடு தனித்துப்பேசி அவள் அபிப்பிராயத்தைக் கொஞ்சமா வது அறிந்துகொள்ள வேண்டுமென்று நினைத்தான். ஸமயம் பார்த் துக்கொண்டிருந்தான்.

ஸுந்தரியின் ஸந்தோஷத்துக்களவில்லை. தலைபாரம் நீங்கினது போல் களித்தாள். ரகுநாதன் தன்வேலையைப்பார்க்கக் கோர்ட்டுக்குச் சென்ருன். அத்தையருகில் கல்பாவதி உட்கார்ந்து படித்துக்கொண் டிருந்தாள். கவலை நீங்கின ஸுந்தரி கொஞ்சம் தூங்கினுள்.

ரவிகேஸரி தன்தாயைப் பார்க்க வருவதுபோல் உள்ளே வந்தான். கல்பாவதி அவன் வந்ததைக்கண்டு புஸ்தகத்தோடு வேருெரு அறையை நாடிச்சென்ருள். கேஸரியும் அவளைத் தொடர்ந்து நடந்தான். தன் னுடன் பேச வருகிறதாகத் தெரிகிறதென்று கல்பாவதி அறிந்தாள். அவள் நினைத்தவண்ணமே ரவிகேஸரி பேசலானுன்.

கல்பாவதீ! சற்றுமுன் நடந்த வைதீக காரியங்களின் அர்த்தத்தை நீ யறிந்தாயா? என்றதற்குப் பெண்மணி வாய் பேசாமலிருந்தாள்.

**ரவிகேஸரி.**—நீ படித்திருக்கும் புஸ்தகங்களில் யாராவது கேள்வி கேட்டால் பதில் சொல்லவேண்டாமென்று வரைந்திருக்கிறதா? அதை யாவது தெரிவி.

**கல்பாவதீ.**—அத்தான்! மன்னிக்கவேண்டும். வைதீகர் கூறிய மந்திரங்களின் அர்த்தம எனக்குத் தெரியாது. ஆனுல் தாங்கள் எனக்குப் பிராணநாதரானீர்களென்று அறிந்தேன.

**ரவி.**—கல்பா! உனக்கு ஸம்மதந்தானே! உன் தந்தையினிஷ்டத்துக்கு விரோதமாய் முடிந்த இக்காரியம் உனக்குத் துன்பமாயிராதே. அதைமட்டும் சொல்.

**கல்பா.**—அத்தான்! உங்களிலும் மேலானவன் எனக்குக் கிட்டுவானென்ற நம்பிக்கை எனக்கில்லை. தேடித்தேடி யலைந்தாலும் நமது ஜாதிக்குள்ளிருக்கும் பிள்ளைகளுக்குத் தானே என்னைப் பிற்காலத்தில் மணம்செய்து கொடுக்க நினைத்திருக்கிறார். அவருடைய அபிப்பிராயம் எனக்குப் பிடிக்கவில்லை. என் அன்னையும், அத்தையும் எனக்கு அமிருதத்தைக் கொடுத்து உதவினார்கள். பூர்ணஸந்தோஷமடைந்திருக்கிறேன்.

**ரவி.**—(ஆச்சர்யத்துடன்) கல்பா! நான் ஸமுத்திரயானம் செய்வதில் உனக்குத் திருப்திதானே. என் மனக்கவலை நீங்கிற்று. உன் தந்தையைப்பற்றி இனி பயமில்லை. அறியாத பெண்ணாகிய நீ இந்த விவாகத்தை மறந்து விடுவாயோ என்றிருந்தேன். ஈச்வரன் ஒருவரிருக்கிறாரென்பது உண்மையே!

**கல்பா:**—அத்தான்! தாங்கள் க்ஷேமமாய்த் திரும்பி வருங்காலத்தை எதிர்பார்க்கிறேன். ஸுகமாய் சென்று கல்வியில் தேரும். அதிகமான விஷயங்களை அறிய சக்தி எனக்கில்லையாயினும் நமது நாட்டு ஸம்பிரதாயப்படி "கல்யாணமான கணவன் காமினிகளுக்குக் கடவுளாகிறான்" என்பதை அறிந்திருக்கிறேன். எனக்கு ஸ்வாமியான தங்களைவிட்டு வேறொரு கடவுளை இச்சிப்பேனென்று கனவிலும் எண்ணவேண்டாம். தந்தைதொந்திரவு செய்வாராகில் உண்மையைக் கூறி மன்னிப்புக் கேட்கிறேன்.

ரவிகேஸரி கண் மூடாமல் அவளைப் பார்த்து ஆச்சர்யத்துடன் அவள் வலது கையைப்பிடித்து முத்தமிட்டு "கல்பா! என்னைப்போல் பாக்யவான் யாருளர். உன்னை ஒரு நாளும் மறவேன். தர்மதேவதை உன்னை ரக்ஷிக்கட்டும். போய்வருகிறேன். உன் காலத்தை உத்தம வித்தைகளைக் கற்பதில் செலவிடு" என்றான்.

கல்பாவதி தலையை அசைப்பதற்குள் ஸுந்தரி விழித்துக்கொண்டு "கண்ணே! எங்கேசென்றாய்" என்று கூறினாள். ரவிகேஸரியைப் பார்த்து சிரித்துக்கொண்டே அத்தை அறைக்குள் நுழைந்தாள் கல்பாவதி.

சற்று நேரம் ஸ்தம்பித்து நின்முன் கேஸரி. ஆகா! அவனுக்கு உலகவழக்கம் இன்னதென்று தெரிந்திருக்கிறதா? எப்பொழுது இங்கிலீஷ் படித்துக்கொண்டு, வீணை முதலிய வாத்யங்களை வாசித்துக் கொண்டு முள்ள கல்பாவதிக்கு நாட்டு ஸம்பிரதாயங்கள் தெரிந்ததெங்கனம். இனி யோசனையே வேண்டியதில்லை. அவள் தாய் மகா உத்தமி. தந்தையோ பரிசுத்தமனமுள்ளவர். என்தாய் தந்தையரும் மிகநல்லவர்கள். கல்பாவதியை அவர்கள் தர்மவழியில் பாதுகாப்பார்கள். நான் ஸந்தோஷத்துடன் தேசயாத்திரை செல்லுகிறேன் என்று தாயைத்தேடி அறைக்குள் வந்தான்.

ஸுந்தரி மகனைக் கண்டதும் "வாடா கண்ணே! ஓடாதே கல்பகமே! சற்றுநேரம் இருவரையும் நிறுத்திப்பார்த்து ஆநந்தப்படுகிறேன் என்று இருவரையும் இரண்டு கைகளில் பிடித்துக்கொண்டாள்.

## விவாதம்

பல்லாரியிலிருந்து ஹரேசனைத் தமிழ் நாட்டுக்கு மாற்றினார்கள். மனோன்மணி, கல்பாவதி; ஸ்ரீமதிகளைத் தார்வாரில் விட்டுச் சென்முன். அவன் தேகாரோக்யமாயுள்ளப் பிரதேசத்தில் வேலை பார்க்கவேண்டுமென்று மனங்கொண்டான். திருநெல்வேலிக்குப் போகும்படி கட்டளை வந்தது. அது அவனுக்குப் பிடித்திருந்ததால் ஒப்புக்கொண்டான்.

ரகுநாதனுக்குத்திருநெல்வேலியிலிருந்து கடிதமெழுதினன்.ஸுந்தரிக்கு மனோன்மணியையும் குழந்தைகளையும் அத்தனை தூரத்தில் அனுப்ப இஷ்டமில்லை. ஹரேசன் எத்தனைநாள் தனித்திருப்பானென்று யோசனை வரவே ஒருவிதமாய் திருப்திகொண்டு திருநெல்வேலி வருவதாய்த் தன் புருஷனைக்கொண்டு லிகிதமெழுதச் சொன்னுள்.

ஹரேசன் ஸுந்தரியின் வரவை எதிர்பார்த்தான். தாம்பிரபர்ணிநதியோடும் அந்தத் திவ்யப்பிரதேசத்தை யார்தான் கண்டு மகிழார்கள். நதியோரத்தில் வெகு ரஞ்சிதமான பங்களாவை வாடகைக்குப் பேசி வஸித்துவந்தான். ஆங்காங்குள்ள அதிசய கட்டடங்களையும், அழகிய சாஸனங்களையும், புராதன சில்பப் பொருள்களையும்பார்த்துக் காப்பாற்றும்படி அவனுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது.

ஒருமாதம் லீவின்பேரில் ரகுநாதன் எல்லோரையும் அழைத்துக் கொண்டு திருநெல்வேலிக்கு வந்தான். எல்லோரும் ஒன்றுகூடி சில நாள் வஸித்தார்கள். கல்பாவதிக்கு இதற்குள் பதினறு வயது நிறைந்து பதினேழாவது ஆண்டு பிறந்திருந்தது. அவளைப் பார்த்த யாவரும் கல்யாணமாகாதவளென்றே எண்ணினர்கள். அவள் தந்தையாகிய ஹரேசனுக்கே ஒன்றும் தெரியாது. கல்பாவதி ருதுவானதால் அவளுடைய தேகம் யௌவனகாலத்தை வெளியிடலாயிற்று. மந்தஹாஸ முகம் ராஜகளையை வீசிற்று. பிராம்மணப் பெண்ணுயிருந்தும் மணம் செய்து கொடாமலிருக்கிறர்களே என்று ஜனங்கள் முணுமுணுக்கலாயினர். ஆசாரஹீனர்களென்று மெதுவாய்ப் பழிக்கலானர்கள். விசேஷ காலங்களில் மனேன்மணியும், ஸுந்தரியும் நதிக்கு ஸ்நானம் செய்யச் செல்வார்கள். ஸ்த்ரீஜனங்கள் இவர்களைக் கண்டு பரிஹஸிக்கத் தொடங்கினர்கள்.

அக்கா! உலகத்தைப் பார்த்தீர்களா? படாடோபமே அவசியமாயிருக்கிறது. ரகஸ்யத்தில் கல்பாவதிக்கு மணமாயிருக்கிறதென்று நாமறிவோம். உங்கள் தம்பியின் மனதில் எள்ளளவு கூட ஸந்தேகமில்லை. கல்பாவதி கன்யையென்றே அவர் நினைத்திருக்கிறர். அவளைப் பார்த்தவர்களும் அவிவாகிதை என்றே எண்ணுகிறர்கள். அவரெதிரில் நின்று ஒருவனவது உமது மகளுக்கு ஏன் மணமாக வில்லையென்று கேட்கத் துணிகிறனு? அபலைகளான நம்முன் ஜனங்கள் தைரியமாய்ப் பிரஸங்கிக்கிறர்கள். இது அறிவற்ற உலகமென்பதில் ஆக்ஷேபமுண்டா என்றாள் மனேன்மணி.

மனேன்மணி! பேய்பிடித்த மனிதர்களை நாமேன் மதிப்பில் வைக்கவேண்டும். உளரட்டும். இவர்களால் நமக்காகவேண்டியதென்ன? ஈச்வர ஸாக்ஷியாய் நாம் தர்மசாஸ்திரப்படி மணம் முடித்திருக்கிறேம். உன் மகள் கழுத்திலுள்ள தங்கப்பொட்டுக்குள் ஓர் தங்க ரேக்கு இருக்கிறது. தேவநாகரலிபியில் சில வார்த்தைகளை வரைந்து அது அடக்கம் செய்யப்பட்டிருக்கிறது. ஒருகாலத்தில் இவ்வித ஆக்ஷேபம் நமது பந்துக்களில் பிறக்குமென்றே என் கணவர் இவ் ஏற்பாட்டைச் செய்தது. கல்யாணம் செய்து வைத்தவர்களின் கையெழுத்துக்களுள்ள ரிஜிஸ்டர் பத்திரத்தையும் பத்திரப்படுத்தி யிருக்கிறேன். இரண்டு

வருஷமானுல் பையன் வந்துவிடுகிருன். வேண்டியவரையில் பிதற்றட்டும். நீ அஞ்சாதே என்ருள் ஸுந்தரி.

**மனேன்மணி.**—அக்கா! என் ஸகோதர ஸகோதரிகள் என் வீட்டுக்கு வருகிறதில்லே. என்னே ஜாதியிலிருந்து நீக்கி விட்டதாக எல்லோரிடமும் தெரிவித்திருக்கிருர்களாம். தங்களுடன் பிறந்த ஸகோதரர்களும் எங்களுடன் கடிதப்போக்குவரவு செய்வதை நிறுத்தி விட்டார்கள். எது வந்தாலும் பயப்படுகிறதில்லே யென்று தங்கள் தம்பி கூறுகிருர்.

**ஸுந்தரி.**—என்னருமைக் கண்ணே! என்னே எத்தனேயோ பெயர்கள் இந்த விஷயமாய் உன் தம்பியிடம் சொல்லலாகாதா என்று நிந்தித்தார்கள். வந்த கடிதங்களுக்கு அளவில்லே. உன் அத்திம்பேர் எதற்கும் பதிலளிக்கவில்லே. நானும் அவர் மனப்படியே நடக்கட்டும் என்று மௌனமாயிருக்கிறேன். இவர்களின் பகையால் நமது வாழ்வும், நேசமும் தாழ்வடையுமா?

**மனே.**—அக்கா! கல்பாவதியின் ஸ்வபாவம் தந்தையைப்போலிருக்குமென்றே நினேத்திருந்தேன். என் ஸந்தேகத்தை நிவர்த்தி செய்தாள் குழந்தை. தனக்கு ரவிகேஸரி புருஷனுகக் கிடைத்ததைப் பற்றி அதிக ஸந்தோஷப்படுகிருளென்று தெரிந்துகொண்டேன்.

**ஸுந்த.**—மனேன்மணீ! ஹரேசனுக்கு ஒன்றுமே தெரியாதா? கல்பாவதிகூட சொல்லவில்லேயா? அவளுடைய பொறுமையை என்னென்று சொல்வேன்!

**மனே.**—அக்கா! உங்கள் தம்பிக்குத் தெரிந்தால் எனக்குக் கஷ்டமாகுமென்று அறிந்திருக்கிருள். முன்போல் பிதாவுடன் பேசுகிறதில்லே. கேட்டவரையில் பதில் சொல்வதே விரதமாய்க் கொண்டிருக்கிருள். அவரும் பெண்ணின் மனதில் ஏதோ வருத்தமிருப்பதாய்க் கருதியிருக்கிருர்.

**ஸுந்த.**—ஹரேசன் மகள் விஷயமாய் மனதில் யோசிப்பது மெய்தானு? நீ எங்கன மறிந்தாய்?

**மனே.**—அடிக்கடி என்னேக் கேட்கிருர். கல்பாவதிக்கு ஏதோ குறையிருக்கிறதாகத் தெரிகிறது. நீ கேட்டுத் தெரிந்துகொண்டு எனக்

குச் சொல்லென்று தொந்திரவு செய்கிறார். அதனால் கூறினேன்.

ஸுந்த.—நீ பதில் சொன்னதென்ன?

மனே.—நானு அவர் வார்த்தைக்கு இடம் கொடுக்கப்பட்டவள். உம்முடைய குமாரியின் கவலையை நீரே கேட்டுத் தெரிந்துகொள்ளு மென்றேன். ஆதியில் அவரே பார்த்துக்கொள்வதாய் ஒப்புக்கொண்டா ரல்லவா? நான் வருந்தும் பொழுது ஜாலமென்றும், ஸாஹஸமென் றும் ஹேளனம் செய்தார். தற்காலம் அவர் மனதிலுள்ள சிந்தையை யார் விவரிப்பார்கள்.

ஸுந்த.—கெட்டிக்காரப் பெண்ணுயிருந்ததாலல்லவா உன் மனே பீஷ்டம் நிறைவேறிற்று. ஹரேசனுடைய நாகரீக ஆசாரம், நவீன ஸம்பிரதாயம், சீர்திருத்தங்களெல்லாம் என்னமாய் முடிகின்றன பார்ப்போம். நீ ஒரு வேடிக்கை செய்கிறாயா? யுக்தி சொல்லுகிறேன்.

மனே.—அக்கா! அதற்கென்ன தடை! அவருக்கு இப்பொழு தாவது புத்தி கற்பிக்கவேண்டும். இல்லையேல் ஸ்ரீமதிக்காக நான் இது முதல் அழத்தொடங்குவேன். நீங்கள் "குங்கும கேஸரி"யைத் தேட நேரிடும். சீக்கிரம் கூறும் ஆலோசனையை.

ஸுந்த.—போடி! பைத்யக்காரி! எவனே ஒரு ஸரி வருவான். அதற்கென்ன கவலை. உன்னை மற்றொருமுறை பெண்ணைப்பற்றி கேட்பானுகில் விவாக மாகாததால் கல்பாவதி வியஸனிக்கிறாளென்று கூறு. அவளுடைய ஸ்நேகிதிகளெல்லாம் புத்திரவதிகளாயிருக்கத் தான் கன்னிகழியாதிருக்கிறது அவமானமல்லவா என்று வருந்துகிறா ளென்று தெரிவி. அவன் பெண்ணைக்கேட்பான். அவள் பதில் சொல் வதைப் பார்க்கலாம்.

அக்கா! அப்படியே ஆகட்டும். வாருங்கள் நேரமாயிற்று. வீட்டுக் குச் செல்வோமென்று நடந்தாள் மங்கை. ஸுந்தரியும் அவளும் பற் பல விஷயங்களைக் குறித்துப் பேசிக்கொண்டே வீடு சேர்ந்தார்கள். ஹரேசனும் ரகுநாதனும் தோட்டத்திலுள்ள கல்பெஞ்சியிலுட்கார்ந்து ஸம்பாஷித்துக்கொண்டிருந்தனர். ஸுந்தரியைக்கண்டதும் ரகுநாதன் ஓர் கடிதத்தைக் காட்டி "உன் மகனுக்கு முதல் தரமாய்ப் பரீக்ஷை தேறிற்றென்று தந்திவந்திருக்கிறது. மூன்று வருஷத்தில் ஐந்து வருஷ படிப்பைக் கற்றதால் அங்குள்ளவித்பன்னர்கள் மகிழ்ந்துவித்யா

பட்டமும் வெகுமதிப் பதக்கமும் அளித்தார்களாம். கடிதம் வருமென்று தெரிவித்திருக்கிறுன்." என்று கூறினுன்.

என் அருமைக் குழந்தைக்கு திருஷ்டி வரப்போகிறது. வெளியில் சொல்ல வேண்டாம். சீக்கிரத்தில் ஓர் அழகிய பெண்ணை நிச்சயித்து மணம் முடிக்க முயலுங்கள் என்ருள் ஸுந்தரி.

அக்கா ! பெண் எங்கே தேடப்போகிருய் ! கல்பாவதி அழகில்லையா ? அவளிருக்க வேறெரு இடத்தில் நீ மகனுக்கு மணம் செய்விப்பதாவது என்று ஹரேசன் கூறினுன்.

ருதுவான பெண்களையா ? நன்று, நன்று. அவன் ஒருநாளும் ஒப்புக்கொள்ளான். மேலும் உன்பெண்ணுக்கு 20-வது வயதிலல்லவோ மணம் செய்யப் போகிருய். அதுவரையில் என் பிள்ளை தனியேயிருப்பானு ! பெரியவர்களின் ஸம்பந்தம் எளியோர்களாகிய எங்களுக்கு வேண்டாமப்பா என்ருள் ஸுந்தரி.

அக்கா ! பரிஹஸிக்கிருயா ? நியாயமான வயதில் கல்பாவதிக்கு விவாகம் செய்யவில்லையென்று உன்னுடைய ஆக்ஷேபம். உன்னை எளியவளென்று நான் கூறினதெப்பொழுது ? என்று தம்பியுரைத்தான்.

வெகு அழகுதான்! நான்கு வருஷங்களுக்கு முன் பன்முறை "ரவிகேஸரி"க்கு உன் மகளைக் கொடுக்கும்படி கடிதமூலமாயும் நேரிலும் கேட்டேன். அப்பொழுது அக்காளென்ற மரியாதையைக் கூட மறந்து முடியாதென்ருயே ! இப்பொழுது மட்டும் நான் ஒப்புக்கொள்வேனு என்று ஸுந்தரி மொழிந்தாள்.

ஹரேசன் பேசவில்லை. ரகுநாதன் ஏதோ காரியமாய் எழுந்து செல்வதுபோல் அவ்விடத்தை விட்டகன்ருன். ஸுந்தரி உள்ளே சென்ருள். மனேன்மணி மட்டும் ஹரேசனெதிரில் நின்றிருந்தாள். ஹரேசன் ஆகா ! உலகமே. உன்னை நன்கறிந்தவர் யார் ? என்று கூறினுன். மனைவியைப் பார்த்து இவர்கள் பிள்ளையில்லாவிட்டால் உலகத்தில் வேறு வரன்கள் கிடையார்களா ? என்ருன். ஆம் நாதா ! தேடிப்பாரும். திருவருளின் கிருபையால் தங்களுக்கு நன்மை கிடைக்கும் என்று மனேன்மணி சொல்ல ஹரேசன் அவள் முகத்தை உற்றுப் பார்த்து நீயும் பரிஹஸிக்கிருயா ? என்ருன்.

## மனக்கவலை

அப்பாவுக்குப் பதிலுரைக்க வேண்டுமே! உண்மையைக் கூறினால் அவர் என்ன சொல்வாரோ! என் கபடமற்ற அன்னையைக் கடிந்தால் என் செய்வேன். அத்தையின்மேலும் கோபமாயிருக்கிறார். இது ஒரு காலமா? உலகத்தார் பழிப்பைக்கூட நான் சிந்திக்கவில்லை. காலேஜில் சேர்ந்து படிக்கும்படி கூறுகிறார் தந்தை. அம்மாவுக்கு ஸம்மதமில்லை. படித்துப் பாஸ் செய்வது எதற்காக? உத்தியோகமும், பெருமையும் கிடைக்கவே என்று உரைக்கிறாள் அத்தை. நான் யார் வார்த்தையைக் கேட்பேன்? மாமியார் முறையாயிருக்கிறாள் அத்தை. மாமனார் ஒருவார்த்தையும் கூறுகிறதில்லை. படிக்கச் சென்ற பர்த்தா புகழ்ச்சியுடன் தேரியிருக்கிறார். ஆனால் சீக்கிரத்தில் திரும்பிவர முடியாதென்றும் அனேக நாடுகளைச் சுற்றிப்பார்த்து வருவதாயும் அவருடைய தந்தைக்குக் கடிதமெழுதி யிருக்கிறார். நமது ஜாதியாசாரப்படி புருஷனுடைய வார்த்தையை நான் கேட்டு நடக்கவேண்டும். அவருடைய ஸம்மதமில்லாமல் எந்தக்காரியமும் நான் செய்யலாகாது. அவரைக் கேட்கலாமென்றால் நான் கடிதமெழுதுவது எங்ஙனம். மாலையிட்ட தினமே மன்னர் என்னைப் பிரிந்தார். அவர் என்னை மறந்தாரோ! இல்லை இல்லை. அத்தை கூறியபடி நடக்கிறார். என் தந்தைக்கு இந்த விஷயம் சில வருஷங்கள் தெரியாதிருக்க வேண்டுமென்று அத்தையின் கட்டளையாயிருக்கிறது.

வீட்டுப் படிப்புப் போதாதாம். உயர்தரக்கல்வி கற்கச் சென்னைக்கு அனுப்ப உத்தேசித்திருக்கிறார். அங்கே சில ஸ்திரீகள் மேல் பரீக்ஷைக்குப் படிப்பதாயும், அவர்களைப்போல் நானும் கல்வி யபிவிருத்தியை நாடவேண்டுமென்றும் தெரிவித்தார். உபய ஸங்கடத்தில் சிக்கிக்கொண்டேன். நான் பெண்ணாய்ப் பிறந்ததும் போதும், பெற்ற தாய் தந்தையர் என்னைப்பற்றி வருந்துவதும் போதும். எனக்கொன்றும் தோன்றவில்லையென்று கல்பாவதி கையிலிருந்த புஸ்தகத்தை மேஜையின்மேல் வீசி யெறிந்து ஓர் கட்டிலில் படுத்துக்கொண்டாள். யோசனை செய்துகொண்டிருக்கையில் நித்திரை வந்தது.

இரண்டாம் வேளை ஆகாரமுண்ண வரவில்லையே என்று மனோன்

மணி அவளை அழைக்க வந்தாள். கல்பாவதி படுத்திருப்பதைப் பார்த்துப் பகலில் அவள் தூங்கமாட்டாளே என்று உடம்பைத் தொட்டாள். ஜ்வரம் வெகு வேகமாய் அடிப்பதுபோல் தெரிந்தது. கைகால் நடுங்க கல்பா! கல்பா! என்று அழைத்தாள். பேச்சில்லை. மூச்சுமட்டும் விகார ஓசையுடன் கேட்டது. மனோன்மணி பயந்து ஸுந்தரியை அழைத்து வரும்படி ஆளை அனுப்பினுள். ஸுந்தரியும் வந்தாள். ஸமாசாரம் தெரிந்ததும் பயந்து ஹரேசனுக்கு வர்த்தமான மனுப்பினுள். ஹரேசன் காரணம் தெரியாமல் ஓடிவந்தான். கல்பாவதியின் நிலைமையைக் கண்டு அஞ்சினுன். மேல் நடக்கவேண்டியதென்ன? பெரியபெரிய டாக்டர்களை வரவழைக்கலானுன்.

வைத்தியர்கள் ஸரியான அபிப்பிராயம் கொடுக்கவில்லை. 27 நாள் ஜ்வரமென்முன் ஒருவன். வாயுவின் ஸம்பந்தம் அதிகமானதால் உஷ்ண ஜ்வரமென்முன் மற்றொருவன். பித்த விகாரமென்முன் இன்னொருவன். பெரிய டாக்டரென்று புகழ்பெற்ற ஒரு பிரபு சற்று பரீக்ஷித்து "இந்த ஊரில் வைத்துக்கொண்டிருந்தால் அபாயம், நரம்பு வியாதி. சிக்கிரம் சென்னைக்கு எடுத்துச் சென்று ஐரோப்பிய டாக்டர்களிடம் காட்டுங்கள், ஸுகமாகும்." என்று கூறினுன். ஆனுல் யாரும் மருந்து கொடுக்கவில்லை. கல்பாவதிக்குத் தன் ஞாபகமே இல்லை.

ஸுந்தரி தனக்குத் தெரிந்த நாட்டு வைத்யங்களைச் செய்தாள். மூச்சு நில்லாமலிருந்ததே பெரும்பாக்ய மென்று எல்லோரும் எண்ண வேண்டியதாயிற்று. ஹரேசனுடைய துக்கத்தை அளவிடமுடியாது. ஸுகுமார ஸுந்தரியான கல்பாவதியின் அவஸ்தையைப் பார்த்து மனோன்மணி திடுக்கிட்டாள். சித்தப்பிரமை கொண்டவள் போல் விழித்தாள். ஆகா! கல்பாவதி! உன்னுடைய ஆசையை ஒழித்து விடும் காலம் வந்ததா? என்முள். ரகுநாதன் எல்லோருடைய விசாரத்தையும் ஸமாதான வார்த்தைகளாலடக்கி நான் சென்னைக்குச் சென்று வஸிக்க ஸௌகர்யமான பங்களாவைப் பார்த்து வருகிறேனென்று கூறிப் புறப்பட்டான். ஸமுத்திரக்கரையோரத்திலமைந்துள்ள அழகிய பங்களா ஒன்றை மாதம் ஒன்றுக்கு 100ரூ. வாடகை பேசித் திட்டம் செய்து எல்லோரையும் வரும்படி தந்தி கொடுத்தான்.

கல்பாவதி கண் திறக்கவே இல்லை. உயிர்போகா வண்ணம் வாயை

ஒரு ஆயுதத்தால் திறந்து பாலை ஊற்றிவந்தார்கள். முதல் வகுப்பு வண்டியில் அவளைப் படுக்கவைத்து மற்றவர்கள் இரண்டாவது வகுப்பு வண்டியிலேறிக் கொண்டார்கள். ஸுந்தரி கல்பாவதியின் அருகிலிருந்து கண்ணீரைத் துடைத்துக்கொண்டே "என் கல்பகம்! கண் திறவடீ! என் கண்ணே! கவலையைத் தீரடீ," என்று கெஞ்சலானுள்.

மதராஸ் வந்தவுடன் நோயாளியின் தேகம் நோகாதபடி ஓர் ஸௌகர்யமான வண்டியில் வைத்துப் பங்களாவுக்கு எடுத்துச்சென்றுர்கள். அடிக்கடி டாக்டர்கள் வரவும் போகவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஹரேசன் மூன்று மாதத்துக்கு லீவ் எழுதினுன். கொடுக்க முடியாதென்று பதில் வரவே வேலையை ராஜிநாமா கொடுத்துவிட்டான். யாருக்காகப் பணம் ஸம்பாதிக்கவேண்டும்? என் அருமைக்கல்பாவதியைவிட்டு அரை நாழிகை பிரிந்திருக்க முடியாது என்று தீர்மானித்துக் கொண்டான். பத்துநாட்களாகியும் கல்பாவதியின் நோய் தீரவில்லை. ஜ்வரம் ஒரே விதமாயிருந்தது. பிரஞ்ஞை வரவில்லை. குணுவகுணங்களை வைத்தியர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. தேய்க்கும் மருந்துகளும், ஒத்தடம்போடும் தூள்களும், குடிக்கும் ஔஷதங்களும் அவளைச்சுற்றி அலங்கரித்தன. ஹரேசன் தலையில் கைவைத்த வண்ணமாய் உட்கார்ந்திருந்தான். ஸுந்தரி கல்பாவதியைப் பார்த்துப் பார்த்து அழுவாள். கல்பாவதியினிடம் அவள் தாய் உட்காரக் கூடாதென்று ரகுநாதனும் ஹரேசனும் கட்டளையிட்டார்கள். ஏனென்றுல் அவள் ஏழு மாத கர்ப்பிணியாயிருந்தாள். மகளின் பரிதாப காக்ஷியைக் கண்டால் அவள் சிந்தை நடுங்கி பிரஸவிப்பாளென்றும் வயிற்றிலுள்ள சிசுவும் தாயும் தேறுவது கஷ்டமென்றும் வைத்யர்கள் கூறினுர்கள்.

ஹா மகளே! கல்பாவதி! நீ இறக்கும் முன் நான் சாகலாகாதா? இதற்கோ உன்னைப் பெற்றேன். 17-வயதுள்ள பெண்ணுய் வளர்ந்து எல்லோரிடமும் நற்பெயர் வாங்கினுயே என்று மனோன்மணி துக்கிப்பாள். தன் கணவன் கல்பாவதியினருகில் இல்லாதிருக்கும் ஸமயம் பார்த்து அவளிடம் ஓடிவந்து கட்டிக்கொண்டு கதறுவாள். அக்கா! அக்கா! தெய்வம் என்னை முதலில் கொண்டுபோகாதா? என் ஜென்மம் நீங்காதா! பாபியான எனக்குக் கல்பாவதி மகளாய்ப் பிறந்தாளே! வேறு யாருக்காவது அவள் குமாரியாய் ஜெனித்திருக்கலாகாதா என்று

ஸுந்தரியின் மேல் சாய்வாள். ஸுந்தரி யாருக்கென்று ஸமாதானம் சொல்வாள்.

கோவில் குளங்களுக்கு நடந்த அபிஷேக அர்ச்சனைகளுக்களவில்லை. வைதீகர்கள் ஸூர்ய நமஸ்கார ஜெபம், நவக்கிரக பூஜை, சனீச்வர ஸ்தோத்திரங்களை இடைவிடாமல் செய்தனர். எல்லோரும் கல்பாவதியின் நோயைப்பற்றியே வருந்தினுர்கள்.

இரவு பகலாய் ஹரேசன் மகளை அருகிலிருந்து பாதுகாத்தான். 11-ம் நாளிரவில் எல்லோரும் அவரவர்களின் படுக்கையில் படுத்துக்கொண்டு தங்கள் குழந்தை கல்பாவதிக்கு ஸுகமுண்டாகவேண்டுமென்று ஈசனைப் பிரார்த்தித்தார்கள். மனேன்மணிக்கு உடம்பு ஸுகமில்லாதிருந்தது. ஸுந்தரியிடம் சொல்லலாமென்றுநினைத்தாள். ஏதோ ஒரு நினைவுகொண்டு வேண்டாமென்றிருந்தாள். பிரஸவிக்கும் தருணம் கிட்டிற்றென்று மனேன்மணிக்குத் தோன்றவே சங்கரியின் மூலமாய் ஸுந்தரியை அழைத்து வரும்படி கட்டளையிட்டாள். ஸுந்தரி பரபரப்புடன் எழுந்து இதுவும் ஒரு விதியா? ஏழு மாதத்தில் பிள்ளை பெற்றுல் குழந்தையும், தாயும் க்ஷேமமா யிருப்பார்களா? என்று வருத்தமுற்று மருத்துவ ஸ்திரீக்குச் சொல்லி யனுப்பினுள். மனேன்மணியின் தேகம் அபாய ஸ்திதியைக் காட்டிற்று. ஹரேசனிடம் சொன்னுல் வருந்துவான். கல்பாவதியின் நோய் அவனை ஆகுதிகொள்ளும்போலிருந்தது. மனேன்மணியின் நிலைமையையும் கேட்பானுகில் உயிரையே விடுவானென்ற பயம் ஸுந்தரிக்குண்டாயிற்று.

இரவு முழுதும் மனேன்மணி கண்ணீர் பெருக ஈசனை ஸ்தோத்திரம் செய்துகொண்டே தன் நோயைப் பொறுத்துக் கொண்டாள். குழந்தை உயிருடனிருந்தால் பிரஸவமாயிருக்கும். இறந்திருக்குமென்று மருத்துவ ஸ்திரீ கூறினுள்.

இந்த வார்த்தையைக் கேட்டதும் ஸுந்தரி பொத்தென்று கீழே விழுந்தாள். சிவனே! சிவனே! இந்தக் கஷ்டங்களைப் பார்க்கவா நான் பிறந்தேன். என் கல்பகத்தை நினைத்தழுவேனு? என் மனேன்மணியான மங்கையர்க்கரசியை எண்ணி வருந்துவேனு? அநாதையைப் போல் பார்ப்பாரற்றுத் திரியும் ஸ்ரீமதியைப் பார்த்துத் துக்கிப்பேனு?

பாதேசியைப்போல் கன்னத்தில் கையை வைத்து யோசித்த வண்ணமாய் மகளை நினைத்துருகும் என் ஸகோதரனுடைய நிலைமையைப் பார்த்து வியஸனிப்பேனு? ஈசா! ஈசா! எல்லோருடைய உயிர்களும் இருக்கையில் என்னைக் கொண்டுபோக உம்மை வேண்டுகிறேனென்று பரிதபித்தாள்.

---

## மரணம்

இரண்டு மூன்று நாட்களாய் மனம் ஸமாதான மில்லாமல் தத்தளிக்கிறது. "இறப்பது நலம்," "இருப்பது துன்பம்" என்று யாரோ சொல்வதுபோல் கேட்கிறது. உத்ஸாகத்தை உறவுடன் அழைத்தாலும் வரக்காணும். இத்துடன் கடல் யாத்திரை முடிந்தது. பரதக்கண்டத்தையும் கண்டேன். அதிலுள்ள வடநாட்டுக் காக்ஷியைக் காணலாமென்று ஆசையிருந்தது. யாது காரணத்தாலோ அதுவும் மாறிற்று. கடிதமெழுதாமல் திடீரென்று பெற்றோர்களைக் காணவேண்டுமென்றும், அவர்களை ஆச்சர்யப்படுத்தலாமென்றும் எண்ணியிருந்தேன். அந்த எண்ணமும் விண்ணகம் சேர்ந்தது. என் புத்தியே ஸ்திரமில்லாமலிருக்கிறது. இப்பொழுது எங்கே போகலாம். இன்றிரவெல்லாம் இரயிலிலேயே கழிக்கட்டுமா? அடுத்தடுத்துப் பிரயாணம் செய்வதிலும் ஸுகமில்லை. பொம்பாய் வந்துவிட்டேன். தார்வாருக்கு இன்றே புறப்படலாமா? என்று ரவிகேஸரி சிந்தையுடன் யோசித்தான்.

இதென்ன கவலை! நான் எதற்காக வருந்துகிறேனென்பது எனக்கே தெரியாது! இரவை ஏதாவதொரு ஹோட்டலில் கழிக்கிறேன். பொழுது விடிந்ததும் ஊர் செல்லவேண்டும் என்று தீர்மானித்து ஒரு ஹோட்டலில் தன் பெட்டி படுக்கைகளோடு தங்கினன். ஹோட்டல்காரன் வேண்டிய உணவுகளை உதவி அதிகமான பொருள்களைப் பெற்றுக் கொண்டான். ரவிகேஸரி ஓர் அறையில் படுத்துக்கொண்டான்.

பொம்பாயில் சில வருஷங்களுக்கு முன் பிளேக்நோய் அகோரமாய்ப் பரவி அனேகரைக் கொன்றது. ரவிகேஸரி வந்தபொழுது ஊரில் ஜனங்களைக் காண்பதே அபுரூபமாயிற்று. நோய்க்குப் பயந்து

பிரபுக்களும், ஸுகவாஸிகளும் அன்ய இடங்களுக்கு வஸிக்கச் சென்ருர்கள். ஏழைகளே அந்நகரில் நோயுடன் உறவாடினுர்கள். ஒரு நாள் முழுவதும் ஜனங்களை ஓயாமல் எமனுலகத்துக்கு அழைத்துச்சென்று கொண்டிருந்த அக்கொடிய வியாதி அன்று வந்த ரவிகேஸரியையும் தன் வசமாக்கிக் கொள்ளத் தொடங்கிற்று. படுத்தவுடன் தலை சுழன்றது போல் அவனுக்குத் தோன்றிற்று. வாந்தி எடுத்தான். பிறகு ஸ்மரணை யில்லை.

வாந்தி எடுத்த ஓசை ஹோட்டலிலிருந்தவர்கள் காதில் பட்டது. ஓடி வந்தான் அன்னமிடும் தொழிலாளி. ரக்தவாந்தி எடுத்திருக்கும் மனிதனைக் கண்டு பயந்து அங்குள்ளவர்களிடம் தெரிவித்தான். அந்த ஊர் வழக்கப்படி ஒரு வண்டி வந்தது. அதில் ரவிகேஸரியின் தேகத்தைப் படுக்கவைத்து வண்டிக்காரனிடம் 2ரூபாயைக் கொடுத்து ஏதோ குசு குசு வென்று பேசி அனுப்பிவிட்டான் ஹோட்டல்காரன். அநாதைப் பிணத்தை யார் ஏற்றுக் கொள்வார்கள்? ஸ்மசானமண்டபத்தில் படுக்கவைத்துச் சென்ருன் வண்டிக்காரன்.

அறையைச் சுத்தம் செய்து மூட்டை பெட்டிகளைப் பிரித்துப் பார்த்துப் பணமில்லாதிருக்கவே ரவிகேஸரியைத் திட்டி அங்குக் கிடந்துள்ள புஸ்தகத்தை மனம் வந்தபடி வீசி எறிந்தான் ஹோட்டலதிகாரி. படுக்கை, பாய்களை அங்குள்ளவர்கள் பங்கிட்டுக் கொண்டார்கள்.

பிளேக் கண்டால் துணிகளைச் சுத்தம் செய்ய இஞ்சினில் கொடுப்பது ஆதியில் வழக்கமாயிருந்தது. கியாம்புகள் ஏழை எளியவர்களுக்கு எங்கே பார்த்தாலும் ஏற்பட்டிருந்தன. கவர்ன்மெண்டார் ஏராளமான பொருள் செலவு செய்து வைத்யர்களையும் மருந்துகளையும் உதவினுர்கள். ஒரு விதத்திலும் அந்நோய் அடங்கும் வழியைக் காணும். எத்தனையோ மனிதர்கள் மேற்படி நோயால் மாண்டிருக்கிருர்கள். சொந்தக்காரர்கள் தங்கள் பிணமென்று கூட நினையாமல் தோட்டத்திலெறிந்து செல்வார்கள். பிணத்தைத்தூக்கிச் செல்பவர் யார். கொளுத்துவதற்கு விறகு, முட்டைகள் கிடைப்பதே அரிதாயிருந்தன. எத்தனையோ சவங்கள் மண்டபத்திலும், மதில் சுவர் ஓரங்களிலும், சாக்கடை, சந்து, முடுக்குகளிலும் கிடந்து நாறிக்கொண்டிருந்தன.

போலீஸார் அங்கஙகே கிடக்கும் சவங்களைக்கண்டு பிடித்து ஸ்மசானத் துக்கனுப்புவார்கள். ரவிகேஸரியை அந்த ஊரில் யாரும் அறிந்த தில்லை. அவனை ஒரு அநாதையைப்போல் எறிந்து வரச்சொன்னுன் காசாசைப்பிடித்த கிளப்புக்காரன். அன்ய தேசத்தில் யாதொரு நோயுமில்லாமல் தன் காலமெல்லாம் ஸந்தோஷத்தில் கழித்த கட்டழகன் தன் நாடு வந்ததும் உயிரை விடும்படி நேர்ந்தது. அவனுடைய தாய் தந்தையர் இதைக் கேட்டால் ஸகிப்பார்களா? கல்பாவதியின் கெதியென்ன? என்றையதினம் ரவிகேஸரி பொம்பாய்க்கு வந்தானே அன்றே கல்பாவதியும் ஜ்வரத்தால் படுத்தாள். எந்த இரவில் அவன் மண்டபத்தில் எறியப்பட்டானே அதே இரவில் அவளைச் சுற்றி எல்லோரும் அழுதார்கள். தெய்வத்தின் சித்தத்தை யார் அறிவது? காரணம் தெரியாமல் ஸுகதுக்கங்களில் நாம் ஸந்தோஷம், துயரங்களைக் காட்டுகிறேம். ரவிகேஸரி இறந்தானென்று தெரிந்திருக்குமாகில் கல்பாவதிக்கு வைத்யம், ஔஷதங்கள் கிடைத்திருக்குமா? அவள் விதவையென்ற நாமத்தை ஏற்று உலகத்தாரிடம் சுபங்களில் கலவாமல் தனித்திருக்கவேண்டுமே! பிராம்மண வகுப்பில் வைதவ்யமடைந்தவர்களுக்கு ஏற்பட்டுள்ள சட்ட விதிகளை அளவிடப்போமா?

புருஷனிறந்தானென்று தெரிந்தால் ஏற்கெனவே பட்டம் பெற்றுள்ள விதவைகள் கூடி அமங்களப் பாடல்களைப் பாடத்தொடங்குவார்கள். ருதுவானதும் முண்டனம் செய்து கொள்ளவேண்டும். ஒருவேளை அன்னத்துடன் காலம் கழியுமாறு ஏற்பாடு செய்வார்கள். விதவை யார் எதிரிலும் வரக்கூடாது. ஒருவர் ஒரு காரியமாய்ச் சென்றுல் அவர்களெதிரில் கைம்பெண் வருவாளாகில் சீ! பிரஷ்டை முண்டை எதிர்ப்பட்டாள். அதனுலல்லவா காரியம் கெட்டது. தலையில் பட்டது. சனி பிடித்துவிட்டது என்பார்கள். இளங்குழந்தைகளையாவது ஸுமங்கலிகளையாவது புதிய விதவைத் தொடலாகாது. வாழும் சிறுமிகளின் முன் நின்று பேசக்கூடாது. அப்பாடா எத்தனைவித நிர்ப்பந்தம்.

அம்பட்டனிடம் இளம் பிராயத்தில் பதியிழந்த பெண்கள் உட்கார்ந்து முண்டனம் செய்துகொள்வது முதல் விதி. வைதீகனிடம் புராணம் கேட்டு அவனுக்கு ஆசார உபசாராதிகளைச் செய்து விரதம்,

நோன்பு, உபவாஸங்களை ஏற்பது இரண்டாவது விதி. வீட்டிலுள்ள சுக ஸந்தோஷோத்ஸவங்களில் கலவாதிருக்கக் கட்டளையிடுவது மூன்ருவது விதி. பாய், தலையணை, நல்ல ஆகாரம், ஸுகந்த திரவியங்கள், ஸுவாஸனு புஷ்பங்களைத் தொடலாகாதென்பது நான்காம் விதி. இவ்விதமே அனேக விதிகள் விதந்துக்களுக்கு ஹிந்துகுடும்பத்தார் விதித்துளர்.

குட்டிச் சுவர்போல் 50-வயது நிறைந்துள்ள கிழட்டு ஸுமங்கலிகளுக்கு வேளாவேலைகளில் பசியும், தாகமும், ஸுகமும் வேண்டுமாம். பச்சைக் குழந்தையில் பதியையிழந்த பாலிகைகளுக்கு உபவாஸமும், துக்கமும் அவசியமாயிருக்க வேண்டுமாம். மொட்டைக்கட்டைக்கு எத்தனை வாழ்வெனறு பெற்ற தாய் முதல் ஸம்பந்தமற்றவர்கள் வரையில் வைவார்கள். ஏன் திட்டுகிறீர்களென்று கேட்கலாகாது. கரிகாலி, தொடைகாலி, மட்டி, துரதிருஷ்டம் என்ற சொற்களோடு பிறந்த வீட்டாரும், புகுந்த இல்லத்தாரும் வைவது வழக்கம். விபூதி, ருத்திராக்ஷங்களை முண்டனம் செய்தவுடன் தரித்து அலங்கரிப்பார்கள். துப்பட்டியைப்போலுள்ள வெள்ளைத்துணியை உடுத்தி வீட்டு வேலைகளை ஒப்புக்கொண்டு சிவா, நாராயணு என்ற நாமங்களை வாயால் கூறிக் காலத்தைக்கழிக்கவேண்டும் விதவையான பெண்கள். ஜென்மமுள்ளவரையில் ஜனங்களால் இவர்கள் அன்புடன் ஆதரிக்கப்படுகிறதில்லை. கூலிக்காரிகளாகவே மதிக்கப்படுவார்கள். பணக்கார விதைவைகளுக்கு மேற்கண்ட விதிகளிருந்தாலும் திரவியஸகாயத்தால் இவைகளைக் கடந்து செல்வார்கள். அவர்களைப்போல் மற்ற விதவைகளுக்குப் பணமேது? ஏழைக்குடும்பங்களில் பிறந்த பெண்களுக்கு வயிறு நிறைய ஆகாரமும், சீரமுழுவதும் மூடத்துணியும் கிடைப்பதுகஷ்டமாயிருக்கிறது. புருஷனை இழந்தபிறகு ராஜ்யத்தைத் தோற்ற அரசனைப்போல் யாராலும் மதிக்கப்படுகிறதில்லை.

தற்காலம் இளம் விதவைகளின் மேல் இரக்கங்கொண்டு பற்பல தயாமதிகள் அனேகவித ஸஹாயங்களை ஏற்படுத்தியிருக்கிருர்கள். மேன்மேலும் செய்ய ஆலோசித்துக்கொண்டும் இருக்கின்றனர். இஷ்டப்படும் விதவைக்குக் கல்யாணம் செய்யப்படுகிறது. படிப்பில் மன

முள்ளவர்களுக்குப் பாடசாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. அனேகவித கைத்தொழில்களைக் கற்று ஜீவிக்க வழிகளிருக்கின்றன. புத்திசாலியான மாதர்கள் விதவைகளிடம் பக்ஷம் கொண்டு பற்பல விதமாய் உபகரிக்கிறார்கள். அவர்கள் படும் துயரத்தைக் கண்டு மனமிரங்கும் மதியூகிகள் தாங்களே முன்நின்று மணந்து வருகின்றனர். உலகத்தில் எத்தனையோவித ஸுக துக்கங்களுண்டு. அவைகளை அனுபவிக்கவே மனிதர்கள் பிறந்திருக்கிறார்கள். அவிவேகிகள் உண்மையை யறியாமல் தமது வாழ்வு சாச்வதமென்று நினைத்துப் பிறரைத் துன்பத்துக்குள்ளாக்குகிறார்கள். எதற்கும் ஒரு முடிவுண்டு

கல்பாவதிக்கும் வைதவ்யம் வந்தது. ஆனால் அதைச்சொல்வோர் யார்? ரவிகேஸரி இறந்தானென்று கேட்பாளாகில் தன் விதியைப்பற்றி என்ன நினைப்பாளோ அறிவதெங்ஙனம்?

---

## வைராக்யம்

மனோன்மணியின் பிராணன் எமனுலகம்வரையில் சென்றது. கல்பாவதியும் உலகத்தை மறந்திருந்தாள். பிரஸவம் ஆகாததால் குழந்தையை வயிற்றிலிருந்து துண்டித்தெடுக்கப்பட்டது. பெரிய உயிர் பிழைத்ததே என்று ஸுந்தரி ஸந்தோஷமடைந்தாள். கல்பாவதி பதினோராம் நாள் நடு இரவில் "ரவிகேஸரீ" என்று ஒரு கூச்சலிட்டாள். விம்மி விம்மி அழுதாள். அழுகை அதிகரித்தது. கொஞ்சங் கொஞ்சமாய் பிரஞ்ஞை வரலாயிற்று. ஹரேசன் முகத்தில் கொஞ்சம் தெளிவுண்டாயிற்று.

வைத்யர்களின் ஆநந்தத்துக்களவில்லை. பணம் ஏராளமாய்க் கிடைக்குமென்ற ஆசை அதிகரித்தது. மகள் வாய்திறந்து பேசவே தந்தைக்குண்டான மகிழ்ச்சியை அளவிட முடியாமற்போயிற்று. பகவானே என் தம்பியின் குடும்பத்தைக் காப்பாற்றினீரே என்று ஸுந்தரி கடவுளை வந்தனம் செய்தாள்.

கல்பாவதிக்குக் கொஞ்சம் ஆரோக்யம் வரத்தலைப்பட்டது. அவள் முன் வியாதியைப்பற்றி யாரும் பேசுகிறதில்லை. அதனால் கல்பாவதிக்குத் தான் ஜ்வரத்தால் சில தினங்கள் வருந்திப்படுத்திருந்ததாக எண்ணம். எழுந்து நடக்கத் தொடங்கினாள். ஹரேசன் அவள் மனதை உத்

ஸாக மார்க்கத்தில் உபயோகப்படுத்தும்படி விநோத ஆட்டம், பாட்டல் கதை முதலியவைகளை ஏற்படுத்தினுன். தன்மகள் பிரஞ்ஞை பெறும் பொழுது "ரவிகேஸரி" என்று அலறிக்கொண்டு அழுததை எண்ணி எண்ணி யோசிக்கலானுன். ஒருவேளை அவனை நேசித்திருப்பாளா? அவ்விதமிருந்தால் அவனுக்குக் கொடுத்து மணம் முடித்து விடுகிறேன். குழந்தை மனக்கவலையினுல் நோயுற்றிருப்பாளென்று நினைக்கிறேன். பூர்ணுரோக்யமுண்டாகட்டும் கேட்கிறேன் என்று தனக்குள் மனனம் செய்வான்.

கல்பாவதி எழுந்து உலாற்றிக்கொண்டிருக்கையில் ஒரு பார்ஸல், பொம்பாயிலிருந்து யாரோ அனுப்பினுர்கள். அதை உடைத்துப் பார்க்கையில் சில புஸ்தகங்களும், இரண்டொரு சொக்காய்களும், பென்ஸல், பேனுக்களும் இருந்தன. ஓர் புஸ்தகத்தைப் பிரிக்கையில் "ரவிகேஸரீ" என்று வரைந்திருந்தது. அவன் வருகிறதற்கு முன் பார்ஸல் செய்திருப்பானென்று நினைத்தார்கள். ஆனுல் அடுத்த க்ஷணமே அந்த எண்ணம் போயிற்று. குஜராத்தி பாஷையில் ஓர் கடிதம் அதற்குள் அடக்கம் செய்யப்பட்டிருந்தது. அதைப் பிரித்துப் படித்தான் ரகுநாதன்.

ஐயா!

இந்தப் புஸ்தகங்களும், சில துணிகளும் உங்களுடைய மகன் ரவிகேஸரி என்பவனுடையதாகும். தாங்கள் அவனுக்கு வரைந்துள்ள கடிதங்களில் சிலவை எங்கள் கண்ணுக்குப்பட்டதால் தங்கள் விலாஸம் இன்னதென்று அறிய ஹேதுவாயிற்று. ஸுமார் இருபத்தைந்து வயதுள்ள ஓர் வாலிபன் எங்கள் ஹோட்டலில் இரவு தங்கலானுன். பிளேக்நோய் அவனைப் பிடித்துக்கொண்டதால் அன்றிரவே மாண்டான். இந்த ஊர் வழக்கப்படி அடக்கம் செய்யப்பட்டது. அவனுடைய ஸாமான்களைத் தங்களிடம் அனுப்பிவிட்டோம்.

ஐயோ! என்றலறிக்கொண்டே விழுந்தான் ரகுநாதன். எல்லோரும் என்ன என்ன என்று ஓடிவந்தார்கள். அழுகையை நிறுத்த முடியாமல் "ரவிகேஸரி பிளேகால் இறந்தான். அவனுடைய துணி புஸ்தகங்களை இங்கனுப்பி யிருக்கிறுர்கள். தார்வாரில் என்னைத்தேடிக்காணுத

தால் சென்னைக்கு அனுப்பப்பட்டது. அத்துடன் வந்த கடிதமே இது" என்று கூறினன் ரகுநாதன்.

ஸுந்தரிக்கு ஸ்மரணையே போயிற்று. மனோன்மணி முகத்தை மூடிக்கொண்டாள். கல்பாவதியின் காதில் விழுந்தது. அவள் பொறுக்க முடியாத துக்கத்துடன் படுக்கையில் விழுந்தழுதாள். ஹரேசன்மட்டும் துன்பமடையவில்லை. ஸ்ரீமதி ஒன்று மறியாதவளாதலால் தந்தையை என்னவென்று விசாரிக்கலானுள்.

ஸுகமடைந்து வந்த கல்பாவதிக்கு மறுபடி உடம்பில் நோய்கண்டது. ஹரேசன் காரணம் தெரியாமல் அபத்யம் செய்தாள் மகளென்று கோபித்தான். மறுபடி மருந்துகளைக் கொடுக்கலானுன். நோயாளியின் வியாதி இன்னதென்று ஹரேசன் இம்முறை அறியவில்லை.

ஸுந்தரியும், மனோன்மணியும் ஒருவரையொருவர் நோக்கி வருத்தமுற்றனர். ஒருவேளை பொய்யாயிருக்குமோ என்று ஸந்தேகித்தார்கள். ரகுநாதனைக்கொண்டு பொம்பாயிலிருக்கும் பிரபுக்களுக்கெல்லாம் தந்தியடித்துக் கேட்டாள் ஸுந்தரி. ரவிகேஸரி என்ற பெயரையே யாரும் அறியமுடியவில்லையென்று பதில் வந்தது. எங்கே சென்று தேடுவது? யாரைக் கேட்பது? அனுப்பினவர்களையாவது தீர விசாரித்து வருகிறேனென்று ரகுநாதன் பொம்பாய்க்குப் பிரயாணமானுன். ஹோட்டல்காரன் கடிதத்திலெழுதியிருந்த ஸமாசாரத்தையே சொன்னுன். செத்த மனிதனைப்பற்றி விசாரிக்கவந்த கிழவனைப் பாரென்று அங்குள்ளவர்கள் சிரித்தார்கள். பிரயோஜனமற்ற விஷயத்தில் ஏன் பிரயாஸப்படவேண்டுமென்று ரகுநாதன் மனவெறுப்புடன் திரும்பிவிட்டான். இருந்தபிள்ளை ஒருவன். அவனும் செத்தான். தன் மனைவியும் தானும் தனியேயிருந்து ஆவதென்ன? ஹரேசனுடு ஒரே இடத்தில் வஸிப்பதே நலமென்று ரகுநாதன் தீர்மானித்துத் தார்வாரிலிருந்த பொருள் முதலியவைகளைச் சென்னைக்கனுப்பித் தானும் வந்து சேர்ந்தான்.

கல்பாவதியின் வைதவ்ய ஸமாசாரம் யாருக்குத் தெரியும்? ஸுந்தரி, ரகுநாதன், மனோன்மணி, கல்பாவதி ஆகிய நால்வரே அறிவார்கள். ஹரேசனிடம் விவாக ஸங்கதியைச் சொன்னுல் எல்லோரையும் ஹதமாக்கிவிடுவான். புனர்விவாகம் தற்காலம் எல்லாவிடங்களிலும்

நடப்பதால் கல்பாவதிக்கு அவள் தந்தை மணம் செய்துகொள்ளட்டும் என்று ரகுநாதன் கூறினன். "ஐயோ! இதென்ன கொடுமை. நம்முடைய நிர்ப்பாக்யத்தைப்போல் யாரும் அனுபவித்திரார்கள். கடல் யாத்திரையில் காத்த கடவுள் நிலப்பிரயாணத்திலா கைவிடவேண்டும். கல்பாவதி இஷ்டப்பட்டால் மறுவிவாகம் செய்துகொள்ளட்டும். எனக்குப் பூர்ண ஸம்மதம். ரவிகேஸரியை மணந்ததை மறந்தேவிடும்படி கூறுகிறேன் என்றுள் ஸுந்தரி.

மனேன்மணி எந்த அபிப்பிராயமும் கொடுக்கவில்லை. நான் பெண் பிறந்ததே துக்கத்துக்காக. இனி ஸம்ஸாரக்கவலை எனக்கு வேண்டியதில்லையென்று மௌனமாயிருந்தாள்.

வீட்டிலுள்ளவர்கள் ரவிகேஸரியின் விஷயமாய் துக்கப்படுகிருர்களென்று நினைத்தான் ஹரேசன். வைத்யர்கள் கல்பாவதியின் சரீரத்தைப் பரீக்ஷித்து நோய் குணமாய்விட்டது. மனதில் ஏதோ துக்கமிருக்கிறது. அதனல் ஸுகத்தடையா யிருக்கிறது என்ருர்கள்.

மகளேப்பார்த்து என்ன கவலை என்று கேட்கவே கல்பாவதி ஒன்றுமில்லையென்று பதில் கூறினள். ஹரேசன் அத்துடன் திருப்தியடையவில்லை. "என் அருமைக் குமாரீ! உன் வியாதியின் பொருட்டு 3000-ரூபாய் செலவழித்தேன். வேலையை விட்டு உன்னைக் காப்பாற்றத் துணிந்தேன். தெய்வச் செயலால் உனக்கு ரோகம் நீங்கி வருகையில் மறுபடி வியாதி தோன்றவேண்டிய காரணமென்ன? டாக்டர்கள் நோயில்லை என்கிருர்கள். உன் மனக்குறையைச் சொல். நான் நிறைவேற்றுகிறேன்" என்று கேட்டான்.

கல்பாவதி கண்ணில் நீர் ததும்பிற்று. தகப்பன் பாராவண்ணம் மறைத்துக் கொள்ளலானுள். ஹரேசன் அதை யறிந்து "கல்பா! கூறுகிருயா? நான் எங்கேயாவது ஓடிப் போகட்டுமா? உன் தாய் பித்தம் பிடித்தவள்போல் மௌனியாயிருக்கிருள். உன் அத்தையும், அவள் புருஷனும் புத்திர சோகத்தால் வருந்துகிருர்கள். ஸ்ரீமதியோ தாயற்ற குழந்தையைப்போல் திரிகிருள். நீ எமபுரம் சென்று திரும்பினவள். மறுபடி ஏக நினைத்திருக்கிருய். சொல் மனமிருந்தால், இல்லையேல் இதோ போகிறேன்." என்று எழுந்தான்.

தந்தையே! நீங்கள் வருந்த வேண்டாம். நான் என் குறையைச்

சொல்லுகிறேன். அதன்படி தாங்கள் நடப்பதாய் வாக்குறுதி கொடுங்கள். நான் கேட்பதைத் தடைசொல்லாமல் நிறைவேற்றித் தரவேண்டுகிறேன் என்றுள் கல்பாவதி.

என் அருமைமகளே! நீ கேட்டு நான் இல்லையென்று கூறவேனு? எதைச் சொன்னுலும் செய்ய ஸித்தமாயிருக்கிறேன். பயப்படாதே! ஸத்யம் என்றுன் ஹரேசன்.

அப்பா! இந்த ஜென்மத்தில் எனக்கு விவாகம் செய்கிறதில்லையென்று தாங்கள் கூறவேண்டும். என்பொழுதை ஸத்விஷயத்தில் கழிக்க ஸம்மதி தரக் கோருகிறேன். உலக ஸுக ஸந்தோஷாதிகளில் என்னை ஸம்பந்தப் படுத்தாமலிருக்கும்படி பிரார்த்திக்கிறேன். நான் ஒரு ஸந்யாஸினியைப் போலிருக்க நிச்சயித்திருக்கிறேன். இதுவே என்னுடைய கவலை. என்று கல்பாவதி கூறினுள்.

**ஹரேசன்.**—கல்பாவதி! சிறு பெண்புத்தியாய் உளறுகிருயா? உனக்கு ஆயுள்வரையில் விவாக நினைவு உண்டாகா திருக்குமென்ற நம்பிக்கை வந்திருக்கிறதா? யோசித்துச் சொல்.

**கல்பாவதி.**—அப்பா! ஸத்யம், ஸத்யம், ஸ்வாமி ஸாக்ஷியாய் எனக்கு உலக ஸுகம் வேண்டாம். பாரமார்த்திக ஞானத்தைக் கொடுத்தருளும். ஸ்ரீமதிக்கு மங்களகாரியங்களைச் செய்து நாமெல்லோரும் ஆநந்திக்கலாம்.

**ஹரேசன்.**—வத்ஸே! உன்னிஷ்டம் அதுவானுல் எனக்குச் சம்மதமே! உன்னுல் ஸந்யாஸினியாயிருக்க முடியுமா? உனக்குக் கற்பித்த வித்தை நல்வழியிலேயே நடத்துகிறது. எப்பொழுதாவது விவாகத்தில் அபேக்ஷைகொண்டு தெரிவிப்பாயாகில் நான் செய்ய ஸித்தமாயிருக்கிறேன். இன்னும் ஏதாவது குறையுண்டானுல் கூறிவிடு.

பிழைத்தேன். பிழைத்தேன். என் அத்தையை நீர் எங்கும் அனுப்பக்கூடாது. அவர் என்னிடமேயிருந்து என்னை ஆதரிக்க வேண்டும். ஸ்ரீமதிக்கு உலக வழக்கப்படி ஸகல சுபகாரியுங்களையும் நடத்துங்கள். எனக்கு அவ்விதம் செய்யவில்லையென்றே என் தாய் பிரமையும், வியஸனமும் கொண்டிருக்கிறுள். அவள் ஸுகமடைய விரும்பினுல் நான் சொன்ன விஷயங்களை மருந்தாய்க் கொடுங்கள் என்று கல்பாவதி உரைத்தாள்.

ஸுந்தரி தந்தை மகள் ஸம்பாஷித்ததை மறைவிலிருந்து கேட்டுக்கொண்டிருந்தாள். என் உத்தம கல்பகமே! என் நிதியே! என் விலையில்லா மாணிக்கமே! என்று கட்டிக்கொண்டு முத்தமிட்டாள். ரவிகேஸரி மாணமடைந்த துக்கம்கூட கல்பாவதியின் முன்னிலையில் பறந்து போயிற்று. ஹரேசன் அக்கா! இதென்ன என்று கேட்டான்.

---

## ஜீவநாதன்

கல்பாவதியின் விஷயத்தில் உலகம் சூன்யமாயிற்று. ரவிகேஸரி மடிந்தானென்று கேட்ட பிறகு ஏகாந்தமாயிருக்க விரும்பினுள். ஏதாவது வேண்டுமானுல் தந்தையிடம் கூறிவாங்கிக் கொள்வாள். ஸ்ரீமதிக்குத்தானே பாடம் சொல்லிக் கொடுக்கலானுள். வேறு வாத்தியார்களை வைக்கவில்லை. தன்னுடையகாலத்தைப்பாலிகையின் வித்யாப்யாஸத்தில் கழித்து வந்தாள். ஒழிந்த நேரங்களில் ஞானுர்த்தமான புஸ்தகங்களைப் படிப்பதும், உபநிஷத்துக்களைப் பார்ப்பதுமாயிருப்பாள். சிறுமியான ஸ்ரீமதி வெகு உத்ஸாகத்துடன் கல்விகற்கலானுள். ஸுந்தரிகிருககிருத்ய விஷயங்களைக்கவனித்து ஒழிந்த நேரங்களில் ஈச்வர நாமங்களை ஜெபிப்பாள். மனேன்மணி படுக்கையுடன் உறவாடினுள். நாளுக்குநாள் தேகம்மெலிந்தது. அருமைப்பெண்ணின் கதி இங்கனமாகுமென்று யாரும் எண்ணவில்லை. ஹரேசன் மகளின் மதி கௌசல்யத்தைக்கண்டு மகிழ்வுற்றுன்.

இரண்டுமாதம் இவ்விதம் கழிந்தது. ஒருநாள் காலை 9-மணியில் ஓர் புருஷன் இரண்டு கடிதங்களுடன் ஹரேசன் வீட்டுக் கேட்டில் நின்று ரகுநாதப் பிரபுவைப் பார்க்கவேண்டுமென்று விரும்புவதாய் ஓர் ஸேவகனிடம் கூறினுன். வேலையாள் ரகுநாதனிடம் சொல்ல அவன் வந்தவனை அழைத்து வரும்படி கட்டளை யிட்டான். புதிய மனிதன் உள்ளே வர ரகுநாதன் நீர் யாரையா என்று கேட்டான்.

ஐயா! நான் குஜராத்தேசத்தில் வஸிப்பவன். தங்கள் மகனுன ரவிகேஸரியுடன் அமெரிக்காவில் படித்துக்கொண்டிருந்தேன். இருவரும் இந்தியாவுக்கு வந்தோம். பல விடங்களையும் சுற்றி பொம்பாய் நகரை யடைந்தோம். ஹோட்டலில் தான் தங்கியிருப்பதாயும், இருவருடைய ஸாமான்களையும் இரயில்வே ஸ்டேஷனில் ஓர் அறையில்

பத்திரப்படுத்தித் தன்னிடம் வரும்படியும் கூறி ரவிகேஸரி சென்ருன். நான் அவ்விதமே செய்துமுடித்துத் திரும்பினேன். இரவு காலமானதாலும் ஊரில் மனித ஸஞ்சாரமில்லாததாலும், வண்டியகப்படுவது கஷ்டமானதாலும் நான் ஊருக்குள் போக முடியவில்லை. விடியற்காலத்தில் ஹோட்டலையடைய நடந்தேன். அதற்குள் ரவிகேஸரி செத்துப் பிணத்தைக் கரையேற்றினதாகத் தெரிந்தது. அவனுடைய ஸாமான்கள் எங்கே என்றேன். இரண்டொரு புஸ்தகங்களும், கிழிந்த துணிகளும் இருக்கின்றன. அவைகளை அவனிடமிருந்த கடிதங்களால் சொந்தக்காரர்களின் விலாஸத்தையறிந்து அனுப்ப உத்தேசித்திருக்கிருேம். இரண்டு மூன்று கடிதங்களை அவனுடைய நேசனுன ஜீவ்நாதனுக்குக் கொடுக்கும்படி எழுதியிருக்கிருன். நீங்கள் அவனுடைய நேசனுயிருந்தால் இவைகளைக் கொண்டுபோகலாம் என்ருன் ஹோட்டல்காரன்.

நேசா! உன்னை நான் எதற்காகப் பிரிந்தேன்! ஐயோ! என்ன கெதி என்று துக்கித்தேன். எமகிங்கரர்களைப்போல் ஐந்தாறு மனிதர்கள் என்னைச் சூழ்ந்துகொண்டு கண்டபடி திட்டினுர்கள். என்னவென்று கேட்டேன். அழுகை சப்தம் கேட்டால் பிளேக்மாரி மற்ற மனிதர்களை ஆகுதிகொள்வாள். இனி அழுதால் விழும் உதை என்ருர்கள். இனி அங்கிருப்பதில் பிரயோஜன மில்லையென்று இரயில்வே ஸ்டேஷனை யடைந்தேன். இதற்குள் என் ஸகோதரர்கள் என் வரவைப் பொம்பாய் ஸ்டேஷனில் எதிர்பார்க்க வந்திருந்தார்கள். நேசனுடைய ஸங்கதியைக்கேட்கவே அவர்களும் வருத்தமுற்று என்னைச்சமாதானம் செய்து ஸாமான்களோடு குஜராத் அழைத்துச் சென்ருர்கள். சில வருஷங்கள் என்னைப் பிரிந்திருந்ததால் என் தாய் தந்தையரும் மற்றவர்களும் என்னை எங்கும் அனுப்ப இசையவில்லை. பலமுறை சொல்லாமல் ஓடிவந்து உங்களைக் காணலாமென் றெண்ணினேன். கடிதம் வரைந்தால் எல்லா ஸமாசாரங்களையும் தெரிவிக்க முடியாதென்று நினைத்தேன். ஐயா! ரவிகேசரியின் தந்தையே! எங்களிருவருடைய நேசத்தை என்ன சொல்வேன். அவன் இறந்தது முதல் நான் உண்பதில்லை! உறங்குவது கிடையாது! என்னேரமும் அவன்ஞாபகமே! அங்களுடைய குடும்ப சரித்திரங்களை யெல்லாம் அவன் என்னிடம் சொல்லியிருக்கிருன். தார்வாரில் தங்களைத் தேடலானேன். அவர் புத்திர

சோகத்தால் ஊரை விட்டுச் சென்றார் என்று அங்குள்ளவர்கள் கூறினார்கள். தங்களைத்தேடி சென்னைக்கு வந்தேன். இந்தாருங்கள். இது தங்களுக்கு எழுதின கடிதம். அவன் கல்பாவதிக்கு ஓர் லிகிதம் வரைந்திருக்கிறான். அதை நேரில் அவளைக்கண்டு கொடுக்கும்படி எனக்குக் கட்டளையிட்டிருக்கிறான். இதோ பாருங்கள் எனக்கு வரைந்த கடிதமிது என்று கொடுத்தான்.

ரகுநாதன் தலையில் கையை வைத்துக்கொண்டே துக்கத்துடன் ஜீவநாதன் சொன்ன வார்த்தைகளைக் கேட்டான். முடிந்தவுடன் என் குமாரனைப்போல் வந்த குணஞ்ஞா! என்று அவனைத் தழுவிக்கொண்டு கண்ணீர் விட்டான். ஸுந்தரியை அழைத்துவரும்படி ஆளையனுப்ப அவளும் வந்தாள். ஜீவநாதன் சொன்ன ஸங்கதிகளை ரகுநாதன் கூறவே அவள் அடக்கமுடியாத துயரங்கொண்டு "என் கண்ணே! ரவிகேஸரியே! என் மதகஜமே! ஐயோ திக்கில்லாதவனைப்போல் நீ இறக்கவேண்டுமென்று உன் தலையில் பிரம்மன் வரைந்தானு. ஒருமுறை உன் அழகிய முகத்தை உன் பெற்றோர்களுக்குக் காட்டி நீ மரித்திருக்கலாகாதா?" என்று கதறலானாள்.

அம்மணீ! துக்கப்படுவோர்களை ஸமாதானம் செய்வது ஸாத்யமல்ல. உங்கள் குமாரனுடைய புத்தி சாதுர்யாதிகள் உலகத்துக்குப் பயன்படாமற் போயினவே என்று நாங்களனைவரும் வருந்துகிறோம். தாங்கள் வியஸனத்தை விடுங்கள் என்றான் ஜீவநாதன்.

கல்பாவதியைப் பார்த்துக் கடிதம் கொடுக்கவேண்டுமென்று ஜீவநாதன் அபேக்ஷிக்கிறான். ஹரேசனில்லாத ஸமயம் தெரிந்துகூறு. உன் மகனே தன் நேசனுக்கு இவ்விதம் கட்டளையிட்டிருப்பதால் அவனுடைய நெஞ்சு திருப்தியடையும்படி இவனைக் கல்பாவதியிடம் அழைத்துச்செல் என்று மனைவிக்குக் கட்டளையிட்டு ஜீவநாதனைப் பார்த்து "குமாரா! நீ ஒரு மாதமாவது என்னருகிலிருக்க வேணும். என் புத்திரன் படிக்கச் சென்றதுமுதல் நீங்கள் நேசமாய்ப் பட்டம் பெற்றுத் திரும்பிவந்து பிரியும்வரையில் நடந்த கதைகளைச் சொல்லி என்னைத் திருப்திப்படுத்தக்கோருகிறேன். என்னிஷ்டப்படி நடப்பதாய்க் கூறு" என்று ரகுநாதன் கேட்டான்.

ஐயாவே! அப்படியே ஆகட்டும். ஒரு மாதமில்லை. இரண்டு

திங்களிருக்கிறேன். அவனால் எழுதப்பட்ட தினசரி புஸ்தகங்களும் கண்ட காக்ஷிகளின் படங்களும், மற்ற வஸ்துக்களும் இரயில்வே ஸ்டேஷனில் கிடக்கின்றன. தங்கள் ஆளைக்கொண்டு எடுத்துவரச் சொல்லுங்கள் என்று ஜீவநாதன் கூறினான்.

ரகுநாதன் தன் மகனால் வரையப்பட்ட கடிதத்தைப் படிக்கலானான். ஸுந்தரியும் அருகிலிருந்து கேட்டாள். ஜீவநாதன் இவர்களின் முகங்களை உற்றுப்பார்த்த வண்ணமாய் நின்றான்.

பொம்பாய்

என் பூர்வ புண்யவசத்தால் கிடைத்த ஜனனீ ஜனகர்களின் பாதங்களில் பாலகன் ரவிகேஸரி கோடி நமஸ்காரங்களைச் செய்து வரைந்துகொள்வது.

இன்று காலைமுதல் என் மனம் உலகத்திலிச்சைப்படாமலும் உயிர்வாழ்க்கையில் வெறுப்புக்கொண்டும் இருந்தது. இந்த நிலைமையில், ஊர்வந்து தங்களைக் காண நினைத்தேன். பிறகு நாளையதினம் போகலாமென்றெண்ணினேன். இரவு உண்டு படுக்கைக்குச் சென்றதும் மயக்கம் வரலாயிற்று. மன உறுதியால் இக்கடிதம் எழுதத் துணிந்தேன். இடைஇடையே படுத்துக் கொள்வதும், பித்தம் பிடித்ததுபோல் எழுந்து நிற்பதுமாயிருந்தேன்.

இனி அதிகம் எழுத முடியாது. என் அபிப்பிராயத்தை வரைந்து விடுகிறேன். நான் இறப்பேனென்று நிச்சயமாய்த் தெரிகிறது. என்னுடன் படித்துத் தன் உயிரைப்போல் காத்துவந்த ஜீவநாதனுக்கு என் அருமைக் கல்பாவதியைக் கொடுத்து மணம் முடியுங்கள். அவனும் பிராம்மணன். ஸத்வம்சத்திலுதித்தவன். பிரபுவின் குமாரன். எனக்குப் பூரண ஸம்மதமாயிருப்பதால் தங்களிடம் தெரிவிக்கத் துணிந்தது. கல்பாவதியின் அழகு, கல்வி, குணங்களை அறிந்து நடக்கும் யுவகன் இவனே! உங்கள் மனப்பூர்வகமாய் அவளுடைய வாழ்நாளை இவனுடன் கழிக்கும்படி தாங்கள் முன் நின்று முடிப்பீர்களாக. இந்த விஷயத்தைப்பற்றி அவளுக்கும் கடிதம் எழுதியிருக்கிறேன். உத்தம தந்தையே! என் சித்த சுத்தியுடன் கூறின வார்த்யமீதாகும். இனி எழுதச் சக்தியில்லை. என் அன்னையிடம் இதைக்

காட்டி ஸம்மதிக்கச் செய்து விவாகத்தை முடியுங்கள். உங்களிருவருக்கும் என் அன்பான வந்தனம்.

தங்கள் குமாரன்

**ரவிகேஸரி.**

ரகுநாதன் தாளமுடியாமல் நாற்காலியில் சாய்ந்தான். மூர்ச்சையாய் விடுவானென்ற பயத்தால் ஜீவநாதன் சைத்யோபசாரம் செய்தான். ஸுந்தரியும் சோகத்துடன் விம்மி விம்மி அழுதாள். சிலநேரம் கழித்து ரகுநாதன் கண் விழித்து ஜீவநாதனை இறுகத்தழுவிக் கொண்டு "புத்திரனைப்போல் வந்த புண்யபுருஷா! உன் உதார புத்தியை என்னென்று கூறுவேன். மித்திரனுடைய மனக்கோரிக்கையை நிறைவேற்ற சரீர சிரமம், பொருள் செலவுகளைப் பாராமல் நிர்ப்பாக்யனான என்னைத்தேடி வந்தாயே! குணசிலா! என்மகன் எழுதியுள்ளபடி நடந்துகொள்ள உனக்கு ஸம்மதந்தானு?" என்று கேட்டான்.

"ஐயனே! என் நேசனுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதில் எனக்குக் கிஞ்சிற்றும் ஆக்ஷேபமில்லை. உங்களுடைய தீர்மானம் எவ்விதமிருக்கிறதோ அதைத் தெரிவித்த பிறகல்லவோ நான் நடந்துகொள்ள வேண்டியதைக் கூறவேண்டும் என்முன் ஜீவநாதன்.

---

## கடிதம்

அன்றுமாலை ஐந்துமணிக்கு ஹரேசன் விகாரார்த்தமாய் வெளியே சென்முன். ஸுந்தரி கல்பாவதியிடம் ஜீவநாதன் வந்த ஸமாசாரம் கூறி ரவிகேஸரி எழுதின கடிதம் உன்னிடம் நேரில் கொடுக்கும்படி அவன் தெரிவிக்கிறுன். ரவிகேஸரியின் இஷ்டமும் அதுவே யாகும் என்முள். கல்பாவதி சற்று யோசித்து "அம்மணி! அன்யபுருஷர்களெதிரில் எதற்காக வரவேண்டும்? என் மன்னனுடைய கட்டளையைத் தடுப்பது மகாபாபம். அவர் உயிருடனிருந்து நான் என் சரீரத்தால் ஊழிழக்கப் பாக்யம் செய்யவில்லை. அவர் இறந்த பிறகு அவருடைய மனக்கோரிக்கையை ஈடேற்ருது திருப்பது தர்மமல்ல. அழைத்துவாருங்கள்" என்முள்.

ஸுந்தரி ஜீவநாதனைக் கல்பாவதியின் அறைக்குள் அழைத்து

வந்தாள். மனமோகினியைப்போல் அவளுடைய உருவம் கம்பீரமாய் நின்றிருந்தது. குந்தல கேசராசிகள் நிலத்தைத்தொட்டு ஆடின. வெண் பட்டாடையை உடுத்தி அதே வஸ்திரத்தில் கைகளை மூடிக்கொண் டிருக்கும் ரவிக்கையை அணிந்திருந்தாள். காதில் ஒருசிறிய வைரக் கல் மின்னிக்கொண்டிருந்தது. விசாலமான கண்களும், காந்தி வீசும் கன்னங்களும், பிரகாசமுள்ள நெற்றியும், மனோஹரமான மூக்கும் பெற்றிருக்கும் அம்மங்கையைக்கண்டதும் ஜீவநாதன் திடுக்கிட்டான். சரீரவளர்ச்சி அதிக கோமலமாயிருந்தது. தபஸ்வினியைப்போல் தோன்றினுள் கல்பாவதி. நயனங்கள் பூமியை நோக்கினவண்ணமா யிருந்தன. பாதாதிசிரம்வரையில் வஸ்திரத்தால் தேகத்தை மூடி யிருந்தாள்.

ஜீவநாதன் வாய் பேசாமல் ஸ்தம்பித்து நின்றான். கல்பாவதி! கடிதத்தை வாங்கிக்கொள் என்று ஸுந்தரிகூறவே அவள்தலை யெடுத்து ஜீவநாதனைப் பார்த்தாள்.

ஸகஸ்ரதேள் கூட்டங்கள் தன்னைக் கடிப்பதுபோல் ஜீவநாதன் எண்ணினன். ஒரே தாவில் கல்பாவதியைக் கட்டிக்கொண்டு கடித் துத் தின்னமுடியவில்லையே என்று வேதனை யடைந்தான். அத்புத ரூபமே! அதுலைச்வர்யநிதியே! என் மனோ ராணியே! என்று மனதுக்குள் நினைத்து வருந்தினன். கல்பாவதியின் திருஷ்டி தன்மேல் விழவே தானும் அவளை உற்றுப்பார்த்தான். களங்கமற்ற கண்மணி தன்கையை நீட்டினுள். ஜீவநாதன் அவள் கரத்தில் தன்னிடமிருந்த கடிதத்தை மெதுவாய்க் கொடுத்தான். இருவர் கரங் களும் ஒன்றோடொன்று பட்டன. ஜீவநாதன் உடம்பு சீதளத் தைப் போலாயிற்று. கல்பாவதி கூச்சத்துடன் சரீரத்தை ஒரு முறை அசக்கினுன்.

லிகிதத்தைக் கொடுத்ததும் ஜீவநாதன் இரண்டொரு வார்த்தை களைச் சொன்னுன்.

கடிதத்திலுள்ள விஷயங்களைப் படித்துப் பதில் சொல்லும்வரை யில் நான் இங்கிருப்பேன். பிறகு என் தேசம் செல்லவேண்டும். சீக்கிரத்தில் மறுமொழி கொடுத்தால் உபகாரமா யிருக்கும்.

இதைக்கேட்டதும் கல்பாவதி அவனை யொருமுறை பார்த்தாள்.

அவள் நோக்கம் இன்னதென்று ஜீவநாதனுக்கு விளங்கவில்லை. அர்த்த மில்லாத பார்வையோவென்று எண்ணுவதற்கும் இடமில்லையென்று. தனக்குள் சொல்லிக்கொண்டான்.

அத்தையம்மா! வந்தவர் என்னிடமிருந்து பதில் கேட்க நினைத் திருக்கிருர். எனக்குக் கடிதத்திலுள்ள விஷயங்கள் இன்னதென்று தெரியாது. படித்தபிறகு மறுமொழி உரைப்பதாய்க் கூறுங்கள் என்று கல்பாவதி மொழிந்தாள்.

ஸுந்தரி அவனைப் பார்த்துப் பேசுமுன் அப்படியே யாகட்டும். நான் அதுவரையில் இந்த ஊரிலிருக்கிறேன் என்றுன் ஜீவநாதன்.

இந்த ஊரிலாவது? தெருவிலாவது? இந்த வீட்டுக்குள் என் நாத ரோடிருந்து நீ காலத்தைக் கழிக்கவேண்டும். என் ரவிகேசரியைப் போல் நீயும் ஒரு பிள்ளையென்று நான் நினைத்திருக்கிறேன் எங்களை விட்டு எங்கும் செல்லாதே என்று ஸுந்தரி கூறினுள்.

அம்மணீ,—அப்படியே ஆகட்டும். தாங்கள் உத்தரவு கொடுக் கும்பொழுது நான் செல்லுகிறேன் என்று ஜீவநாதன் உரைத் தான்.

அவனுடைய மதுரத்துவனி கேட்பவர்களுக்குக் களிப்பைக் கொடுத்தது. கல்பாவதியிடம் போக விடை கேட்கவே அவள் அத்தை யிடம் நல்லதென்று கூறுவதுபோல் ஜீவநாதனுக்குப் பதில் சொன்னுள்.

அத்தையும், ஜீவநாதனும் சென்ருர்கள்.

கல்பாவதி தன் கணவன் எழுதிய கடிதத்தை முத்தமிட்டு உங் கள் ஞாபகமாய் இந்த லிகிதமாவது அனுப்பினீர்களே என்று சோகத் துடன் பிரித்துப் படிக்கலானுள்.

பொம்பாய்.

என் அருமைக் காதலீ! கல்பாவதி என்னும் கரும்பே! வித்யா வதியான விமலமணியே!

என் பிராணன் போகுமுன் உன் ரூபம் பலதடவை என்முன் தோன்றிற்று. நான் எத்தகைய பாபி. உன்னை ஏன் மணந்தேன்! மணந்ததினமே கடல்யாத்திரை ஏன் செய்தேன்? யாருக்காகப் படிக்கச் சென்றேன்? என் ஸ்வயநலத்தைக் கோரியா? தாய் தந்தையரை ரக்ஷிக் கவா? அன்புள்ள மனைவியை ஆதரிக்கவா? பரோபகாரம் செய்யவா?

ஒன்றிலும் என் கல்வி பிரயோஜனப்படவில்லை. நானும் ஸுகமடைந்திலேன்.

எனக்கு மரணம் ஸமீபித்திருக்கிறது. மனோபலத்தால் உனக்குக் கடிதமெழுதுகிறேன். எவ்வளவோ ஸங்கதிகளை எழுத நினைத்தேன். காலம் குறுகியிருக்கையில் ஒன்றும் வரைய முடியவில்லை. விவாகமான தினம் நான் கேட்ட கேள்விக்கு நீ கூறின மறுமொழி எனக்கின்னும் ஞாபகத்திலிருக்கிறது. அதை நீ சொன்னபொழுது நான் பட்ட ஆநந்தத்துக்களவில்லை. உனக்கு ஓர் கட்டளையிடுகிறேன். என்னைக் கடவுளென்று அழைத்தாயே! அது உண்மையாயிருக்குமாயின் நீ என் சொற்படி நடப்பாயல்லவா?

என் கண்மணியே! இதைக் கொடுக்கும் ஜீவநாதன் என் பிராண ஸ்நேகிதன். அவன் பெயர் எனக்கென்றே வைத்துள்ளதுபோலும். என்னைவிட பதின்மடங்கு அதிகம் கல்வி கற்றவன். உண்மையே உருக்கொண்டவன். என் ஆபத்தில் உதவிய பந்து. அவனைப் புகழவேண்டுமானால் இக்கடிதம் போதாது. என்னாயுளும் இராது. என் கண்ணே! நான் சாகிறேன். நீ உலகத்தில் தனியேயிருந்து வைதவ்ய துக்கத்தை யடையப்போகிறாய். அதனால் வரும் பலனென்ன? மூடர்கள் ஸ்வர்க்கத்திலுள்ள புருஷனுக்கு விதவையான தன் மனைவியைக் கண்டால் புண்யம் கிடைக்குமென்று கூறுவார்கள். இது முற்றிலும் பொய்யென்று நான் சொல்லாமலே உனக்கு விளங்குமல்லவா? கல்பாவதி! நீ ஏன் உலகத்தில் தனித்திருந்து அழவேண்டும். என் ஹிருதய பூர்வகமாய் உனக்களிக்கும் வரத்தைப் பெற்றுக்கொள்.

என் உயிர் நேசனான ஜீவநாதனை நீ மணந்துகொண்டு ஸுகமாயிருக்கக் கட்டளை யிடுகிறேன். விதவாவிவாகமாயிற்றே என்று யாராவது மறுப்பார்களாகில் என் கடிதத்தை அவர்களுக்குக் காட்டு. உன் தந்தைக்கு நம்மிருவருடைய கல்யாண ஸம்பந்தம் தெரியாதல்லவா? வைதீகர்களும்,என்பெற்றோரும், உன் அன்னையுமே அறிவார்கள். நான் கூறும் வார்த்தையை மறுக்காதே! உன்னை அதிக பக்ஷத்துடன் ஜீவநாதன் காப்பாற்றுவான். நீ பெரிய பெண்ணாய் விட்டாய். உனக்கு ஸ்வதந்திரம் கிடைத்திருக்கிறது. இந்த விவாகத்தில் உன் ஸம்மதமே முக்யம். மற்றவர்களின் அபிப்ராயம் அநாவச்யம். மரியாதையுடன்

என் மாதா பிதாக்களும், மற்றவர்களும் நடந்து மணம் செய்து முடிக் கட்டும். இல்லையேல் ஜீவநாதன் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வான். அவனுக்கு இந்த விஷயமாய்க் கடிதமெழுதியிருக்கிறேன். என் வார்த்தையை அவன் அணுவும் மீறி நடவான். என் தந்தைக் கும் லேகனம் வரைந்திருக்கிறேன். அவரும் உனக்கனுகூலம் செய் வாரே யன்றி விரோதியாகார். இவர்களெல்லோரும் என் வார்த்தையில் மதிப்பு வைத்திருக்கையில் நீமட்டும் அவமதிப்புடனிருப்பாயா ? ஒரு நாளுமில்லை. என் கண்களின் காந்தி மறைந்து தேகம் நடுங்குகிறதால் கடிதத்தை முடிக்கிறேன். கண்ணே! நீ மனம் வருந்தாதே! என் நேசனை மணந்துகொள். இதுவே எனக்கு நீ செய்யக்கூடிய திருப்தியுள்ள கடமையாகும்.

உன் அன்புள்ள

ரவிகேசரி.

ஹா! ஹா! இதென்ன புதுமை! அவருடைய கையெழுத்தே ! அதற்குச் சந்தேகமில்லை. அம்மாளுக்கு அவர் எழுதும் கடிதங்களைப் பார்த்திருக்கிறேன். ஐயோ! பாவம். சாகும்பொழுதும் என்மேல் பிரி யங்கொண்டு இச்சங்கதிகளைத் தெரிவித்திருக்கிறாரே! குணநிதி யென் றாலும் போதாதே! என்ன அன்பு என்மேல் கொண்டிருந்தார். என்னை விட்டுப் பிரிந்து போகையில் அவர் கேட்ட கேள்விக்கு நான் பதில் கூறினதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார். தன்னிடம் நான் நேசம் வைத் திருப்பேனாகில் ஜீவநாதனை மணந்துகொள்ள வேண்டுமென்கிறார். நான் அவரை மறப்பதெங்கனம்? பிராணநாதருடைய கட்டளையை ஏற்று நடப்பதென்றால் என் மனோதர்மம் தடுக்கிறதே. என் நினைவே எனக்கில்லையே. இப்படியும் ஒரு கட்டளை இடுவாரா? உலகத்தில் ஜனங் கள் என்னைப்பற்றி என்ன நினைப்பார்கள். எல்லாம் ஆச்சர்யமாயிருக் கிறது. மறுத்தாலோ மன்னன் வாக்கை நிறைவேற்றாத மகாபாபியாகி றேன். என் ஜீவன் போகவில்லையே என்று வெறுத்துக்கொண்டாள் கல்பாவதி. மறுபடியும் வருத்தமடைந்து ஹா! "என்தந்தையிடம் எனக்கு விவாகம் வேண்டாமென்று கூறிவிட்டேன். அவரை மறுபடி நான் கேட்பதா ? இதென்ன கஷ்டகாலம். வெளியிட முடியாத வார்த் தைகளாயிருக்கின்றன. ஜீவநாதனுக்கு என்னவென்று பதில் சொல்

வது ? இக்கடிதத்தை அத்தைக்கும் அம்மாவுக்கும் படித்துக் காட்டலாமா?" என்று யோசித்தாள் தருணீமணி.

---

## தீர்மானம்

ஹரேசன் மாடியில் நின்று உலாற்றிக்கொண்டே "வாலிபன் லக்ஷணமுள்ளவன்! கல்வியறிவை விசேஷமாய்ப் பெற்றிருக்கிறுன். கல் நெஞ்சனுன என்னைக்கூட வசமாக்கிக் கொண்டான். கொஞ்சம் கருப்பாயிருக்கிறுன். கண், மூக்கு, செவி, கைகால் முதலிய அவயவங்கள் வெகு ஒழுங்காயிருக்கின்றன. ஸ்ரீ கிருஷ்ணன் சியாமளவர்ணன். இவனும் நீலமேகன். பூர்ண புருஷனுயிருக்கிறுன். வாக்தோரணை வெகு ரஸமாயிருக்கிறது. பரதேசத்தில் ஸஞ்சரித்துப் பழகினவனுனதால் அதிக நாகரீகமுள்ளவனென்று சொல்லவேண்டும். அவனைப் பார்த்தது முதல் என்மனம் ஆநந்தப்படுகிறது. அவனுடன் பேசுவதே ஒரு பெரும் பாக்யமென்றெண்ணுகிறேன். எந்த விஷயத்தைக் கேட்டாலும் தடையில்லாமற் பதில் சொல்லுகிறுன். ஸநாதன தர்மத்தை வெகு தெளிவாய்க் கூறிப் பற்பல அர்த்தங்களை எடுத்தோதுகிறுன். விவாகமாகாதவன். எனக்கு அவனிடம் அதிக பக்ஷமுண்டாகிறது. அவனை விட்டிருக்க முடியவில்லை. என் அருமைக் குமாரி இவனைப் பார்ப்பாளாகில் ஆசைப்படுவாளென்றெண்ணுகிறேன். இன்று நல்லகாலம்போலும்" என்று யோசித்தான்.

மறுபடியும் நடந்தான். "ஆகா! பகவானுடைய திருவுளம் இப்பொழுதுதான் இரங்கிற்றே. என் மனதில் நினைத்தவண்ணம் இந்த யுவகன் தோன்றியிருக்கிறுன். அவன் படியாத புஸ்தகங்களே கிடையா! பாராத நாடுகள் சொற்பமே! கீழ்நாடு மேல்தேசங்களைக் கடபடவென்று வர்ணித்து ஸூகாஸூகங்களைத் தெரிவிக்கிறுன். அபூர்வ சக்தி அவனிடமிருக்கிறது. ரகுநாதன் கேள்வி கேட்பதற்கெல்லாம் வெகு விநயமாயும், உருக்கமாயும் பதில் கூறுகிறுன். சற்றும் பின் வாங்குகிறதில்லை. ரஸாயன சாஸ்திரம், பிராணி சாஸ்திரம், வநஸ்பதி, வியவஸாயம் ஆகிய அநேக சாஸ்திரங்களின் உண்மையைத் திண்ணமாய் அறிந்திருக்கிறுன். என்மகள் ஒப்புக்கொண்டாலும், மறுத்தா

லும் இவனுக்கே கல்யாணம் செய்துகொடுத்து விடுகிறேன். அவள் உலகத்தை அறியாதவள். மனம் வந்தபடி பேசும் பிராயமுள்ள வள். ஒருமுறை கேட்கிறேன். இவனையும் அவளையும் வித்யா விஷயமாய் விவாதத்துக்கு விடுவேனுகில் இவன் குணத்தை நன்குய்க் கிரகிப்பாள். இவனைக் கண்டு காதலிக்காத ஸ்திரீகளும் உண்டோ!'' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

அவன் வரும் நேரமாயிற்று. கல்பாவதியை முதலில் அழைத்து வரச் சொல்லவேண்டும். யார் அங்கே! என்று கூப்பிட்டான்.

ஓர் வேலையாள் வரவே கல்பாவதி யம்மாளை நான் பார்க்க விரும்பு வதாய்த் தெரிவி என்று கட்டளையிட சில நேரத்துக்குள் அவன் பெண் மணியை அழைத்துக்கொண்டுவந்தான்.

அப்பா ! ஏது என்னை யழைத்தது என்று வினவினுள் கல்பாவதி.

குமாரி! உன்னுடன் ஒரு ஸங்கதி பேச வெண்ணியிருக்கிறேன். உனக்கு நான் பிரமாணம் செய்து கொடுத்ததுபோல் நீ எனக்கொரு ஸத்யம் தாவேண்டும். அதுசெய்து கொடுத்தாலன்றி என்மனம் திருப்தி யடையாது. நான் இந்த உலகில் பிழைத்திருக்க வேண்டுமானுல் உன்னுடைய வாக்குறுதியாகிய மருந்து அவசியம். உன்னிஷ்டமென்ன? தெரிவி என்றுன் ஹரேசன். கல்பாவதி சற்று யோசித்தாள். தந்தை யின் விந்தைமொழி யாதாயிருக்குமென்பது அவளுக்குத்தெரியவில்லை. பதில் சொல்ல வெண்ணினுள். அமெரிக்கா நாட்டார் தனக்கு அன் புடன் அளித்த அழகிய உடையுடன் ஜீவநாதன் ஹரேசனுடைய அறையில் நுழைந்தான். கல்பாவதி வெட்கத்துடன் அவ்விடத்தை விட்டகல எழுந்தாள். கல்பா! நீ எங்கும் செல்லாதே. இவர் நம்முடைய விருந்தாளி. எனக்கு உயிர் ஸ்நேகிதாரயிருக்கிறுர்! நீ இவருடன் ஸங் கோசமில்லாமல் பேசிப் பிரதேச ஸமாசாரங்களை யறிந்துகொள்ளலாம். உனக்கு விநோத விஷயங்களைக் கேட்பதில் அதிகப் பிரியமல்லவா? என்று ஹரேசன் மொழிந்தான்.

கல்பாவதி தந்தையின் சொற்படியே தங்கினுள். ஜீவநாதன் ஹரே சனுக்கு வந்தனங்கூறி அவனுல் கொடுக்கப்பட்ட நாற்காலியொன்றில் அமர்ந்தான். மகளை ஓர் நாற்காலியில் உட்காரக் கட்டளையிட்டான் தந்தை. ஜ்வலிக்கும் கண்களுடன் "அப்பா ! என்விடுதிக்குச் செல்ல

விட கொடுங்கள். இங்கே உங்கள் ஸம்பாஷணைக்கு நான் தடையா யிருக்க எனக்கிஷ்டமில்லை" என்று கூறும் மகள் நோக்கி,

'கண்ணே! உன் விஷயமாகவே நான் ஜீவநாதனுடன் பேசப் போகிறேன். நீயும் அருகிலிருக்கவேண்டும். சற்று நேரத்துக்குமுன் நான் கேட்ட கேள்விக்கு நீ பதிலளிக்காமலிருக்கிறாய். அதை ஞாபகப் படுத்திக்கொள். உட்காரு. நீ போகும் ஸமயத்தைத் தெரிவிக்கிறேன்" என்றான் ஹரேசன்.

தடுத்துச்சொல்லப் பயந்து பெண்ணரசி உட்கார்ந்தாள். ஹரேசன் திருப்தியடைந்து வந்தவனுடன் பேசலானான்.

ஹரேசன்.—ஜீவநாதா! உன்னைப்பற்றி எனக்கு யாதொன்றும் தெரியாது. உன் ஜென்ம விருத்தாந்தங்களைச் சொல்.

ஜீவநாதன்.—பிரபோ! என் தாயை அறியேன். தந்தையும் சிற்றன்னையும் சில ஸகோதரர்களும் எனக்குண்டு. நான் குர்ஜரதேசம். பிராம்மண ஜாதி. தென்னாட்டிலிருந்து எங்கள் தாதா அங்குக் குடியேறினவர். கல்வியறிவைக் கொஞ்சம் பெற்றிருக்கிறேன். இது தான் என்னுடைய பூர்வோத்திரம்.

ஹரே.—பாலகா! உன்னைக் கண்டது முதல் என் உள்ளம் பூரிக்கிறது. நீ என் பெண்ணை மணந்துகொண்டு என் கிருகத்தை அலங்கரிக்கவேண்டுகிறேன். என் இஷ்டத்தை நிறைவேற்றுவாயா?

ஜீவ.—ஐயனே! தங்கள் மகளுக்குச் சம்மதமிருந்தால் எனக்கு ஆக்ஷேபமில்லை. அவளுடைய இஷ்டத்தைக் கேட்டறிந்து சொல்லுங்கள். என் அபிப்ராயம் தங்களுடையதே யாகும்.

மகளைப் பார்த்தான். அவள் முகத்தில் யாதொரு குறிப்புமில்லை. "கல்பா! என்ன சொல்லுகிறாய். நீ இவனை மணந்தாலன்றி என் உயிர் நில்லாது. என்னைக் காப்பாற்றவேண்டுமானால் நீ இதற்கு இசைவாயல்லவா? சீக்கிரம் மறுமொழி கூறுவாயாக" என்றான் பிதா.

குமாரி தந்தையை நோக்கி என் அருமைத் தகப்பனாரே! திடீரென்று கேட்டால் என்னால் உரைக்க முடியுமா? தாங்கள் கூறும் விஷயத்தை யோசித்துப் பார்த்தே பதிலுரைக்கவேண்டும். ஸாதகபாதகங்களைத் தெரிந்து ஆலோசிப்பதே புத்தியின் சக்தியாகும் என்றாள்.

ஆனால் எப்பொழுது தெரிவிப்பாய்? ஜீவநாதனுக்கு நான் தெரி

விக்கும் காலத்தைக் குறிப்பிடு. அவன் நிராசையாய்ப் போகாவண்ணம் பதில் கூறு. என் மனச்சந்தோஷத்தை மாற்றுதபடி விருத்திசெய் என்றான் பிதா.

ஜீவநாதன் கல்பாவதியின் அழகிய குரலைக் கேட்டு ஆநந்தத்தில் ஆழ்ந்தான். என்ன தவம் செய்தேன். கண்மணியே! நவமணியே! என் அகமணியே! என்று அழைக்கும் காலமும் கிட்டுமோ. கல்பாவதி என்னைக் கண்கொண்டேனும் பார்ப்பாளா? நல்மொழி கூறுவாளோ! வெறுப்புடன் பதிலுரைப்பாளோ என்று ஆத்மகதமாய் யோசித்தான்.

அப்பா! என்னம்மா கேட்கிறீர். விவாகமென்றால் எனக்குப் பிடிக்கவில்லை. அதில் மனம் சென்றாலல்லவோ நான் மறுமொழி உரைப்பதற்கு. என்னை ஏன் வருத்துகிறீர்? அவர் யுவரையாவது மணந்து கொண்டு ஸுகமாயிருக்கட்டும். எனக்கு ஏகாங்கியாயிருப்பதே ஸுகமாயிருக்கிறது என்றாள் கல்பாவதி.

ஹரேசன் கோபத்துடன் "கல்பா! நான் பைத்யம் பிடித்தவன். இல்லையேல் உன்னை இவ்விதம் வளர்த்திருக்க மாட்டேன். உன்னை எதற்காகப் பெற்றேனே தெரியவில்லை. என்னைப்போல் மூடன் யாருண்டு. ஆதியில் உன் தாய்சொன்ன வார்த்தையைக் கேளாதிருந்ததால் அவள் பிரியத்தை இழந்தேன். தற்காலம் என் சொற்படி நீ நடவாததால் உன்னிடமுள்ள வாஞ்சையை விடுக்கப்போகிறேன். பதினேழு வயதுள்ள பெண்ணைக் கல்யாணம் செய்துகொடாமல் வைத்திருப்பது தவறென்று என் புத்தியில் இப்பொழுது படுகிறது. உன் கல்விக்கேற்ற கலாநிதி கிடைத்திருக்க நீ வேண்டாமென்பது நன்றாயில்லை. இம்முறையும் கேட்கிறேன். ஒருவாரம் வரையில் உனக்கு யோசிக்க அனுமதி யளித்திருக்கிறேன்! நீ பதில் கூறவேண்டும். இல்லையேல் நான் உன் கண்ணுக்குத் தெரியாமல் தேசாடனம் செய்யப்போவது நிச்சயம். எது இஷ்டமோ அதைச் செய்" என்று மொழிந்தான்.

அப்படியே ஆலோசித்துக் கூறுகிறேன். தாங்கள் என்குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளுங்கள். நான் போகட்டுமா? என்றாள் பெண்மணி.

மகளே! நீ போகலாம். என்வார்த்தையைக் கௌரவத்துடன் ஏற்றுப்பதில் கொடு என்று ஹரேசன் கூறினான்.

கல்பாவதி எழுந்து ஹம்ஸத்தைப்போல் நடந்து சென்றாள்.

ஜீவநாதன் அவளைக் கண்கொட்டாமல் பார்த்து அவள் மறைந்தவுடன் "ஐயா! தங்கள் குமாரி விவாகத்தில் ஏன் வெறுப்பைக் காட்டுகிறாள். காரணமேதோ இருக்கவேண்டுமென்று நினைக்கிறேன். அதிரூப ஸுந்தரியான அவள் மனதில் ஏதோ ஒரு குறையிருக்கிறது போல் நான் அறிந்துகொண்டேன். அது என்னவென்பதை நீங்கள் சொல்ல முடியுமா?" என்றான்.

ஜீவநாதா! மூன்று மாதத்துக்குமுன் அவள் திடீரென்று ஜ்வரங் கண்டு உயிர்போகும் அவஸ்தையை அனுபவித்தாள். என்னுடைய அருமைக் குழந்தைக்கு ஏராளமான பணம் செலவழித்து வைத்யம் பார்த்தேன். உடம்பு ஸுகமடைந்தது. சரீரத்தில் நல்லரக்த மில்லாததால் ஸந்தோஷத்தில் மனம் செல்லவில்லை. அவளுடைய களங்கமற்ற ஹிருதயத்தில் வேறுகவலை யிருப்பதாகக் காணேன் என்றான் ஹரேசன்.

நாம் இந்த ஊரைச் சுற்றிப்பார்த்து வரலாமென்று கூறினீர்களல்லவா? அதற்காகவே வந்தேன் என்றான் ஜீவநாதன்.

ஹரேசனும் உடைதரித்துக்கொண்டு இரட்டைக் குதிரை கட்டின வண்டியில் ஜீவநாதனுடன் ஏறிச் சென்னப்பட்டணத்திலுள்ள காக்ஷிகளை விவரித்துக்கொண்டே ஸவாரிபோனான்.

ஜீவநாதன் மனமெல்லாம் கல்பாவதியினிடத்திலும் சரீரம் ஹரேசன் பக்கத்திலும் தங்கியிருந்தன. உம், உம், உம் என்று உம் கூறிக்கொண்டே ஹரேசனுக்குப் பதில் கொடுத்துவந்தான். இதற்குள் ஸவாரியும் முடிந்துகொண்டிருந்தது.

---

## விஸ்மயம்

இரவு ஒருமணியிருக்கும். கல்பாவதி தன்னறையில் தூங்கிக் கொண்டிருந்தாள். ஜன்னல் கதவு ஒன்று திறந்துவைக்கப்பட்டிருந்தது. காற்றுக்காக அதை மூடவில்லை. கம்பிகளுள்ள ஜன்னல். கல்பாவதியின் மேஜை அதற்கருகில் போடப்பட்டிருந்தது. கண் விழித்துக் கொண்டாள் கட்டழகி. ஜலபாதைக்குச் சென்று கைகால்களைச் சுத்தி

செய்துகொண்டு படுக்கையறையில் வைத்துள்ள தீபத்தைப் பெரியதாய்த் தூண்டி வைராக்கிய சுலோகங்களைப் படிக்கலானுள். புஸ்தகம் மேஜை யிலிருந்தது. அதை எடுக்கப்போகையில் ஓர் கடிதம் தன் பெயருக்கு வரைந்திருப்பதைக்கண்டு ஆச்சர்யமுற்று அதைப் பிரிக்கலானுள்.

பிராணேச்வரீ! சென்னை

19—8—'07.

உன்மனம் தவிப்பதை நான் அறியாதவனல்ல. என் குறையைத் தீர்க்க நீ எண்ணங் கொள்ளாதிருப்பது நியாயமா? நீ யாருடைய தைரி யத்தைக் கொண்டு உலகத்தில் வஸிக்கப்போகிருய்! உன் தந்தையின் தனத்தின் பலம் உன் ஜீவகாலத்தை ஸந்தோஷப்படுத்துமென்று உறுதி யாய்ச் சொல்லுகிருயா? நான் ஜீவநாதனை மணக்கும்படி உனக்கு அனு மதி தந்திருந்தும், உன் பெற்றோரும், உறவினரும் ஸம்மதித்தும் நீ ஏன் பின்வாங்குகிருய்! உன் சித்தத்தில் குடிகொண்டிருக்குஞ் சிந்தை எதுவா யிருக்கலாம்? ரவிகேஸரி இறந்து ஏறக்குறைய மூன்று மாத மாகிறது. அவன் உன்னை ஒரு முறையாவது திரும்பிப் பார்க்காமல் மாண்டானே என்று நீ வருந்துகிருயா? இல்லையா? அந்த ரவிகேஸரியே உனக்குக் குருவாயிருந்து கட்டளையிடும் சொல்லை நீ கேட்கலாகாதா? உனக்கேன் ஜீவநாதனிடம் அன்பு உதிக்கவில்லை? அவன் உன்னையே நினைந்து வருந்துகிருனே! ஊர் செல்வதற்கும் உத்தரவு கொடாமலிருக் கிருய். சீக்கிரம் யோசித்துக்கூறு.

கண்ணே! நான் அரூபியாயிருக்கிறேன். உன்னை என் கண்களால் பார்த்து ஆனந்திக்கிறேன். நீ என்னைப் பார்க்க முடியாமல் வியஸ னப்படுகிருய். என்னை நினைந்துருகும் உனக்கு என் நேசனை ரக்ஷக னுய் அனுப்பியிருக்கிறேன். அவனை ஏற்றுக்கொள். இக்கடிதத்தை வெளியிட்டால் உன்னை எல்லோரும் பரிஹஸிப்பார்கள். இறந்தவன் கையெழுத்தே என்று நம்பினுலும் பூதப்பிரேதரூபமாய் உன்னை ஹிம் ஸிப்பதாய் எண்ணி மாந்திரிகனை வரவழைத்துப் பார்க்கத் தொடங்கு வர். கல்பாவதி! ஜீவநாதன் உன்னைச் சந்திப்பானுகில் ஸந்தோஷத் துடன் பேசு.

உன் அன்புள்ள

ரவிகேசரி.

கடிதம் முடிந்தது. ஒன்றும் தெரியாமல் திகைத்தாள். இறந்தவர் எழுதுகிறதாவது? தேதி மாதங்கள் ஸரியாயிருக்கின்றனவே! ஒரு வேளை அவர் உயிருடனிருந்து தன் நேசனைக்கொண்டு என்னைப் பரீக்ஷிக்கிறுரா? அவரும் இந்த ஊருக்கு வந்திருக்கவேண்டும். இதன் உண்மையை ஜீவநாதனே யறிவான். நாளைய தினம் கேட்கிறேன். ஜீவநாதன் மாந்திரிகனு? இல்லையே! மகா புத்திசாலியாய்த் தோற்றுகிறுன். ரவிகேஸரி மறைவானேன்? விடிந்தால் தெரியும் உண்மை. கடிதத்தை வெளியிடாதிருப்பதே நன்மை என்று கல்பாவதி அதைப்பத்திரப் படுத்தி நித்திரை செய்தாள்.

அருணோதயத்தில் வழக்கம்போல் எழுந்து பின் புறத்திலுள்ள தோட்டத்துக்குச் சென்று பசு பக்ஷிகளைப் பார்த்துத் தன் மனேவியதையை நினைத்து யோசிக்கலானுள். இவள் அங்குப் போனதைப்பார்த்திருந்த ஜீவநாதன் ஏதோ காரியமாய்த் தானும் வந்ததுபோல் தோட்டத்தின் மற்றொரு புறத்தில் நுழைந்து நின்றுன்.

கல்பாவதி அவனைக் கண்டதும் நன்ருய் திருஷ்டித்தாள். யாதொரு களங்கமுமில்லாமல் தோற்றினுன் ஜீவநாதன். இதென்ன புதுமை! ரவிகேஸரியின் கடிதம் வந்தவிதம் கேட்டறிவது எங்கனம்! அவனே பேசவில்லை. நான் வார்த்தையாடுவது தகுதியல்ல என்று தயங்கினுள்.

ஜீவநாதன் ஸமீபத்தில் நின்று "பெண்ணரசி! நீ இங்கே வந்திருப்பதை அறியாமல் நான் வரலானேன். மன்னிப்பாயாக" என்றுன்.

ஐயா! இதிலொன்றும் குற்றமில்லை. தோட்டம் எல்லோருக்கும் பொது. நான் வந்ததுபோல் உங்களுக்கும் ஏதாவது எண்ணம் தோன்றி வந்திருப்பீர்கள். இதற்காக மன்னிப்புக் கேட்பானேன். தங்கள் இஷ்டமுள்ளவரையில் உத்யானவநத்தைப் பார்வையிடுங்கள் என்றுள் கல்பாவதி.

ஜீவ.—உன்னுடைய உத்தமகுணத்தை மிகமெச்சினேன். உன் தாய், தந்தை, அத்தை, அத்திம்பேர் முதலியவர்களின் குணங்களை உன்புருஷனுல் கேள்விப்பட்டிருக்கிறேன். நேரில் கண்டதும் அவன் சொன்னது உண்மையென்று அறிந்தேன்.

கல்பாவதி.—ஐயா! நானொரு ஸங்கதி கேட்கிறேன். ஒளியா

மற் பதில் சொல்வதானுல் எனக்குத் திருப்தியுண்டு. இல்லையேல் என் மனம் வருந்தும்.

ஜீவ.—பெண்ணே! என்வாக்கால் நான் பொய் கூறுவதில்லை ஸந்தேகமுள்ள விஷயங்களைக்கேள். தெரிந்தவரையில் பதில்சொல்லு கிறேன்.

கல்பா.—என் புருஷன் ரவிகேஸரி உண்மையில் இறந்தாரா? நீர் கண்ணுல் பார்த்தீரா! அவர் சடலத்தை என்ன செய்தீர்கள்?

ஜீவ.—அதை நினைத்தால் என் மனம் நடுங்குகிறது. உன் கணவன் இறந்ததற்கு மரண ஸர்ட்டிபிகேட் கூட இருக்கிறது. வேண்டு மானுல் கொடுக்கிறேன்.

கல்பா.—அவருடலை யார் கொளுத்தினது? நீங்கள் பரம நேசரா யிற்றே! அருகிலிருந்து தகன கிருத்யங்களைச் செய்தீர்களா?

ஜீவ.—ஐயோ! பரம சண்டாளர்களான ஸ்மசானம் காக்கும் சில மனிதர்கள் எனக்குக் கட்டை முட்டைகளை உதவோமென்று மறுத்தார் கள். நான் அதிகாரியிடம் உத்தரவு வாங்குவதற்குள் பிணம் அடக் கம் செய்யப்பட்டது.

கல்பா.—இது உண்மைதானு? ரவிகேஸரி உயிர் பெற்றிராரென்று நீர் நிச்சயமாய்ச் சொல்லமுடியுமா?

ஜீவ.—ஆகா! சொல்லுவேன். அவன் பிராணனுேடிருப்பதாய்க் கூறுபவர்களுக்கு என் ஆஸ்தி முழுவதும் கொடுக்க ஸித்தமாயிருக் கிறேன். அத்துடன் நானும் அடிமையாகிறேன்.

கல்பா.—ஆனுல் நீர் எனக்கு உம்முடைய பொருளைத் தருவ துடன் அடிமையாக வேண்டும். இந்தாரும் இக்கடிதத்தைப் படியும். யாருடைய கையெழுத்தென்பது உமக்குத் தெரியுமல்லவா?

ஜீவ.—(ஆச்சர்யத்துடன் பார்த்து) பெண்ணே! ஆனுல் ரவி கேஸரி இறந்தானென்று நான் பொய்சொன்னதாக எண்ணுகிறுயல்லவா? உனக்கு உண்மை புலப்படும் வரையில் நான் அடிமையே! நீ ரவிகேஸ ரியைக் கண்டுபிடிக்காவிட்டால் உன் சபதமென்ன?

கல்பா.—நீர் அவரை மறைத்து வைத்திருக்கிறீர். பொய் சொல்வ தில்லை யென்று கடவுளறிய ஸத்யம் செய்யும். நான் கண்டுபிடிக்க

முயலுகிறேன். முடியாவிடில் உமக்கு நான் அடிமையாகிறேன். ஸம்மதமா ? பதில் கூறும்.

ஜீவ.—பெண்ணரசே! என் திரிகரண சுத்தியாய் நான் அபத்த முரைப்பதில்லே. ரவிகேஸரியை நீ தேடிப் பிடிக்கும்வரையில் உன் கட்டளேப்படி நான் நடக்கிறேன். உன்னுல் ஸாத்யமாகாதிருக்குமாயின் உன் வார்த்தையை நிறைவேற்றப் பின் வாங்காதே.

கல்பா.—நம்மிருவருக்கும் ஸாக்ஷி யார். என்னை நீர் நம்புவீரா ?

ஜீவ.—என்னை நீ உண்மையுள்ளவனென்று ஒப்புக்கொள்ளுகிருயா ?

கல்பா.—ஸத்யமுள்ளவனென்று உம்முடைய நடத்தையே சொல்லுகிறது. என் புருஷனுடைய கோரிக்கையை ஈடேற்ற மனங்கொண்டீரே யன்றிக் கெடுதிசெய்ய முயலவில்லை என்று அறிந்திருக்கிறேன்.

ஜீவ.—மாதரசி! நான் உன்னை என் தெய்வத்தின் ஆணேப்படி ஸத்யவதியென்று கூறுகிறேன். ஆகையால் நம்மிருவருக்கும் ஸத்ய தேவதை ஸாக்ஷியாயிற்று. ஸம்மதந்தானு ?

கல்பா.—ரவிகேஸரி உம்மைப் பரிஹஸிப்பதற்காக இவ்விதம் செய்திருப்பாரோ! ஒருவேளை இருவரும் தோழர்களாதலால் கையெழுத்து ஒருவரைப்போல் ஒருவர் எழுதக் கற்றுக்கொண்டிருப்பீர்களோ என்று என்மனம் தயங்குகிறது.

ஜீவ.—நான் முன்பே சொல்லியிருக்கிறேன். பொய்யுரைக்கும் ஸம்பிரதாயம் என்னிடமில்லை. உனக்கு ஸந்தேகமிருந்தால் உன் முன்னிலையில் என் கையால் இக்கடிதத்திலுள்ள வார்த்தைகளை எழுதுகிறேன். இரண்டையும் ஒத்திட்டுப்பார். பிறகு என்ன சொல்வாயென்பதை அறிகிறேன்.

கல்பா.—உம்முடைய சொக்காய்ப் பையில் பேனு யிருக்கிறது. இக்கடிதத்துடன் வரையப்படாத காகிதமும் இருப்பதால் அதில் எழுதுங்கள். என் முதல் ஸந்தேகத்தை நீக்கிக் கொள்ளுகிறேன்.

அவ்விதமே யாகுகவென்று ஜீவநாதன் கடித மெழுதினுன் அந்த எழுத்துக்களும், இந்த அக்ஷரங்களும் ஒன்றோடொன்று ஸம்பந்த மில்லாமலிருந்தன. கல்பாவதியின் ஸந்தேகம் பரிஹாரமாயிற்று. கையெழுத்து வெவ்வேறு யிருக்கக்கண்டு கவலையுற்றுள். ஐயா! என்

ளைப் பரிசோதியாதீர். என் கணவர் உயிருடனிருக்கிருரென்பது மட்டும் நிச்சயம். நீர் அவருடைய நேசனென்பதும் உண்மையே! அவரை ஒருமுறை நான் சந்திக்கும்படி செய்யும். உமக்குக் கோடி புண்ய முண்டு. என் உள்ளம் துடிப்பதை ஈசனே யறிவார் என்ருள்.

பெண்ணரசே! நான் மோசக்காரனு? உன் அதிர்ஷ்டவசத்தால் ரவிகேசரி கிடைக்க வேண்டுமேயன்றி வேருெரு முயற்சியாலும் அவனை நான் காட்டமுடியாது. என் மித்திரனை உன் மூலமாய்க் காண்பேனுகில் நான் உலகத்தில் உன்னத பதவி பெற்றவனுகிறேன். கல்பாவதி! எனக்கு நீ கிடைக்காவிட்டாலும் பாதகமில்லை. உன் உள்ளத்தில் ஸஞ்சரிக்கும் ரவிகேஸரி ஸ்வயரூபத்துடன் எல்லோர்கண் முன்னும் வருவானுகில் அதைவிடச் சந்தோஷம் எனக்கு வேறில்லை. நீ என்னை நம்பாமலிருக்கிருய். நான் உன் மனதை எப்படித் திருப்தி செய்வேன் என்ருன் ஜீவநாதன்.

கல்பாவதி விஸ்மயத்துடன் ஜீவநாதனைப் பார்த்து, ஐயா! என் மனம் சஞ்சலப்படுகிறது. உம்மையும் அறியாமல் ரவிகேஸரி பிழைத்திருக்கலாகாதா? அவர் உயிருடனிராவிடில் இக்கடிதம் எழுதுவது எங்கனம்! நான் பிசாசு, பூதங்களில் நம்பிக்கை யற்றவள். மனிதனுல் செய்யக்கூடிய காரியங்களுக்கும், மறைவாய் நடத்தும் வேலைகளுக்கும் நமக்கு வியத்யாஸம் தெரியுமல்லவா? நல்லது நாம் இப்பொழுது பிரிந்து போகலாம் என்று கூறி நடந்தாள்.

---

## மறுப்பு

ஸ்ரீமதீ! நீ என்ன செய்கிருய். பாடம் படித்தாயா? அத்தையம்மாளும், அம்மாவும், அத்தின்பேரும் ஊருக்குப்போய் விட்டார்களென்று வியஸனப்படுகிருயோ! முன்போல் பாடம் படிக்கிறதில்லை. அப்பாவுடன் சொல்லட்டுமா என்று கல்பாவதி கேட்டாள்.

அக்கா! புதிய மாமாவுடன் கடல்கரைக்குச் சென்றிருந்தேன். அவர் சில நீதிக்கதைகளைக் கூறினுர். அவைகள் எனக்கு மிகப் பிரியமானவை! என்னைக் கோபிக்காதிருக்கிருயா? உனக்குச் சொல்கிறேன் என்று ஸ்ரீமதி கூறினுள்.

ஸ்ரீமதி! அப்பா வருவதற்குள் உன் பாடத்தை முடித்துவிடு. இரவில்கதை சொல்லலாம் என்று அவள் முகத்தைத் துடைத்துப் பொட்டிட்டாள் கல்பகம்.

ஜீவநாதன், ஸ்ரீமதி! ஸ்ரீமதி! என்று கூப்பிட்டுக்கொண்டே அவ் விடம் வந்தான். அவனுக்கு அந்த வீட்டில் அதிக ஸ்வதந்திரமுண்டு. ஹரேசனுக்கு அடுத்த எஜமான் பதவியை வகித்திருந்தான். அவ னில்லாமல் ஹரேசன் ஐந்து நிமிஷம் தனித்திரான்.

மனோன்மணியின் சரீர ஸுகம் விருத்தியாகவேண்டுமானல் பல் லாரிக்குச் செல்லவேண்டுமென்று வைத்தியர்கள் அபிப்பிராயப்பட்ட னர். ஸுந்தரி அவளை யழைத்துக்கொண்டு பழைய ஊருக்குச் சென் ருள். ரகுநாதன் புருஷத் துணையாய்ப் பின் தொடர்ந்தான். சமையல் காரன் சங்கரி முதலிய ஸேவகர்களும் போயினர்.

ஹரேசன் அவர்களை யனுப்ப இரயிலுக்குச் சென்றிருந்தான். கல்பாவதி, ஸ்ரீமதி, ஜீவநாதன் ஆகிய இவர்களே அந்த வீட்டிலிருந் தார்கள். ஜீவநாதன் சென்னை வந்து ஒருமாதமாயிற்று. வீட்டி லுள்ளவர்களெல்லாம் அவனிடம் அதிக வாஞ்சை கொண்டிருந்தார் கள். ஜீவநாதனும் தன் காலம் ஸுகமாய்க் கழிய வழி கிடைத்த தென்று ஸந்தோஷித்தான். ஸ்ரீமதியுடன் விளையாடுவதும், பேசுவதும் அவனுக்கு அதிக உத்ஸாகத்தைத் தந்தன.

கல்பாவதி! உன்னுடைய பிராந்தி நீங்கிற்ரு? இல்லையா? என் அடிமையை எப்பொழுது நீக்கப்போகிருய். நான் ஒரு கைதியைப் போல் யாதொரு வேலையும் செய்யாமல் உட்கார்ந்திருப்பது உனக்கு நியாயமாய்த் தோன்றுகிறதா என்று ஜீவநாதன் கேட்டான்.

ஐயா! நான் ஒருநாளும் தோல்வியடையேனென்பது நிச்சயம். ஜெயிப்பவள் நானே. தாங்கள் தற்பொழுது உண்மையை யறியாவிட் டாலும் என்னல் எவ்விதத்திலும் மெய் வெளியாகுமென்பதை நம்புங் கள். பகவத் கிருபை இன்னும் வெளியாகவில்லை. அதனலல்லவோ தடை. ரவிகேஸரி உயிருடனில்லாவிடில் அடுத்தடுத்து எனக்குக் கடித மெழுதுவாரா? என்ருள் மாதரசி.

ஒருநாளாவது உன் கண்ணில் படாமல் கடிதம் உன்மேஜையில் வைக்கப்படுகிறதல்லவா? அந்த உண்மையைக்கூட உன்னல் கண்டு

பிடிக்க முடியவில்லையே! ரவிகேஸரி உன்னை "கண்ணே! பொன்னே! மணியே!" என்று வர்ணித்து உருகிப் போகிறதாய்க் கூறுகிருய். உன் மேல் பிரியமிருக்குமாகில் மறைந்திருப்பானு? நீ அவனிடம் உண்மை யாய் அன்பு வைத்திருந்தால் உன்முன் வந்திருக்கமாட்டானு? என்னை ஏன் பரீக்ஷிக்கிருய்? நீயே அவனைப்போல் எழுதக் கற்றுக்கொண்டிருப் பாயென்று எண்ணுகிறேன் என்று ஜீவநாதன் கூறினுன்.

கோபத்துடன் ஒருமுறை ஜீவநாதனைக் கல்பாவதி பார்த்தாள். அவளுடைய அழகு அந்த ஸமயத்தில் வெகுவாய்ப் பிரகாசித்ததே யன்றி விகாரப்படவில்லை. வாய்திறந்து பேசாமல் வேருெரு அறையை நாடிப் போகலானுள்.

ஜீவநாதன் அவளை மறைத்துக்கொண்டு "கல்பாவதி! உனக்குப் பலமுறை எடுத்துரைத்தும் பிரயோஜனப் படவில்லை. எல்லோர் வரமும் கிடைத்திருக்க உன்கருணை ஏன்கிட்டவில்லையோ! இன்று கடைசி முறை கேட்கிறேன். நீ என்னை ஆதரித்து விவாகம் செய்துகொள்கிருயா? மாட்டாயா?" என்பதற்குள் என்ன? புருஷன் உயிரோடிருக்கையிலேயா புனர்விவாகம்? உமக்குப் புத்தி எங்கே போயிற்று? பைத்யம் பிடித்துவிட்டதோ? உன்மத்தராய் விட்டீரோ! பிறன் மனைவியை இச்சிக்க உமக்கு வெட்கமில்லையா? இனியொருமுறை என்னைப்பார்த்து இவ்விதம் பேசுவீராகில் நான் என்ன செய்வேனே தெரியாது. இனி என்முன் வராதீர். உமக்கும் எனக்கும் இனி ஸம்பாஷணை வேண்டாம். விலகும் என்றுள் கல்பாவதி.

ஜீவநாதன் வருத்தத்துடன் "கல்பாவதி! இனி உன்னை நான் பார்ப்பதில்லை. நீயே என்னைத் தேடியலையும் காலம் ஸமீபத்தில் வரும். அப்பொழுது அதிக ஸங்கடமடைவாய். நான் இனி உன்னுடன் ஸம்பாஷிக்கப் போகிறதுமில்லை. உன்தந்தை வந்ததும் விடைபெற்றுச் செல்கிறேன். கல்பாவதி! உன்மனம் நோகச்செய்தவனை இனி நினைக்க மாட்டாயல்லவா? உன்வாயால் போக விடைகொடு. அதுவே போதுமானது" என்றுன்.

கொஞ்சம் நிதானத்துடன் அவனைத் திருஷ்டித்தாள். ஏதோ ஒரு ஞாபகம் வந்தது. ஆனுல் அதுவும் மறைந்தது. "ஐயா! என்ஜென்மத்தை நான் இனி வைத்திருக்கமாட்டேன். என்தந்தை உம்மை

மணக்கும்படி கட்டளையிட்டிருப்பதை நீர் அறிவீர். நான் உம்மைக் கடிந்தது பெரியகுற்றமே! நீர் கோபிக்கவேண்டாம். பெண்புத்தியால் கூறிவிட்டேன். நீர் செல்வீராகில் என்பிதா என்முகத்தைத் திரும்பிக் கூடப் பாரார். என் உயிர்போகும் உபாயத்தை நான் தேடிக்கொண் டிருக்கிறேன். தாங்கள் ரவிகேஸரியைச் சந்திப்பீர்களாகில் என் பூர்ண அன்பால் அவரை நமஸ்கரித்து விடைபெற்றுக் கொண்டதாய்க் கூறுங் கள். இதுவே நீர் செய்யும் உபகாரம். மன்னிக்கவேண்டும்" என் ருள் கல்பாவதி.

ஜீவநாதன் பேசவில்லை. தன்வாஸஸ்தானம் சென்ருன். பிரஸன்ன மாயிருந்த அவன் முகம் விவர்ணமானதைப் பார்த்தாள் கல்பாவதி. ஆகா! ஓர் உத்தமனுடைய மனம் நோகப்பொறுமையில்லாமல் வசனித் தேனே என்று வருந்தினுள். தெய்வசித்தம் எப்படியோ! என்ன நடக் கிறதோ பார்க்கிறேன் என்று அங்குள்ள ஸோபாவில் படுத்தாள். ஸ்ரீமதி இவர்கள் பேசிக் கொண்டிருக்கையிலேயே விளையாட ஓடிவிட்டாள்.

ஹரேசன் வீட்டுக்கு வந்தவுடன் ஜீவநாதனைக் கண்டான். ஜீவ நாதன் முகம் வாடியிருக்கவே உடம்பென்ன வென்று வினவினுன். சற்றுத் தலைவலிக்கிறதென்று அவன் கூற மருந்து தேய்க்கட்டுமா என் ருன் ஹரேசன்.

ஜீவ.—வேண்டாம். இப்பொழுது ஸௌக்யமாயிருக்கிறது. எல் லோரும் இரயிலேறிச் சென்ருர்களா ?

ஹரே.—போய்விட்டார்கள். எழுந்திரு, சாப்பிடலாம். கல்பா வதி, ஸ்ரீமதிகளெங்கே? தனியே யிருப்பானேன்?

ஜீவ.—ஸ்ரீமதி இத்தனை நேரம் என்னுடன் விளையாடினுள். அவள் அக்காளிடம் சற்று முன்னுடிச் சென்ருள்.

ஹரே.—கல்பாவதியின் ஸம்மதம் கிடைத்ததா இல்லையா? உனக்கு அவளை மணப்பதில் பூர்ண இஷ்டம் தானே.

ஜீவ.—ஐயா! என் அபிப்பிராயத்தை முன்னமே கூறி யிருக்கி றேன். உமது மகள் சொல்லவேண்டிய பதிலையே எதிர்பார்த்திருக் கிறேன்.

ஹரே.—ஜீவநாதா! என்ன ஒருவாருய்ப் பேசுகின்ருய். என்மேல் உனக்கு ஏதாவது வெறுப்பேற்பட்டிருக்கிறதா? ஒளியாமற்சொல்.

ஜீவ.—ஐயனே! தங்கள்மேல் என்க்கு அப்பிரியம் பிறக்க ஒரு நியாயமுமில்லே. நான் என் காலத்தை ஸந்யாஸத்தில் கழிக்க மனங் கொண்டிருக்கிறேன்.

ஹரே.—பொறு ஜீவநாதா! என் ஆசையை வியர்த்தமாக்காதே. இன்றைக்கு அவனைக் கேட்கிறேன். ஸரியான மறுமொழி சொல்லா விடில் நானும் உனக்குத் துணையாய் வருகிறேன்.

ஜீவ.—தாங்கள் அவ்விதம் கூறலாகாது. என்னை மணக்காவிடி னும் வேறு யாரையாவது கல்பாவதி விவாகம் செய்துகொள்ள இஷ்டப் படுவாள். ஸ்ரீமதி அறியாத குழந்தை. உங்கள் தர்மபத்நியோ கபட மறியாத மாதரசி. இவர்களுடன் நில்லாமல் புத்திர சோகத்தால் துய ரப்படும் இருவர் உம்மையே கெதியென்று நினைத்திருக்கிறார்கள். தங் களுக்கு ஸந்யாஸம் தகுமா?

ஹரே.—வத்ஸா! என் வார்த்தையை அங்கீகரிக்காத பெண்ணால் எனக்கு வரும் ஸுகமென்ன? மனைவி உயிருடனிருப்பாளென்ற ஆசை யை விட்டொழித்தேன். ஸ்ரீமதியை ஸுந்தரி பார்த்துக்கொள்வாள். மூர்க்கப் பெண்ணுக்கு ஏதாவது பொருளை ஆதாரமாயேற்படுத்திவிடு கிறேன். அவஸரப்படாதே.

ஜீவ.—ஐயா, ஐயா! நீங்கள் உரைப்பது வெறுப்பாலாகும். நான் உண்மையில் ஸந்யாஸியாகவே வேண்டும். இல்லையேல் நான் பிழைத் திருந்தும் பிரயோஜனமில்லை. என்னை மன்னித்து விடை கொடுங்கள்.

ஹரே.—ஜீவநாதா! என்னைவிட்டு அகலுவாயாகில் அந்தக்ஷணமே நானும் என் குடும்பத்திலிருந்து நீங்குவேன். நிச்சயமென்று நம்பு. இது பொய்யல்ல. கல்பாவதிக்கு நான் ஸந்தோஷத்தைக் கற்பிக்க நினைத்ததெல்லாம் ஸங்கடமாய் முடிந்தது.

ஜீவ.—தங்கள் வார்த்தைப்படியே சில நாள் தங்குகிறேன். அதற் குள் முடிவு தெரிந்துகொண்டு நமது யோசனையை நிறைவேற்றத் தொடங்குவோம். என்மேல் ஆயாஸம் வேண்டாம். அடுத்த மாதத் துக்குள் பதிலளிக்கப் பிரார்த்திக்கிறேன்.

ஜீவநாதா! நீ ஏன் வருத்தப்படுகிறாய். உலகத்தை யறியாத உனக்குக்கூட துன்பத்தின் கொடுமை யிருக்கிறதாக எண்ணுகிறேன்.

வா! ஆகாரமுண்டபிறகு பேசுவோம். என்று கூறிக் கல்பாவதியை அழைத்தான்.

அவள் வாட்டத்துடன் பிதாவினெதிரில் நின்றாள். ஸ்ரீமதி எங்கே என்று கேட்க அவள் சாப்பிட்டுத் தூங்கச் சென்றாளென்று பதிலுரைத்தாள்.

ஆனால் நாம் மூவரும் உண்போமென்று ஹரேசன் ஜீவநாதன் கல்பாவதிகளோடு பாகசாலைக்குச் சென்றான். பரிசாரகன் பரிமாற வயிறு நிரம்ப உண்டு உலக ஸம்பிரதாயங்களை இடையிடையே பேசிக் கொண்டிருந்தார்கள்.

---

## மன்னிப்பு

நான் இதுவரையில் பொறுமையுடனிருந்தேன். கல்பாவதி என்னை முற்றிலும் விரோதிக்கிறாள். அவளுடைய பகையை ஏற்று இந்த உலகத்தில் நானிருப்பதைவிட இறப்பதே நலம். தற்கொலை பாபமாகுமென்றால் துறவியாகவேண்டும். ஹரேசனிடம் உண்மையைக் கூறிவிடவா? அவன் மகாபுருஷன். கூர்மைபுத்தியுள்ளவன். கல்பாவதியின பிரதம விவாகத்தை வெளியிட்டாலன்றி எனக்கு விமோசனம் கிடைப்பதருமை. இலவுகாத்த கிளிபோல் நானிருப்பதில் என்னபலன். எனக்கு விவாகமே வேண்டாம். என்று தந்தையுடன் கூறுகிறாளேயன்றி ரவிகேஸரியைப் பாணிக்கிரகணம் செய்துகொண்டதை வாய்விடவில்லை. இருக்கட்டும். இன்று பார்த்து அவளுடன் பேசி உண்மையை ஹரேசனிடம் உரைப்பதாய்ச் சொல்லுகிறேன். அதற்கென்ன செய்கிறாள் என்று ஜீவநாதன் கல்பாவதியின் வரவை தோட்டத்தில் எதிர்பார்த்தான்.

அவளும் பலவாறு யோசித்துக்கொண்டே உத்யான வனத்துக்குள் நுழைந்தாள். ஜீவநாதனைக்கண்டதும் வியஸனத்துடன் "ஐயா! ரவிகேஸரி சிலதினங்களாய்க் கடிதமெழுதவில்லை. இதுவரையில் ஏதோ ஒருவிதமான திருப்தியை யடைந்திருந்தேன். உம்மைக்கோபித்துக் கொண்டதுமுதல் இன்றுவரையில் ஒரு ஸங்கதியும் தெரியவில்லை. என் பிதாவின் கோபம் அதிகமாயிருக்கிறது, அவரும் என்னுடன்

பேசுவதை ஒழித்தார். தாங்களும் அன்றுமுதல் என்னுடன் ஸம்பாஷிப்பதில்லை. எல்லோர்பகையும் என்னைச் சூழ்ந்திருக்கிறது. நான் உயிர்விடத் துணிந்து விட்டேன். அறியாக்குழந்தையை என்னிடம் நம்பிக்கையோடு விட்டுச் சென்றிருப்பதால் அதற்கு இது ஸமயமல்லவென்று நிச்சயித்தேன். தாங்களாவது என் தந்தையின் மனக் கவலையை மாற்றலாகாதா? என்று இரக்கத்துடன் கேட்டாள் கல்பாவதி.

ஜீவநாதன் அவளை நோக்கி "மங்காய்! உன்பிதாவின் கவலை உன்னுல் நீங்கவேண்டும். நீ ஏன் இறக்கிருய்? ரவிகேஸரியை நீ பார்க்க வேண்டுமானுல் என் சொற்படிகேள். என்வார்த்தை உனக்குப் பிடிக்காவிடில் அவன் ஆசையை ஒழித்துக்கொள். இதுதான் நான் உனக்குக் கூறமுடியும்.

நாளையதினம் நான் ஊருக்குச் செல்கிறேன். நீர் இனி பயமில்லாமல் காலம் கழிக்கலாம். உன்னைப் பிடித்த சனி தொலைந்ததென்று நாளையதினம் ஸ்நானம் செய். எதாவது தவறி நடந்திருப்பேனுகில் மறந்துவிடு என்று சொன்னுன்.

கல்பாவதி கல்சிலையைப்போல் அசைவற்று நின்ருள். ஆகா! நான் கனவு காண்கிறேனு என்ருள். இல்லை, நினைவே! நீ உன் தந்தையிடம் மறைத்துவைத்துள்ள ஸங்கதியும் மெய்யே! அதை அவரிடம் கூறலாமென்றிருக்கிறேன் எனவே,

ஹா ஹா மோசம்! அதைமட்டும் என் தந்தையிடம் கூருதீர். ஏற்கெனவே என் தந்தை வருத்தமுற்றிருக்கிருர். நான் இறந்தபிறகு தெரிவியும். இந்த உபகாரம் செய்தால் உமக்குச் சிரேயஸ்ஸுண்டு என்ருள் கல்பாவதி.

பித்ரு துரோகி என்ற பெயர் கிடைத்தால் உன் மனம் வருந்தாதா? ரவிகேஸரி உன் தந்தைக்குப் பயந்து ஒளிந்திருக்கிருனென்று நினைத்திருக்கிருய். அவன் உயிருடனிருந்தால் தன் பெற்ற தாய் தந்தைகளின் சோகத்தைத் தீர்த்திருக்கமாட்டானு? பெண்ணுய்ப் பிறந்த உனக்குத் தந்தையினிடம் வாஞ்சையிருப்பதுபோல் அவனுக்கிராதா? உன்னுடன் நான் பேசுவதே தவறு என்று எழுந்தான். கல்பாவதி தடுத்து,

ஸத்யமாய்ச் சொல்லுகிறேன். நான் விரக்தியுள்ளவள். ஒரு பொருளிலும் ஆசை வைத்திலேன். உமக்கு என்மேல் அன்பிருக்குமாயின் நான் சொல்வதைக் கேளும். என் பிராணநாதர் கட்டளைப்படி உம்மை நேசிக்கிறேன். உமதடியாளாய் ஊழியம் செய்கிறேன். நானும் விரும்பும்வரையில் தேக ஸம்பந்தம் நீர் அபேக்ஷிப்பதில்லை யென்று பிரமாணம் கூற முடியுமா ? என்றாள்.

என்னை எப்பொழுது எஜமானனாய்க் கருதினையோ அப்பொழுதே நீ என்னிஷ்டப்படி நடக்க வேண்டுமல்லவா ? மற்ற நிபந்தனைகளுக்கு நான் உட்படுகிறேன். நீ என்னைப் புருஷனாய்ப் பலர் முன் னிலையில் அங்கிகரித்தாலன்றி நான் உன்னை ஒப்புக்கொள்ளேன். சீக்கிரம் பதிற்சொல் என்று ஜீவநாதன் கூறினான்.

கல்பாவதி என்ன செய்வாள். ஐயோ! பாபிகளா! என்னை இக்கோலம் கண்டீர்களே ! நான் இறக்க ஒருகாலமும் வேண்டுமா? என்னை ஒருவனுக்கு மணந்து கொடுத்ததுடன் நில்லாமல் மறுவிவாகம் செய்யவும் மனங்கொண்டீர்களே! இறந்தவருக்குச் சித்தஸ்வாதீன மில்லையா? ஐயையோ! இவ்விதம் வருமென்று நான் கொஞ்சமேனும் எண்ணவில்லையே! ஜென்மம் நீக்க உபாயமில்லையா? தெய்வமிருந்தால் என் கவலையை மாற்றமனங்கொண்டிராதா ? பக்திசெய்தால் முக்திகிடைக்குமென்று கூறுவது பொய்யாயிற்றே! ஒரு யுக்தியும் தோன்றவில்லை. வருவது வந்தே தீரும். என்னால் என் தாய்தந்தையர் வீண்வாதம் செய்து மனஸ்தாபங்கொள்வார்கள். நான் மாண்டுபோவதே நலமாகும், என்று வாய் பேசாமல் நடந்தாள்.

இனித் தாமதிக்கலாகாது. நான் இவளை எவ்விதத்திலும் காப்பாற்ற வேண்டும். இதோ ஹரேசனிடம் செல்கிறேன் என்று ஜீவநாதன் எழுந்து அவனிருப்பிடம் போனான். ஹரேசன் யோசனையுடனிருக்க அவனை ஜீவநாதன் பார்த்து "ஐயா! கல்பாவதி உயிர்விடப்போகிறாள். இத்துடன் மூன்றுமுறை என்னிடம் சொல்லியிருக்கிறாள். அவளை ஜாக்கிரதையாய்க் காப்பாற்றுங்கள். உங்களுடன் சில இரகஸ்யங்களைக் கூறவிருக்கிறேன். முதலில் அவளை ரக்ஷியும். நான் பிறகு தெரிவிக்கிறேன். இனி அரை க்ஷணமும் நான் தாமதிக்க முடியாது. உங்களுக்கு மனமிருந்தால் இரண்டு பெண்களுடன் என் தேசம் வர

லாம். உண்மை விஷயங்களை அவ்விடத்தில் நிரூபித்துக் காட்டு கிறேன்" எனவே,

என்ன! என்ன! என்மகள் கல்பாவதியா பிராணனைவிடத் துணிந்தாள்! எதற்காக? விவாகம் வேண்டாமென்றால் நிறுத்தி விடுகிறேன். இதற்காகப் பிராணனை இழப்பானேன் என்று ஹரேசன் மகளைத் தேடி ஓடினான். துக்கமுகத்துடன் தன் ஜென்ம விருத்தாந்தங்களை எண்ணி எண்ணிக் கண்ணீர்விடும் கல்பாவதியின் தலையை நிமிர்த்தி "பெண்ணே! எதற்காகச் சிந்திக்கிறாய். உனக்குக்கல்யாணத்தில் பிரியமில்லாவிட்டால் நான் நிர்ப்பந்தப் படுத்துகிறதில்லை. நீ ஏன் உயிரைவிடுவதாய் ஜீவநாதனிடம் கூறினாய். பிராணனை இழக்கிறதில்லையென்று பிரமாணம் செய் என்று கேட்டான்.

அப்பா! நான் மகாபாபி, என்னைத் தீண்டாதீர். சண்டாளியென்று நினையுங்கள். என் ஆசை உங்களுக்கு வேண்டாம். ஜீவநாதனைக் கேட்டால் ஸகல ஸங்கதிகளும் வெளியிடுவார் என்றாள் பெண்மணி.

ஜீவநாதன் அன்யனாயிற்றே! அவனுக்கு உன் ஸமாசாரங்கள் தெரிவதெங்கனம்? உன் வருத்தத்தை வெளியிடு என்றான் பிதா!

கல்பாவதி மௌனியாயிருந்தாள். ஸ்ரீமதி! ஜீவநாதனை அழைத்து வாவென்று ஹரேசன் கூற அவள் சென்று அவனிடம் தெரிவித்தாள். ஜீவநாதன் ஓடிவந்து என்னவென்று கேட்டான். நீ சில உண்மைகளைக் கூறுவதாய்த் தெரிவித்தாயே! அவ்விதமே என் மகளும் உரைக்கிறாள். அதைத் தயவுசெய்து இன்னதென்று வெளியிடுவாயாக என்றான் ஹரேசன்.

நான் தக்க பிரமாணங்களில்லாமல் கூறுவேனாகில் பொய்யனாவேன். முதலில் உங்கள் மகளின் ஸந்தேகத்தைக் கூறும்படி கேளுங்கள். அவள் தெரிவித்தால் நான் ரூபிக்கிறேன் என்றான் ஜீவநாதன்?

கல்பாவதி! உங்களிருவருக்கும் என்ன வருத்தமிருந்தாலும் என்னுடன் வெளியிடுங்கள். நான் அதைத் தீர்க்கிறேன். எனவே,

அப்பா! ஸத்யமாய்ச் சொல்லும். பாதகம் செய்த பெண்ணை மன்னிக்கிறீர்களா? மெய்தானா? யார்மேலும் கோபிக்கிறதில்லை யென்று பிரமாணம் செய்யும், ஸமாசாரங்களை உரைக்கிறேன் என்று கல்பாவதி எழுந்து பிதாவின் பாதங்களில் விழுந்தாள்.

என் அருமைப்பெண்ணே! உன்னை மன்னித்தேன். எத்தகைய குற்றமாயிருந்தாலும் நான் பொறுத்துக் கொள்ளுகிறேன். ஸத்யம், எழுந்திரு என்று அவளைத் தூக்கினுன் ஹரேசன்.

பிதாவே! என்னைச் சிக்ஷித்தாலும், ரக்ஷித்தாலும் நீங்களே கெதியென்றெண்ணிச் சொல்கிறேன். சில மாதங்களுக்குமுன் இறந்து போன ரவிகேஸரியை நான் புருஷனுய் மணந்துகொண்டிருந்தேன். தங்களுக்குத் தெரியாமல் என்னுடைய 13-வது வயதில் ஷை கல்யாணம் என் அன்னை, அத்தை முதலியவர்களால் நடத்தப்பட்டது. அதை உத்தேசித்தே என் தாய் தந்தைகளிடம் நான் கோரும் புருஷனுக்கே என்னை விவாகம் செய்து கொடுக்கும்படி உறுதி வாங்கிக் கொண்டது. அவர் இறக்கவே என் உயிர்போனது போலாயிற்று. அதை எண்ணியே நான் தங்களை வரம் கேட்டது. தற்காலம் ஜீவநாதனை மணக்கும்படி கூறினதற்கு மறுத்ததும் அந்தக் காரணத்தாலேயே என்றறியுங்கள். இதுவே அந்தரங்க ஸமாசாரமாகும் என்ருள் கல்பாவதி. ஹரேசன் திடீரென்று சாய்ந்தான். ஜீவநாதன் அருகே யிருந்ததால் கீழே விழவில்லை. "ஐயா! வருந்தாதீர். ரவிகேஸரியின் கடிதத்தைப் பற்றிச் சொல்லுவாள் தங்கள் பெண். பிறகு நான் கூறுகிறேன். மனதை அலைய விடாதீர்" என்ருன் ஜீவநாதன்.

என் அருமைத் தந்தையே! ரவிகேசரி இறக்கவில்லை. அவர் அடிக்கடி எழுதும் கடிதங்கள் என் மேஜையிலிருக்கின்றன. ஜீவநாதன் அவர் இருப்பிடத்தை அறிந்தும் ஒளித்து வருகிருர். முதல் புருஷன் உயிருடனிருக்கையில் இரண்டாவது புருஷனை விவாகம் செய்துகொள்ளலாமா? இவரையே நியாயம் கேளும் என்று கல்பாவதி சொல்லித் தன்னிடமிருந்த கடிதங்களைக் கொடுத்தாள்.

ஹரேசன் அவைகளைப் பிரித்துப் படித்து ஒன்றும் தோன்ருமல் ஜீவநாதனை உற்றுப்பார்த்தான். "ஐயா! என்னிடம் உமக்கு நம்பிக்கையிருந்தால் மற்ற விஷயங்களை நான் உரைக்கிறேன். தாங்கள் ஒப்புக் கேள்வது கஷ்டம்" என்று ஜீவநாதன் கூறினுன்.

கல்பாவதி! உன்னிடம் குற்றமில்லை. பொறுத்தேன். நீ எனக்காகப் பிராணனை வைத்துக்கொண்டிரு. சற்று ஜீவநாதனேடு தனித்துப் பேசித் தெரிந்துகொண்டு உன்னைப் பார்க்க வருகிறேனென்று

மொழிந்து "ஆப்த மித்திரா! வா போகலாம். என் மனங்களிக்க மங்கள ஸமாசாரம் சொல்வாயாக" என்ருன் ஹரேசன்.

---

## சோகம்

கல்பாவதி தன் கட்டிலில் படுத்துக்கொண்டு உருக்கமாய்ப் பாடலாஞள். அவளுடைய கண்ட நாதம் வெகு இன்பமாயிருந்தது.

(1) மன்னன்சொன்ன வாக்கியத்தை மனதில்கொண்டு தவிக்கிறேனே
என்னசெய்வேன் துர்விதிக்கு எங்குசெல்வேன் பராபரனே!

(2) தந்தைகேட்ட கேள்விக்குத் தன்குறையைச் சொல்வேஞே
விந்தையான என்வாழ்வை விவரித்தால் நகையாரோ!

(3) பித்தங்கொண்ட என்மனதை ஸ்வஸ்தம்செய்ய யாருளரோ
சித்தக்குறை நீங்கிநானும் தெளிவடைய இரங்காயோ!

(4) மனஇருளை நீக்கநீயும் மருந்தொன்று அருளாயோ
தினகரனே என்னைக்காராய் திடம்தந்து ஆள்வாயே!

(5) அபலையான என்மனதை ஆட்டுவது தகுமோ
ஸபலவழி உரையாயோ பதமளிக்க வாராயோ!

ஈசா! தேவா! பரமனே! தயாநிதே! என் தந்தையையும் வசமாக்கிக் கொண்டான் ஜீவநாதன். இன்றையதினமெல்லாம் நான் தனியேயிருக்கிறேன். ஸ்ரீமதிக்கு என் மனக்குறை தெரியாது. அக்கா! என்ன உடம்பு என்று கேட்கிருள். பிதாவின் மனதில் ஏதோ ஒரு கவலையிருக்கிறது. அதை யறிய முடியவில்லை. ஜீவநாதனேடு அடிக்கடிக் கண்ணீர்விட்டுப் பேசுகிருர். ஐந்தாறு தினங்களாய் அவனுக்கு நடக்கும் ஆசார உபசாரங்களுக்கு அளவில்லை. அவனை எங்கேயோ அனுப்ப உத்தேசித்திருக்கிருர் என்பிதா. போனல் நலமே என்று தானே பேசிக் கொண்டாள்.

ஆகா! ஜீவநாதனைக் கண்டால் உள்ளத்தில் ஏதோ ஒருவித அன்பு உதிக்கிறது. இத்தனை நாளுமில்லாத பிரியம் எங்கிருந்துண்டாயிற்று. ஒருவேளை அவன் ஊருக்குப் போகிருனென்ற காரணத்தாலிருக்குமா? சீ! சீ! அவன் இவன் என்று எதற்காக வைகிறேன். அவன் என்ன கெடுதி செய்தான். ஐயோ! பாவம். என்னுடைய துர்ப்புத்தியால் அவனைத் தூஷிக்கிறேன். ஊருக்குப்போய் விட்டால் எனக்கு எரும்

ஸுகமென்ன? இங்கிருந்தால் ரவிகேஸரியின் பெயரையாவது கேட்க லாம். அவனும் செல்வானாகில் எனக்குத் துக்கமே அதிகரிக்குமல்லவா?

என்னிடம் சொல்லிக்கொள்ள வருவானா? அவன் வந்தால் நான் என்ன கூறவேண்டும்? என்னிடம் தனக்குள்ள அன்பைப் பலமுறை தெரிவித்திருக்கிறான். மூர்க்க புத்தியுள்ள நான் அதைக் கவனிக்க வில்லை. இனி எப்பொழுது வருவான். ஒருநாளும் வரமாட்டான். ஸந் யாஸியாய் விடுவானோ? ஒன்றையுமறியேன். அதோ யாரோ வருகிறது போல் சப்தம் கேட்கிறது. ஜீவநாதனாயிருப்பானா? இன்னும் சில தினங் களிருந்து போவென்று கூறட்டுமா? எதற்காக என்று கேட்பானாகில் என்ன பதில் சொல்வேன் என்று கல்பாவதி வருத்தமுற்றாள்.

பெண்ணரசே! நான் இன்று பொம்பாய் நகருக்குப் பிரயாணமாகி றேன். இனி உன்னைக் காண ஒருநாளும் வாரேன். என் பயம் நீங்கி ஸுகமாயிரு என்றான் ஜீவநாதன்.

இந்த வார்த்தையைக் கேட்டதும் கல்பாவதி தன்னிருகைகளால் முகத்தை மூடிக்கொண்டு அழலானாள்.

நான் வந்ததே உனக்கு அழுகை வருகிறது. என் பாபம். உன்னைக் காணாமல் சென்றிருக்கலாகாதா? கல்பாவதி! இதோபோய் விட்டேன். கண் திறந்து பார் என்று நடந்தான் ஜீவநாதன்.

அவன் கூறினதைக் கேட்டதும் "நான் அழவில்லை. இப்படி வாருங்கள். உங்கள்மேல் எனக்குக் கோபமே இல்லை. என்னுடைய குற் றங்களை நினைத்து வருந்துகிறேன். சற்று உட்காருங்கள். துக்கம் நின்றதும் பேசுகிறேன்'' என்று கூறவே,

ஜீவநாதனுக்கு அமிருத வர்ஷம் பொழிந்ததுபோலாயிற்று. உன் மனப்படியே இங்கிருக்கிறேன். துக்கத்தை ஸமாதானப் படுத்திக் கொள். உன்னுடைய இன்பகரமான பாட்டைக் கேட்டு நான் பரவச மடைந்தேன். அது என் காதில் இன்னமும் துவனிக்கிறது என்றான்.

கல்பாவதி கண்களைத் துடைத்துக்கொண்டு எழுந்து வெகு மரி யாதையுடன் நின்றாள். ஜீவநாதன் அவளையே பார்த்துக்கொண்டிருந் தான். மாதரசி ஸோபாவிலுட்காரும்படி அவனை வேண்டினாள். தனக்கு இத்தனை மரியாதை கிடைத்ததே என்று மன மகிழ்ந்தான் ஜீவநாதன்.

ஐயா! உங்களே நான் உலக வழக்கப்படிக்கு உறவு வைத்து அழைக்கா வண்ணம் என் மன்னர் வாயைக் கட்டிவிட்டார். ஐயாவென்றழைப்பது அயலாரைக் கூப்பிடுவதுபோலாகும். தங்களே ஒரு புதல்வனுய் என் அத்தையும், ரகுநாத பிரபுவும் பாவித்திருக்கிருர்கள். என் தந்தையும் பக்ஷத்துடன் தங்களே நடத்தி வருகிருர். நானும் என் துர்க்குணத்தை விட்டுவிடுகிறேன். இந்த வீட்டைவிட்டுச் செல்லுகிறதில்லே என்று எனக்கு வாக்குக் கொடுங்கள். அதுவே நான் வேண்டும் வரமாகும் என்றுள் மங்கை.

ஜீவநாதன் அத்யாச்சர்யத்துடன் "கல்பாவதி! நீ கூறினது உண்மையாகில் எனக்கொரு உறுதிப்பத்திரம் எழுதிக்கொடு. ஒருமாதம் எனக்குப்போக அனுமதி தருவாயாகில் என்வேலேயை முடித்துக் கொண்டு வருகிறேன்" என்ருன்.

**கல்பாவதி.**—ஆகா! நீர் கேட்டபடியே ஸம்மதிப்பத்திரம் வரைந்து கொடுக்கிறேன். ஒருமாதம் எங்கேசெல்லப் போகிறீர்? அதைக்கூறும்.

**ஜீவ.**—என்வேலேகளில் சிறிது முடியாமலிருப்பதால் நான் போகவேண்டியது அவசியமாயிருக்கிறது.

**கல்பா.**—இங்கிருந்தே நடத்தக்கூடாதா? சரீரசிரமத்துடன் பிரயாணம் செய்தே தீரவேண்டுமா? ஸாத்யமாஞல் 15-நாளிருந்து வாரும்.

**ஜீவ.**—நான் வருவதில் உனக்கென்ன திருப்தி. என்னேக் கண்டால் நடுங்கிக்கொண்டிருந்த நீ இப்பொழுது எதற்காக என்னே இருக்கும்படி கூறுகிருய்.

**கல்பா.**—நீங்களிங்கிருந்ததாலல்லவோ ரவிகேஸரியின் கடிதங்கள் எனக்குக் கிடைத்தன. உங்களுடைய தயவிருந்தால் அவரை நேரில் காணலாமல்லவா?

**ஜீவ.**—உனக்குச் சித்தப்பிரமை அதிகரித்திருக்கிறது. ரவிகேஸரி உயிருடனிருக்கிறதாவது. அவனுடைய கையெழுத்துக்களேப் போல் யாரோ எழுதியிருக்க வேண்டும்.

**கல்பா.**—இந்த வார்த்தையைத் தாங்கள் கூறும்பொழுதெல்லாம் எனக்குக் கோபம் வருகிறது. பெண்புத்தி பிடரியிலே என்பதை மெய்ப்பிக்கிறேன். உங்கள் மனதில் ஒளித்து வைத்திருப்பதைச் சொல்ல மாட்டீர்களே.

ஜீவ.—நீ உன் புருஷன் வார்த்தைப்படி நடப்பதில்லை யென்று ஊர்ஜித புத்தியுடனிருப்பதுபோல் நானும் என் மித்திரன் விஷயமாய்த் தெரிவிக்கிறதில்லை யென்று சபதம் செய்துகொண்டிருக்கிறேன்.

கல்பா.—அவர்கூறியபடி நடப்பதானால் ஒன்றும் விடாமல் சொல்லுகிறீர்களா?

ஜீவ.—வாயால் கூறினுல் போதாது. உன் தந்தை நம்மிருவருக்கும் ஸாக்ஷியாயிருக்கட்டும்.

கல்பா.—இரக்கமே உமக்குக் கிடையாது. நான் பலதடவை கெஞ்சியிருக்கிறேன். கபட ஹிருதயமுள்ள உம்மை எப்படி நம்புவது?

ஜீவ.—(சிரித்து) கல்பாவதி! உனக்கும் எனக்கும் சண்டை வளர்ந்துகொண்டே யிருக்கிறது. நான் போய் வருகிறேன். (எழுந்திருக்கிறான்.)

கல்பாவதி தைரியங்கொண்டு அறைக்கதவில் சாய்ந்து நின்று உம்மை இவ்வறையிலிருந்து நான் போகவிடுகிறதில்லை. நீர் என்னுடைய அடிமையல்லவா? என்றாள்.

ஆம் அது மெய்யே! நீ ரவிகேஸரியைக் கண்டு பிடித்திருந்தால் நான் உன்னுடைய கிங்கரன். அவன் அகப்படாததால் நீ என்னுடைய அடிமை. இதற்கு ஸத்யமே ஸாக்ஷியல்லவா? என்று ஜீவநாதன் மொழிந்தான்.

மௌனவிரதத்துடன் அவனை வெளியே விடாமல் வாசற்படியில் உட்கார்ந்தாள் கல்பாவதி. அவளுடைய ஸௌந்தர்ய ராசியை நயனங்களால் கண்டு மகிழ்வுற்றான் ஜீவநாதன்.

ஹரேசன் ஜீவநாதனைக் காணமல் மகளிருக்குமிடத்தைத் தேடி வந்தான். இவர்களினிருப்பைப் பார்த்து வாய் பேசாமல் ஒளிந்து நின்று கவனிக்கலானான். அவன் வந்ததை யறியாமல் "நீர் சொல்லாதிருக்கும்வரையில் இந்த அறையைவிட்டுப் போகக்கூடாது. இன்று யாராவது ஒருவர் மரிக்கவேண்டும். தேவலோக வாஸிகளும், மனிதர்களும் நம்முடைய கதையைக்கேட்டுக் களிக்கட்டும். ரவிகேஸரி எங்கிருக்கிறார். கூறும்" என்றாள் பெண்ணரசி.

உனக்கு ஒரே வார்த்தைதான் தெரியும்போலிருக்கிறது. அவன் இவ்வுலகத்திலில்லை. பரலோகத்தில் வஸிக்கிறானென்று பலதடவை

சொல்லியிருக்கிறேன். உனக்கிஷ்டமானுல் என்னை ரவிகேசரி என்று கூப்பிடு. எனக்குச் சம்மதமே என்ருன் ஜீவநாதன்.

உம்மை நான் ஆதியில் மணந்திருந்தால் என்னிஷ்டமான பெயர்களை வைத்தழைத்திருப்பேன். வேண்டிய பணிவிடைகளைச் செய்து விதவிதமான ஆடல் பாடல்களைக் காட்டி அகமகிழ வைத்திருப்பேன். என்ன செய்வது. உமக்கும் பிராப்தமில்லை. எனக்கும் புண்ணியமில்லை. அந்த எண்ணத்தை விடுமென்ருல் நீரும் பிடிவாதமாயிருக்கிறீர். எனக்கோ மறுவிவாகத்திலிஷ்டமில்லை. பக்தியோடு ஒரு தெய்வத்தின் நாமத்தை உச்சரித்து ஸித்திபெற்று வருகையில் மற்ருெரு தேவதையின் பெயரைக்கூறி ஜெபதபாதிகளைச் செய்யச்சொன்னுல் மனமிசைவது கஷ்டமல்லவா? அத்வைதஞானம் வந்தவர்களுக்கு எல்லாம் ஒன்றே. எனக்குப் பூர்ணஞ்ஞானம் வரவில்லை. உம்மை மணக்க முடியாது. வேண்டுமானுல் என்காலத்தைத் தர்ம விருத்தமில்லாமல் உம்முடன் கழிக்க ஒப்புக்கொள்ளுகிறேன். அதனுல் உலகத்தார் என்ன வேண்டுமானுலும் சொல்லட்டும் என்ருள் கல்பகம்.

ஆனுல் உண்மையைக் கூற எனக்கு ஒரு மாதம் ஸாவகாசம் கொடு. நான் ஊர் சென்று திரும்பினவுடன் ஸகல ஸமாசாரங்களையும் விவரிக்கிறேன். நீயும், நானும் தர்மாசரணையுடன் லோகோபகாரத்தில் மனங்கொண்டு உழைக்கலாம். விடை தருகிருயா என்று ஜீவநாதன் கேட்டான்.

கல்பாவதி சற்றுத் திருப்தியுடன் மறவாதீர். ஒருமாதமானுல் எல்லா விருத்தாந்தங்களையும் கூறுகிறீர்களா ? நல்லது போய்வாரும். தந்தையிடம் என்னுடன் பேசின வார்த்தைகளை உரையும். தர்மஸ்வரூபியான உம்முடைய நாமம் உலகத்தில் புகழப்படும் என்ருள்.

மாதர் மனேன்மணி ! உன் முடிவு எனக்குத் தெரிந்தது. நீ இன்னெரு முறை என்னைப் பார்க்கும்பொழுது இந்த விஷயங்களை மறவாமல் என்னைக் கேள். நான் போய்வருகிறேன். எனக்கு வழிவிடு என்ருன் ஜீவநாதன்.

கிருபையுடன் அவனை நோக்கி "ஐயா ! என்மேலுள்ள ஆயாஸத்தை விட்டுவிட வேண்டுகிறேன். ஸுகமாய்த் திரும்பிவரும் காலத்தை எதிர்பார்க்கிறேன். ஒருவார்த்தைமட்டும் கூறலாகாதா ? அது

எனக்குப்பெரிய ஆஸ்தியாயிற்றே! கேட்கட்டுமா?" என்று உரைக்கவே, ஜீவநாதன் பிரேமத்துடன் "கேள்! சொல்லுகிறேன்" என்றான். "ரவிகேஸரி" உயிருடனிருக்கிறானு? என்று கூறினுள் கல்பகம். "உயிருடனு?" என்று சொல்லிக்கொண்டே நடந்தான் ஜீவநாதன். பார்த்திரா! இதுதானு? பதில் என்றாள் கல்பாவதி.

"இருக்கிறான் ரவிகேஸரி" அடுத்தமாதம் காண்பாய் என்று சொல்லி மறைந்தான் ஜீவநாதன்.

## இவரே அவர்

ஸித்தர்கள் வசிக்கும் பரிசுத்த மலையில் ஒருபுவாபுருஷன் உலாற்றினுன். வனமூலிகைகளைக் காலை மாலைகளில் ஔஷதமாய்த் தின்று பற்பல வேர்களைக் கஷாயமாயக் காய்ச்சிக் குடிப்பான் எத்தனையோ வித சார்களை அருந்தினுன். சில தினங்கள் வரை ஆகாரம் உண்ணுமலிருந்தான். ஸ்நான, பான, அனுஷ்டானங்களை வெகு நியமனமாய்க் கைக்கொண்டான். கருத்தமேனி காணுமல் மறைந்தது. பொன்காந்திவரலாயிற்று. சரீரத்தில் நல்லரத்தம் ஓடத்தொடங்கவே பலமுற்றான் புருஷன். குறித்தமாதம் வரையில் இங்குப் பத்ய முண்டேன். இனி பரமனுடைய கிருபையே முக்யமென்று யோசித்து மலையிலிருந்து கீழே இறங்கி மதராஸை யடைந்தான். அவனுடைய முககாந்தி பார்ப்பவர்களின் மனதைக் கவர்ந்தது.

தன் பிரிய நேசனுல் ஏற்படுத்தப்பட்டிருந்த பங்களா ஒன்றில் மேற்கண்ட புருஷன் வஸிக்கலானுன். தாஸ, பரிசாரகர்கள் அவன் வரவை எதிர்பார்த்திருந்தார்கள். கடலோரத்தில் அழகாய்க் கட்டியுள்ள தன் கட்டடத்தின் மேல் மாடியில் அடிக்கடி உலாற்றுவதும், எதிரிலுள்ள ஸமுத்திரத்தைக் கண்டு களிப்பதுமாயிருந்தான். இவன் வரவை யறிந்த ஓர் பிரபு ஆவலுடன் இவனைக் காணவந்தான். இருவரும் ஒருவரை பொருவர் தழுவிக்கொண்டு க்ஷேமலாபங்களை விசாரிக்கலாயினர்.

வந்தவன்:—நேசா! உன் கருப்பு மாறிவிட்டது. என்றாலும் பழய ரூபம் மறைந்தே போயிற்று.

யுவகன்:—அப்பொழுதே அந்த வைத்யன் சொல்லிவிட்டான். உயிர் பிழைத்தால் உருவம் வியத்யாஸப்படுமென்று கூறினது உண்மையேயாயிற்றுபோலும்.

வந்த:—ஆனுல் கிருஷ்ணுவதாரமில்லை. மத்யாவதாரமெடுத்திருக்கிருய். சற்று நிதானத்துடன் உற்றுப்பார்த்தால் இப்பொழுது உன்னைத் தெரிந்து கொள்ளலாம்.

யுவ:—ஆனுல் நல்ல காலம்தான். அவளை எப்பொழுது காண்பேன். இம்முறையும் போடா வாடா என்ருல் ஒரே ஓட்டமாயோடி ஸந்யாஸம் வாங்கிக்கொள்வேன். நீங்கள் தடைசொல்லக்கூடாது.

வந்த:—அப்பா! என்ன முறுக்கு. மாப்பிள்ளை ஜோர் வந்துவிட்டதோ! அவள் இரவு பகலாய் நீ வரும் நாளை எண்ணிகொண்டிருக்கிருள். வீட்டுக்கு வாராததைப்பற்றிக் கோபிப்பாள்.

யுவ.—நான் அவளை வாட்டுகிறேன். என்னை அழவைத்தவளல்லவா? என் சக்தியைக்கொஞ்சம் காட்டினுலன்றி அடங்கமாட்டாள்.

வந்த.—உன்பாடு. அவள்பாடு. எனக்கு எல்லாம் ஒன்றே! உத்தமனுகிய உன்னைக் கண்டதே என்னுடைய சித்தம் களித்தது. நீங்கள் விநோதமாய் விளையாடுவது எனக்கு நேத்திரானந்தம்.

யுவ.—ஆம். மாமா! உங்களுக்கு வேடிக்கைதான். அவளுக்கது வாடிக்கையேயாகும். எனக்கோர் முடிவில்லாமல் போகும். நல்லது. பல்லாரி சென்றவர்கள் திரும்பிவர வேண்டாமா?

வந்த.—அவர்கள் மெதுவய் வரட்டும். உன் மனைவியின் மனதை முதலில் திருத்தப் பிரயாஸப்படு. அந்தப் பைத்யம் முன்போல் சிந்தை வருந்தும். ஸமாதானம் செய்யத்தொடங்கு.

யுவ:—உம். தங்கள் மகளானதால் பரிவு ஏற்பட்டிருக்கிறது. என்னை யழவைத்த காலத்தில் ஏதாவது ஸமாதானம் கூறியிருக்கிறீர்களா? பெரியோர்களின் வார்த்தைப்படி நடக்கிறேன்.

வந்த.—நீ சாயங்காலம் கடற்கரைக்கு வா! நான் இரண்டு பெண்களோடும் காற்றுவாங்க வருகிறேன். உன்னைப் பார்த்தவுடன் என்ன சொல்கிருள் பார்க்கிறேன்.

யுவ:—அப்படியே யாகட்டும். உத்தரவுக்குக் காத்திருக்கிறேன்.

தேவிதரிசனம் கொடுப்பாளோ மறுப்பாளோ! அதை அறிந்தபிற கல்லவோ நான் திருப்தியடைவேன்.

சரி. நாழிகையாகிறது. நான் போய்வருகிறே னென்று வந்தவன் சென்றான்.

யுவகன் ஸந்தியாகாலத்தை எதிர்பார்த்தான். அழகிய உடையுடுத்தி ஸுகந்த வாஸனைகளைப் பூசிக்கொண்டு கைகால்களில் பைகளையணிந்து உயர்ந்த பூட்ஸைக் காலில் மாட்டித் தலையில் நேத்திரானந்தகரமான டொப்பியை யணிந்து ஒய்யாரமாய் நடந்தான் ஸுந்தர புருஷன். கடற்கரையில் தன் நேசன் வருவதை எதிர்நோக்கி நிற்கையில் இரண்டு பெண்களுடன் ஒரு கம்பீரபுருஷன் இவனிருக்குமிடத்தை நாடி நடந்து வந்துகொண்டிருந்தான். மூத்தபெண் எதிரிலிருந்த புருஷனைக்காட்டி அப்பா "இவரே யல்லவா அவர்" "இரவிகேஸரி" என்று முடிப்பதற்குள் பேசாமலிரு உளறுதே என்றான் தந்தை.

"இதற்குள் நூதன யுவகனும் ஹரேசனை ஸந்தித்துக் கைகுலுக்கி ஸுகமாயிருக்கிறீர்களா?" என்று இங்கிலீஷில் வினவினன்." "நீர் ஸுகமா?" என்று பிரபு மறுகேள்வி கேட்டு வெகுநாளாயிற்று. எங்கே தங்கி யிருக்கிறாய். பேதங்கொண்டாடத் தலைப்பட்டாயோ" என்று பாத்யத்துடன் முதுகில் ஓர் அறைகொடுத்தான்.

மன்னிக்கவேண்டும். தேகாரோக்யத்தை உத்தேசித்து இம்முறை நான் வேறு விடுதியில் இறங்கினேன். தாங்கள் கோபிக்கலாகாது என்றான் யுவாபுருஷன். இருவரும் கைகோர்த்துக்கொண்டே உலாற்றினார்கள். பெண்மணிக்கு ஸந்தேகம் ஜெனித்தது. ஜீவநாதன், ரவிகேஸரி, இருவரும் ஒரே மனிதனுவதெப்படி. நன்றாய்த் தெரிகிறது. சரீரத்தில் சிலபாகம் ஜீவநாதன். மற்றபாகம் ரவிகேஸரி. மூன்று வருஷத்துக்குள் அவர் முகம் மறந்துபோகுமா? இல்லை. இல்லை. ஸந்தேகமில்லை. ஜீவநாதா! மோசம் போனேன். நீர் சொன்ன வார்த்தைகளின் அர்த்தம் இப்பொழுதல்லவோ தெரிகிறது. என்னைத் திரும்பிக்கூட பார்க்கவில்லையே! நான் தைரியமாய் அவருடன் பேசுவதெங்கனம்? ஐயோ! என் அதிருஷ்டம் எப்படியோ என்று வருந்தினுள்.

ஐயா! நேரமாயிற்று. என் மனைவி காத்திருப்பாள். தனியே யிருந்து அவள் வருந்துவதால் நான் செல்ல வேண்டும் என்று யுவகன் கேட்க,

நேசா! உனக்குக் கல்யாணமாய்விட்டதா? தம்பதிகளுடன் வந்த தாலல்லவா என் வீட்டுக்கு வரவில்லே. இருக்கட்டும். நானும் கற்றுக்கொள்கிறேன் உன் வித்தையை என்று கோபத்துடன் சொன்ஞன் பிரபு.

ஐயா! கோபம் வேண்டாம். நான் சீக்கிரமே ஊருக்குப் போகிறேன். அதற்குள் தங்கள் குடும்பத்தாரை என் வீட்டுக்கழைத்து விருந்து செய்யவேண்டுமென்று என் மனைவி விருப்பப் படுகிருள். குடும்பத்தார் வந்து விட்டார்களா என்று யுவா புருஷன் வினவினுன்.

இரண்டு மூன்று தினங்களில் வந்து விடுவார்கள். உன்னையும், உன் அழகிய மனைவியையும் சந்தோஷப்படுத்த என்மனைவி மக்களோடும், என் ஸகோதரி, அவள் கணவனேடும் வருகிறேன். நல்லது போய்வா என்ருன் பிரபு.

யுவாபுருஷன் விடைபெற்று வேகமாய்ச் சென்ருன். அவன்போனதைப்பார்த்த கல்பாவதி இதுவும் ஒருபுதுமையா என்று ஒருமூச்சு விட்டாள்.

**தந்தை.**—குழந்தாய்! நேரமாயிற்று. வீட்டுக்குப் போகலாம். பேசினவன் யார்? உனக்குத் தெரியுமா?

**மகள்.**—அப்பா! ஜீவநாதனென்று மறுநாமம் புனைந்த ரவிகேஸரி. என்மட்டி புத்தியால் நான் அவரை இழந்தேன். அவருக்கு மறுவிவாக மாயிற்ரு?

**தந்தை.**—குமாரி! கல்யாணம் செய்துகொள்வதற்காகவே தன் தேசம் சென்ருன். சரீராரோக்யமும் பெற்றிருக்கிருன்.

**மகள்.**—அப்பா! அவர் ஊராவது! நமது அத்தையின் மகனுயிருக்க வேறு நாடு செல்வதாவது! ஒருவேளை மாமனுர் வீட்டைப் பற்றிக் கூறினீரோ!

**தந்தை.**—என் அருமைப் பெண்ணே! அவனைப்பற்றி அதிகம் எனக்குத் தெரியாது. நம்முடைய வீட்டில் வந்திருந்த பழக்கத்தால் நான பேசினேன்.

**மகள்.**—அப்பா! தாங்கள் ரவிகேஸரியைப் பார்த்திருக்கிறீர்களா? அவருடைய ஜாடை ஜீவநாதனிடம் அனேகமாய்த் தோன்றுகிறது.

**தந்தை.**—இது உன்னுடைய மனேகல்பிதமாயிருக்க வேண்டும்.

அவன் ஜீவநாதனே! பெரியபெண்ணைத் தேடி மணந்துகொண்டதாகக் கூறுகிறுன்.

**மகள்.**—தந்தையே! என்னுல் தாளமுடியவில்லை. என் உயிர் போகுமோ, இருக்குமோ! வாருங்கள் வீட்டுக்குச் செல்வோம்.

அப்படியே கல்பா! மனதைத் தேற்றிக்கொள் என்று ஹரேசன் கூற ஸ்ரீமதியுடன் கல்பாவதி தன்னில்லம் சேர்ந்தாள்.

மங்கை அன்று முழுவதும் கண்மூடவில்லை. நான் எத்தகைப் பாபி! அவர் வேண்டவேண்ட உதறிவிட்டேனே! என்னைத் தேடியலை வாய் என்று கூறினுரே! அது மெய்யாயிற்றே! என் அழகிய மன்னனை எந்தக் கொடும்பாவி மணந்துகொண்டாளோ! ஸுந்தர புருஷனை நான் வைது துரத்தினேன். இருள் மூடினதுபோல் அவர் முகமிருந்தது. அதனுலல்லவோ ஸந்தேகம்கூடத் தோன்றவில்லை. ரவிகேசரி இருந்தால் அழைத்து வாவென்றுரே! தானே அவராயிருந்ததா லல்லவோ சபதம் கூறினுர். நான் அவரைப் பரிஹஸித்தேன். சீ! சீ! என் ஜென்மமெதற்கு! கைக்கெட்டின பதார்த்தத்தைத் துச்சமென்று தூறின பாபியாயிற்றே! என் நாதன் இறக்கவில்லை என்று நான் பல முறை கூறினது மெய்யாயிற்று. என் மனோமத்தியில் வஸிக்கும் இஷ்ட தேவதையான ரவிகேஸரீ! என்னை மறந்து மற்றொரு பெண்ணை மணம் செய்துகொள்ள உமக்கு மனம் வந்ததல்லவா? என்மேல் அன்பிருந் தால் ஆயுள்வரை நீர் ஸந்யாஸியாயிருந்திருக்கமாட்டீரா. பக்ஷத்தை மறந்து என் பால்ய புத்தியைக்கூட யோசியாமல் மணம் முடித்துக் கொண்டீரல்லவா? உம்முடைய மனதையும், சரீரத்தையும் மற்றொரு மாது அபஹரித்துவிட்டாள். இனி நானிருந்தென்ன? அன்றைக்குக் காரணுர்த்தமாய் இறக்க நினைத்தேன். இன்றைக்கு உண்மையில் உயிர்விடப்போகிறேன். நான் சாகுமுன் ஒருமுறை அவரைப் பார்க்கவேண்டும். "நாதா! உமக்குத் தர்மத்தில் பிரியமிருந்தால் இவ் விதம் செய்வீரா?" என்று கேட்கிறேன். என் புத்தி என்னவாயிற்று. என் மன்னனை, என் பிராணேசனை, என் ஜீவநாதனை இன்னுரென்று அறியாமல் போனேனே. ஒரே தாவில் அவர் காலில் விழுந்து விடலா மென்று நினைத்தேன். என்மேல் அப்பிரியங் கொண்ட அழகனை அணுகு வதும் தவறென்று நினைத்தேன்.

ஜீவநாதா! ரவிகேஸரீ! என் உயிர்க்காதலா! பற்பல யோசனை செய்வதில் வந்த லாபமென்ன? உமக்கு என்னிடம் கருணையில்லை. நான் உம்முடைய பிரியத்தை இழந்ததற்காக மரிக்கப்போகிறேன். யார் விதி யாரை விட்டது. இதோ என் பிராணனைப் போக்கடித்துக் கொள்ளுகிறே னென்று எழுந்தாள்,

திடீரென்று அறையின் தீபமணைந்தது. கல்பாவதியை யாரோ ஒரு புருஷன் ஒரேதாவில் பலமாய் அணைத்துக்கொண்டதுபோல் தெரிந்தது.

---

## பிராணநாதன்

வெகு விசித்ரமானஹால். நான்கு புறங்களிலும் அறைகளிருந் தன. ஏராளமான படங்கள் அவ்விடத்தில் மாட்டியிருந்தன. மனித னுடைய வயிற்றிலுள்ள எலும்பு, நரம்புகளுள்ள படங்களுக்கு அள வில்லை. செத்தவன், இருப்பவன், நோயாளி, படுக்கையிலிருக்கும் வியாதிக்காரன், டாக்டர்களின் பார்வை இவைகளடங்கிய சித்ரங்களே அங்கிருந்தன.

படங்களையே பார்த்திராதவர்களுக்குக்கூட அதன் அர்த்தம் விளங் கும். ஜீவநாதனோடு ஒரு விருத்தபிரபு இருந்தார். அவரைப் பார்த் தால் வெகு பரிசுத்த புருஷராய்த் தோற்றும். "ஜீவா! அவர்கள் வரவில்லையா" என்றார்.

அண்ணா! அதோ வந்துவிட்டார்கள். ஆனால் கல்பாவதியை அழைத்து வரவில்லை. அவளைத் தனியேவிட்டு வாராதீர்களென்று ஹரேசனிடம் பலமுறை சொல்லியிருக்கிறேன். எடுத்ததற்கெல்லாம் தற்கொலையென்ற பாணத்தை உபயோகப்படுத்துவாளே என்று வாசற் படியில் நின்று "மாமா! கல்பாவதியை மறுபடியும் தனித்திருக்கச் செய்யலாமா?" என்று வினவினான்.

ஜீவநாதா! அவள் பிரமாணத்திலிருந்து தவறுள். உயிரை விடு கிறதில்லை யென்றுறுதி கூறினபிறகே நான் வந்தது. உன் வீட்டுக்கு அவள் வரப்போகிறதில்லையாம். நீ அவளை மறந்து மற்றொருபெண்ணை விவாகம் செய்துகொண்டது பெரிய குற்றமாய்ப் பிரஸங்கிக்கிறுள். என் னுல் அவளைத் திருப்திசெய்ய முடியவில்லை. அக்கறையிருந்தால் நீயே

செல் என்றான் ஹரேசன். ஆனால் இதோ பேர்கிறேன். நீங்கள் ஹாலில் உட்கார்ந்துள்ள மகா புருஷரான என் தந்தையுடன் பேசும். நான் அவளை ஸமாதானம் செய்து அழைத்து வருகிறேனென்று ஹரேசன் வந்த வண்டியிலேறிக்கொண்டான்.

கல்பாவதியின் பங்களா கிட்டும் முன்னமே தன்வண்டியை நிறுத்திச் சப்தம் செய்யாமல் வீட்டுக்குள் நுழைந்து அவளைக் கவனிக்கலானான். படுத்துத் தூக்கித்துக்கொண்டிருந்தாள் பெண்மணி. "என் பிராணேசா! என் விதியை என் சொல்வேன்! நீர் என்னைப் பலமுறை வேண்டினபொழுதே இந்தப் பாபி ஒப்புக்கொண்டிருக்கலாகாதா! ஐயோ! உம்மை ஒருவள் நேசிக்க நான் பார்த்திருப்பதா 'என் அன்பே! உம்முடைய வரவையே எதிர்பார்த்து நான் மனங்களித்தேனே! என் நிதியே! அமெரிக்கா சென்று கற்ற கல்வியும், பெற்றப் பட்டமும், மற்ற ஸந்தோஷங்களும் நான் அனுபவிக்கக் கூடாதென்று மற்றொருவளுக்குக் கொடுத்தீரா! என் ஸ்வாமி! என்னைப் பார்த்தால் உமக்கிரங்கவில்லையா? என் ஜீவேசா! நான்தான் ரவிகேஸரி. செத்துப்பிழைத்ததால் இந்த ரூபம் வந்ததென்று கூறி யிருக்கலாகாதா? ஹா காதலா! உம்முடைய ரூபத்தை யாராலும் அறியமுடியவில்லையே! பிரிய ஸுந்தரா! ஸூக்ஷ்ம புத்தியில்லாத பெண்ணை நீர் சோதிக்கலாமா? "பிராண நாதா" என்று நான் ஒரு நாள்கூட உம்மை யழைக்கவில்லையே! நாதா! விவாகமான தினம் என்னைக் கேட்டகேள்விகளையும், நான் சொன்ன மறுமொழிகளையும் மறந்தீரே! ஐயோ! நான் எதை நினைத் தழுவேன்! ஒன்றும் தெரியவில்லையே! என் தந்தையோ உயிரைவிடக் கூடாதென்று தடுக்கிறார். நேற்றிரவு பிராணனை விடும் ஸமயமா யிருக்கையில் ஜீவநாதன் ஓடிவந்து என்னை யணைத்துத் தூக்கித் தந்தையிடம் விட்டுச் சென்றார்.

"ஆகா! அவருடைய கரம் பட்டபோழுதே என் சரீரம் தென்புற்றது. இத்தனை வருத்தம் எனக்கிருந்தபோதிலும் ஸந்தோஷம் ஒன்று உள்ளே தாண்டவமாடுகிறது. என் கவலை நீங்குவதெது ? ஆண்டிச்சியைப்போல் பிச்சையெடுக்கும் பதவியே எனக்குக் கிடைத்தது" என்று வாய்விட்டுச் சொல்லிக்கொண்டிருக்கையிலேயே, என்

கல்பாவதி! பிரியமணி! பதிவிரதாசிரோமணி! நீ வருந்தலாமா!

நான் மற்றொரு பெண்ணை மணந்த தப்பிதத்தைமட்டும் ஒப்புக்கொள்கிறேன். உன் விஷயத்தில் எவ்வித அபராதமும் செய்தவனல்ல. எழுந்திரு. என்வீட்டுக்குவா! என் மனைவி உன் வரவை எதிர்பார்க்கிறாள் என்று முத்தமிட்டுத் தன் மடியில் படுக்கவைத்துக்கொண்டான்.

எனக்கு வேண்டாம் முத்தம்! என்னைத்தொடாதீர். இந்தக்கைகள் மற்றொருவளை யணைந்து மகிழ்ந்த பிறகல்லவோ என்னைத் தொடலாயின. விடும், நான் உம்முடைய கிருகிணியைப் பார்க்க வரமுடியாது. என் ஜீவமானம் இவ்விதமா நாசமாகவேண்டும் என்று அவனிடமிருந்து விடுவித்துக்கொள்ளப் பிரயாசைப்பட்டாள் கல்பகம்.

**ஜீவநாதன்.**—நான் உன்னை விடேன். என் முதல் மனைவி நீ. இரண்டாவது ஸதி அவள். ரவிகேஸரியைக் கண்டால் சொல்லுமென்றாயே! நான் உன்னுடைய ரவிகேஸரியல்லவா? நீ ஜீவநாதனுக்கு அடிமைப்பட்டவள். ஆகையால் அவன் மனைவி உன்னை மரியாதையுடன் அழைத்துவரும்படி கட்டளையிட்டிருக்கிறாள் எனக்கு. வராவிடில் பலவந்தமாய்க்கொண்டு செல்வேன். எது ஸம்மதம்?

**கல்பாவதி.**—(கோபத்துடன்) போதும் உம்முடைய பிரஸங்கம். உம்முடைய ஸதி காத்திருப்பாள். வீட்டுக்குப்போகலாம். வேண்டுமானால் அவளிங்கு வரட்டும். என்னைத் தொடாதீர். கையை எடுக்கிறீரா இல்லையா?

**ஜீவ.**—இந்தக் கண்களால் என்னை விரட்டுவதே உனக்கு வழக்கமாயிற்று. நீ அடிமையாயிருக்க உன் எஜமானி உன்னை எதிர்கொண்டழைத்துச் செல்லவேண்டுமோ? இஷ்டமிருந்தால் என்கையிலிருந்து விடுதலை பெற்றுக்கொள். மரியாதையுடன் வருகிறாயா? இப்படியே தூக்கிக்கொண்டு வண்டியிலேறட்டுமா?

**கல்பா.**—நாதா! என்னை க்ஷமியும். இந்த உபகாரம் செய்யலாகாதா? இத்தனை தூரம் என்னைச் சிக்ஷித்தது போதும். நான் அங்கே வருவானேன். எனக்கு மனிதர்களின் முகத்தைப் பார்க்க மனம் ஸகிக்கவில்லை. என்மேலிரங்கவேண்டுகிறேன்.

**ஜீவ.**—கண்ணே! உன்னை நான் அன்புடன் நடத்துகிறேன். நீ என் மனைவியுடன் பேசவேண்டாம். அவளையும் உன்னெதிரில் வாராதபடி தடுக்கிறேன். என்னுடன் காலம் கழிப்பதாய் நீ கூறின

ஒரு வார்த்தையையாவது நிறைவேற்றுவாயாகில் எனக்குத் திருப்தி யுண்டு. சொன்ன சொற்களையெல்லாம் மறுத்துவிட்டாய். அந்தக் குற்றத்தையும் பொறுத்தேன். என் வீட்டுக்குவர மனமிசை. அது போதும். உன்னை நான் துன்பப்படுத்தவில்லை.

**கல்பா.**—பிராணநாதா! என்னை வஞ்சித்தீரே! உமக்கு நியாயந் தானு? என்மேலென்ன குற்றம். ரவிகேஸரி இறக்கவில்லையென்று நான் கூறும் காலத்திலெல்லாம் என்னைக் கோபிப்பீர்களே! உத்யான வனத் தில் கடிதத்தைக் காட்டினேனே! அந்த எழுத்துக்களைக்கூட வேறு விதமாய் மாற்றி வரைந்தீர்களே! தாங்கள் செய்த காரியங்கள் நியாய முள்ளவை போலும். தாங்கள் பிழைத்த விதத்தைச் சொன்னுல் வரு கிறேன்.

**ஜீவ:**—கண்மணீ! என்னை என்ன வேண்டுமாலுைம் கேள் தரு கிறேன். செய்கிறேன். சொல்லுகிறேன். உன் வரவை எதிர்பார்த்து எல்லோரும் போஜனம் செய்யாமலிருக்கிருர்கள். அங்கு வந்தவுடன் நான் நோயுற்றது முதல் இங்குவந்தவரையில் ஸங்கதிகளைக் கூறு கிறேன். வா, போவோம்.

கல்பாவதி அவனைக் கட்டிக்கொண்டு "பிராணநாதா! என் மனம் துடிக்கிறதே. தாங்களும், புதிதாய் வந்த மனைவியும் சேர்ந்து எல்லோர் முன்னிலையிலும் ஸம்பாஷிக்கையில் நான் பார்த்துக் கொண்டிருப்பதா? இது உமக்குத் தர்மமா? அவளுடன் யார் வந்திருக்கிருர்கள்? அவள் பெயரென்ன? சொல்லுங்கள்" என்ருள்.

கல்பா! அவள் பெயர் ஜெயத்ஸேனை. அவள் தந்தை வந்திருக் கிருர். நீ ஜெயத்ஸேனையைக் கண்டால் ஒரு பொழுதும் விடமாட்டாய். அவளே நானென்று எல்லோரிடமும் பெருமை சொல்லிக்கொள்வாய். கண்மணீ! நான் உன்னிடம் கூறுவதைவிட நேரில் காண்பது விசேஷ மல்லவா? எழுந்திரு. என் கண்ணுயிற்றே என்று அவளை நிறுத்திஞன் ஜீவநாதன்.

ஆனல் வாரும். எனக்கு விருப்பமிருந்தால் அங்கிருப்பேன். இல்லையேல் என்னை இங்கே அனுப்பிவிடவேண்டும். அது ஸம்மதமா ஞல் வருவேன் என, என்னன்பே! எத்தனை நாழிகை இந்தக் கேள்வி களைக் கேட்டுக்கொண்டிருப்பாய். எல்லாம் உன்னிஷ்டப்படியே செய்

கிறேன், தாமதியாதே என்று அவள் கையைப் பிடித்துக்கொண்டு வந்தான்.

ஹிருதயேசா! நான் தலை வாரிக்கொள்ளவில்லையே! துணி கூட பழையது. வேறு உடுத்திக்கொள்ள வேண்டாமா? சற்று இரும் வருகிறேன் என்று கல்பாவதி கூற, கண்ணே! உன் உடுப்புகள் ஏற்கெனவே அங்கு வந்திருக்கின்றன. நான் உன்னருகிலிருக்க உனக்கு உடமையும், புடவையும், வாரலும், கோதலும் எதற்கு. ஏறு வண்டியில் என்றான் ஜீவகன்.

ஜீவேசா ! என் சொந்தச் செண்பகச்செடியில் ஓர் அழகிய புஷ்பம் பூத்திருக்கிறது. அதைப் பறித்து வருகிறேன். என்னைத் தடுக்காதீர் என்று கல்பாவதி செடியருகில் சென்றாள்.

கல்பகக்கரும்பே! அது உன்கைக்கு எட்டாது. நான் பறித்துக் கொடுக்கிறேன் என்று ஜீவநாதன் மொழிய, நாதா! அது முதல்முதல் பூத்த புஷ்பம், நானே பறிக்கவேண்டும். என்னை க்ஷமியும். ஒரு நாற்காலி கொண்டுவரும்படி கூறுகிறேன் என்றாள் பெண்மணி.

கண்ணே! நான் உன்னைத் தூக்கிப் பிடித்துக்கொள்கிறேன். நீ எட்டிப்பறித்துக்கொள். சம்மதந்தானே என்று ஜீவநாதன் அவளை எடுத்துக்கொள்ள வெட்கத்துடன் அங்கனை மறுக்க அவன் விடாமல் புஷ்பமிருக்குமிடத்தில் தூக்கி நிறுத்தினான். பறித்துக் கொண்டேனென்று கல்பாவதி சொல்லவே கீழே இறக்க நான் உன்னைத் தூக்கினதற்குக் கூலிகொடு என்றான்.

போம் நாதா! என்னை எப்படியோ வசமாக்கிக் கொண்டீர்கள். நான் தங்களைப் பார்க்கவே கூடாதென்று விரதம்கொள்ள நினைத்தேன். மாற்றிவிட்டீர்கள். இத்தனை ஸந்தோஷத்தையும் நீர் ஜெயத்ஸேனைக்கல்லவோ அளிக்கப் போகிறீர்கள். நான் கூலி தரமுடியாது. என்றாள் கல்பகம்.

ஆனால் நான் உன்னைக் கூலி கேட்கவில்லை. நீயாய்க் கொடுக்கும் பொழுதும் நான் பெற்றுக்கொள்ளுகிறதில்லை. அப்பொழுது என்ன செய்வாய் பார்க்கிறேன். ஜெயத்ஸேனையைத்தான் கெஞ்சுவாய். உன் என்றுரைக்கு முன்,

ஸ்வாமீ! அவள் பெயரைக் கூறுவிடில் பிராணன் நில்லாது போலும். இனி என்முன் அந்த நாமத்தைச் சொல்வதில்லை யென்று தெரிவியும். இல்லையேல் நான் வரமாட்டேன் என்று கல்பாவதி சொன்னாள்.

கல்யா! இனி உரைப்பதில்லை. ஆசையுடன் பறித்த புஷ்பத்தைக் கையில் வைத்துக் கசக்குவானேன்? நான் உன் தலையில் சூட்டட்டுமா? உக்ரமூர்த்தியாய் மறுப்பாயோ! என்று பூவை அவள் தலையில் வைத்து வண்டியிலேறச்செய்து தானும் அவள் பக்கத்தில் உட்கார்ந்தான்.

---

## ஜெயத்ஸேஞ

வாத்யக் கச்சேரிகள் நடந்தன. பற்பல விநோத ஆட்டங்கள் காட்டப்பட்டன. மணிக்கு ஒருமுறை விதவித பாடல் ஆடல்கள் ஜீவநாதன் மந்திரத்தில் நடக்கலாயின. ஹரேசன், ரகுநாதன், மற்றொரு விருத்த புருஷன், ஜீவநாதன் சிற்சில பிரபுக்கள் ஓர் அழகிய கட்டடத்திலுள்ள நாற்காலி ஸோபாக்களில் உட்கார்ந்து மேற்கண்ட ஆட்டங்களைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். கல்பாவதி ஒரு தனியறையிலிருந்து திரை மூலமாய்க் கவனித்தாள்.

ஜீவநாதன் ஒரு ஆட்ட முடியும்பொழுது கல்பாவதி யிருக்குமிடம் சென்று "கண்ணே! பார்த்தாயா? உன் மனதுக்குப் பிடித்த விநோதம்தானு?" என்று வினவுவான். "நாதா! எல்லாம் ஸந்தோஷமே. இவைகளைப் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே என்னுடைய நிலைமை நினைவுக்கு வருகிறது. என்செய்வேன். கடவுள் என்னை இப்படியா வருத்தவேண்டும்" என்று மூச்சுவிடுவாள்.

பகல் போஜனம் முடிந்து இரண்டாம் வேளை ஆகாரமுண்ணும் வரையில் மேற்கண்ட ஆட்டங்கள் நடந்தன. மூன்றுமணி யடித்ததும் விநோதங்களை நிறுத்தி எல்லோரும் பற்பல சிற்றுண்டிகளைத் தின்று மதுரமான காபி, டீ, கோகோ, பால் முதலியவைகளை அருந்தலாயினர்.

ஹரேசன் கல்பாவதி யிருக்குமிடத்தில் வந்து "பெண்ணே! உன் புருஷனுடைய நிலைமையைப் பார்த்தாயா? உன் மனம் அவனிடம் அப்பொழுதே சென்றிருந்தால் இந்தக் கஷ்டமிராதே" என்றான்.

பிதாவே! நானென்ன செய்வேன். எல்லாம் பரமனுடைய செயல். வருந்துவதில் பிரயோஜனமென்ன? அத்திம்பேர் எப்பொழுது வந்தார்? அம்மா, அத்தை முதலியவர்கள் வரவில்லையா, என்றாள் பெண்.

அவர் இன்று காலை இரயிலில் வந்தாராம். செத்த மகனைக்

காண்பதென்றால் யார்தான் வரமாட்டார்கள். அத்தையும், உன் அன்னையும் மாலை இரயிலில் வருவார்களாம். புதிதாய்க் கிடைத்துள்ள உன் புருஷனுடைய மாமனார் உன்னைப்பார்க்கவேண்டுமென்கிறார்.வா அவரை நமஸ்கரித்து வருவாயாக. அவரில்லாவிடில் ரவிகேஸரி பிழைத்திருக்க மாட்டான். உயிரைக் கொடுத்த பெரியவரைப் பணிவாயாக என்றான் ஹரேசன்.

அப்பா! அப்படியே செய்கிறேன் என்று கூறும் முன் விருத்த புருஷரும் அங்குவந்தார். கல்பாவதிஎழுந்து அவரை வந்தித்து நின்றாள். "என் அமிருதத்தைக் கைப்பிடித்த கல்பாவதி! நீ ஜெயத்ஸேனையோடு சேர்ந்திருந்து ஜீவநாதனை ஆண்டுவருவாய்" என்றார்.டம்டம் என்றமங்கல ஓசை கேட்டது. ஜீவநாதன் எங்கே என்று ஹரேசன் கூற ரகுநாதன் இதோ வந்து விட்டானென்று சொல்லிக்கொண்டே மகனுடன் வந்தான்.

ஜீவநாதா! நாங்கள் ஒன்றுகூடி கல்பாவதியை இன்று உனக் களிக்கிறோம். அவளைக் கைவிடாமல் காப்பாற்று என்று அவன் கையில் கல்பாவதியின் கரத்தை வைத்தான் ஹரேசன். அப்படியே என்று அங் குள்ளவர்களை நமஸ்கரித்தான் ஜீவநாதன். கல்பாவதியும் பணிந்தாள்.

ஜீவநாதா! நீ உன் மனைவியை அழைத்துக்கொண்டு இந்த வீட்டி லுள்ள படங்களைக் காட்டிவா என்றார் விருத்தர்.

அப்படியே யாகுக என்று கல்பாவதியின் கரத்தைப் பற்றி மாடிக் கழைத்துச் சென்றான் ஜீவநாதன். நாதா! நான் கூறினதை மறவாதீர். என்னை இரண்டாவது மனைவியுடன் சேர்த்து வைக்கக்கூடாது. என் மனம் நோக நடப்பதில்லை யென்று கூறினீர்களல்லவா? என்று கல்பகமுரைக்க, "இல்லை கண்மணீ! உன்னை வருத்துவேனு? தன் மகளைப்போல் நீ யொரு பெண்ணென்று மதித்து இரக்கமாய்ச் சொன்ன வார்த்தை யாகும். வா. படங்களைப்பார்.அமெரிக்காதேசத்துச்சித்திரங் களும், இந்தியாவின் படங்களும் என்னறைக்குள்ளிருக்கின்றன. அவை களை நீ பார்த்தல்லவோ ஆநந்தப்படவேண்டும்" என்று காட்டலானான்.

கல்பாவதி முதல் படத்தைப் பார்த்தவுடன் ஹா பிராணேசா! இது நம்முடைய கல்யாணத்தில் பிடித்ததல்லவா? அது அமெரிக்காவில் எடுத்த விசித்ரப்படம், இது பொம்பாயில் அநாதையாய் மண்டபத்தில் கிடைக்கும்பொழுது பிடித்த சித்ரம். படுக்கையில் உரு

மாறிக்கிடக்கும் நிலைமை. சற்றுத்தென்புற்றிருக்கையில் பிடித்த படம், கண்விழித்தது முதல் எழுந்து நடக்கும்வரையில் எழுதிய சித்திரப் படங்கள். ஜீவநாதனுய் வந்த காலத்திலிருந்த ரூபம், பிறகு மாறின உருவம், காலம், மணி,தேதிகள் மனிதனுடைய சரீரம் மாறுதல் இவை களை வெகு விவரமாய்ப் படம் பிடிக்கப்பட்டிருக்கிறது. இரத்தம் கெட்டதால் சாயை மாறிற்றென்று தெரிவிக்கப்படுகிறது.

பிராணநாதா! தாங்கள் பிரஞ்ஞையற்றுக் கிடக்கையில் இத்தகைய படங்களைப் பிடித்துத் தங்களையும் காப்பாற்றினவர் யார் என்று கேட்டாள் கல்பாவதி.

கண்மணீ! நீயும் நானும் நமஸ்கரித்தோமே அந்த மகானே எனக்கு உதவின கடவுள். அவர் ஓர் அனுபவமுள்ள டாக்டர். தமது காலத்தைப் பரோபகாரத்தில் செலவிடுவதே விரதமாகக் கொண்டிருந்தார். என்னைப் பாழ்மண்டபத்தில் கண்டெடுத்தவர் அவரே! அரை உயிராயிருக்கையிலேயே சில அநாதைச்சவங்கள் எரியப்படுகின்றன வென்பதை அவர் அறிந்து இரவும், பகலும் ஸ்மசானத்தைத் தேடி அலேவார். என்னை அவர் பார்த்தெடுத்து கொழுத்த மனிதன். சரீரா ரோக்யமுள்ளவன். அங்க அவயவ ஸாதனங்களைச் செய்திருப்பதால் ஸரியாய் வளர்ந்திருக்கிறுன். இறந்திருக்க நியாயமில்லையென்று நினைத்துச் சென்று தன் வீட்டில் வைத்துப் பரீக்ஷித்தார். அவருடைய ஔஷத உபசாரங்களால் நான் உயிர்பெற்று உலாவலானேன். என்னைப் பிடித்த நோய் பாப்பிளேக் என்ருர். அதனுல் உருவழிந்து கருநிறங் கொண்டு திரிந்தேன். யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. இப்படி ஏமாறுவீர்களென்று நான் எண்ணவில்லை. தார்வார் சென்று என் தந்தை தாய்களைக் கண்டு உன்னையும் பார்த்து வரும்படியும், தாம் அதுவரையில் சுத்த மலையிலிருந்து வன மூலிகை களைச் சேர்த்து மருந்து தயார் செய்வதாயும் என்னைக் காத்த பிதா கூறினுர். சிவ, சிவா! நான் தார்வாரில் நுழைந்ததும் ஆப்பிரிகா தேச காப்பிரி எங்கு வந்தானென்று எல்லோரும் பரிஹஸித்தார்கள். என்னுடன் படித்தவர்களும் கூட அடையாளம் கண்டுபிடிக்கவில்லை. வெளியிற் சொன்னுல் வெட்கக்கேடு. நான் இன்னுனென்று ஒருபிரபு விடம் தெரிவித்தேன். “பைத்யம் பிடித்த மனிதா! உன்னைப் பிரா

ஸிக்ஷன் செய்யவேண்டுமோ?" என்ருர். வாய்திறவாமல் வந்துவிட்டேன். கல்பாவதி! நீ என்னை ஒருமுறையாவது கண்டுபிடிக்கவில்லையே! இப்பொழுது ஜீவநாதன் பக்கத்தில் நிற்கிருயே! வெட்கமில்லையா என்ருன்.

நாதா! உமக்கெப்பொழுதும் பரிஹாஸமே. இந்த அதிசயத்தை யாராவது நம்புவார்களா? என்ருள் கல்பாவதி.

**ஜீவநாதன்.**—என்கண்மணி நம்புவாளல்லவா? கல்பாவதி! ஒருவிஷயம் உன்னைக்கேட்கிறேன். கோபிக்காதே. நான்வார்த்தை கொடுத்துவிட்டேன். அதை நிறைவேற்றவேண்டும். என்வேண்டுகோளைத்தடுக்காதே.

**கல்பாவதி.**—ஸ்வாமீ! என்ன சொல்லும். முடியுமாஞல் ஒப்புக் கொள்ளுகிறேன்.

**ஜீவ.**—என்கண்ணே! இன்னும் உன்னுடைய முடுக்கு அடங்க வில்லையே! என்னைக் காப்பாற்றின பிரபு தன்மகளை மணந்துகொள்ளும்படி கேட்டார். நான் முதலில் மறுத்து கல்பாவதி என்னை ஏற்றுக்கொள்ளாவிடில் கல்யாணம் செய்துகொள்வதாய்க் கூறினேன். பிறகு நடந்தது உனக்குத் தெரியுமல்லவா? ஜெயத்ஸேனை உன்னை எவ்விதத்திலும் பார்க்கவேண்டுமென்று ஹடம் பிடிக்கிருள். கண்ணே! ஒருமுறை அவளை நீ ஸந்திப்பதால் வரும் கெடுதியென்ன? என் வார்த்தையை அவள் கேட்கவில்லையா? இத்தனைநாழி உன்முன் வாராதிருக்கும்படி நான் கட்டளையிட்டபடி அவள் இருக்கிருளே! நீமட்டும் என் சொல்லைக் கேளாதிருப்பது தர்மமா?

**கல்பா.**—என் அன்பே! உம்முடைய மனம் அப்படியாஞல் நான் என்ன செய்வது. வாரும் அவளிருக்குமிடம் செல்வோம். அவள் தந்தை இல்லாவிடில் எனக்கு நிதி கிடைத்திருக்குமா?

கண்மணீ! களிப்படைந்தேன். வா. கையைப் பிடித்துக்கொள்ளுகிறேன். கல்பாவதி! ஜெயத்ஸேனை உன்னிடம் எத்தனை அன்பாயிருப்பாள். அவள் மூர்க்கத்தை முற்றிலும் வெறுத்தவள். தர்மாங்கனை. பிரியமணி என்று புகழ்ந்துகொண்டே மூன்ருவது மாடி ஏறலாஞன் ஜீவநாதன்.

உமக்கு அவளை ஸ்தோத்திரம் செய்யாவிடில் தூக்கமேது. நான் வேண்டாமென்பதை என்னெதிரில் வர்ணித்துக் கூறுவதில் அதிகப் பிரியம் போலும். விடும். நான் வரமாட்டேன். அவளைப் பார்த்தாக வேண்டியதென்ன ! என்ருள் கல்பாவதி.

என் ராணீ! மறந்தேன். இனி சொல்லுகிறதில்லை. என் ஜெயத்ஸேனையை உன்முன் ஒருபொழுதும் புகழேன் என்று கூற,

உம், என் ஜெயத்ஸேனே. எத்தனை அன்பு. கல்யாணமாய் ஒரு மாதமாகவில்லை. அவளுடைய ஜெபமே அதிகமாயிருக்கிறது. என்று கல்பாவதி முணுமுணுக்க ஜீவநாதன் அவளைத் தன் இடது கையால் சேர்த்துக் கட்டிக்கொண்டு "கோபிக்காதே கண்ணே! அவளும் உன்னைப்போல் ஒரு பெண்ணல்லவா? என் வரவை எதிர்பார்த்து நின்றிருப்பாள்!" என்றான்.

இதென்ன வார்த்தை! உமக்குப் பிரியமிருந்தால் அவளைக் கட்டிக் கொண்டழும். என்னைத் தொடாதீர். விடும். நான் போகிறேன் என்று கல்பாவதி திமிற.

கண்மணி! உன்னை ஒருநாளும் விடேன். என்னுடைய அடிமையல்லவா? என் ஜெயத்ஸேனைக்கு நீ ஊழியக்காரி. அவள் கால் அழகுக்கு உன் மேனி அழகு ஈடாகாது. பார்! அதோ எத்தனை அழகாய் நிற்கிறாள். மெல்லிய போர்வையால் முகம் மறைக்கப்பட்டிருக்கிறது என்று ஒரு அறைக்குள் அழைத்துச் சென்று ஜெயத்ஸேனை என்று தங்க எழுத்தால் வரைந்துள்ள ஓர் சுவரின் அருகில் கல்பாவதியை நிறுத்தினான்.

நான் பார்க்கமாட்டேன். அவளை என் முன்னிலையில் உம்முடைய வலது கையால் அணைத்துக் கொள்வதை நான் ஸகியேன் என்று கண்களை மூடிக்கொண்டாள் பெண்மணி.

---

## வைபவோத்ஸவம்

கல்பகமே கண்திறப்பாய் கவலைகளை நீக்கிடுவாய்,
காத்து என்னை ஆதரிப்பாய்! காணக் கிடைக்குமோ காமினீ (கல்ப)
ஹருஷமுகீ ஜெயஸுந்தரீ ஹரித்ராமணீ நீலலோசனி!
ஹாஸ்யப்பிரியே ஹம்ஸசரீ! ஹாமனோஹரி மானினீ (கல்ப)
கண்மணியே கல்பாவதீ கணவன் சொன்ன கட்டளையை
காத்துவந்த கருணைக்கண்ணே! காரடீ என்னைப் பாரடீ (கல்ப)

என் பிராணநாதருக்குப் பாடவும் தெரியும்போலிருக்கிறது

என்பாக்கியத்தை என்சொல்வேன். நாதா! நாதா! எங்கு சென்றீர் என்ருள் கல்பாவதி.

ஜெயத்ஸேனேயோடு பேசிக்கொண்டிருக்கிறேன். என்னை ஏன் அழைக்கிருய். நீயும் அவளுடன் பேசவேண்டும். அவள் உன்னைப் பார்க்க மனங்கொண்டு முகத்துணியை எடுத்துவிட்டாள். எங்கே நீயும் கண்விழித்துக்கொள் என்று ஜீவநாதன் கூறினுன்.

கல்பாவதி கண் திறந்தாள். ஆச்சர்யத்துடன் வாய்திறந்து "பிராணேசா! என்னை ஏமாற்றினீர்களல்லவா? என்னேயே தாங்கள் சிலேயாய்ச் செய்து நிறுத்தி ஆடையாபரணங்களைப் பூட்டி ஜெயத் சேனே என்று பெயருடன் வைத்துவிடப் பார்த்தீர். இருக்கட்டும். உமக்கு இதோ சிக்ஷை விதிக்கிறேன்" என்று அவனை ஆலிங்கனம் செய்துகொண்டு முகத்தில் முத்தமிட்டாள்.

ஜெயத்ஸேநா! என்னுடைய கூலி எனக்குச் சேர்ந்துவிட்டது. உன் வார்த்தைகளெல்லாம் பொய்யாயின. என் மனைவி ஜெயத் ஸேனேக்கு நீ அடிமையானுய். உன் மூர்க்கக் குணத்தையும் மாற்றி விட்டேன். எங்கே "மன்னன் சொன்ன வாக்கியத்தை மனதில் கொண்டு தவிக்கிறேனே" என்ற பாட்டைப்பாடு, கேட்கிறேன். இன்று முதல் கல்பாவதி என்ற பெயர் மைலாப்பூர் கபாலீச்வரன் மனைவிக்கே கொடுத்துவிடு. எனக்கிஷ்டமான "ஜெயத்ஸேநா" என்ற நாமமே எனக்குப் பிரியமானது. இந்தா என்னுடைய அன்பால் கொடுக்கப் படும் வெகுமதி என்று ஓர் முக்ஹாதாரத்தை மனைவியின் கழுத்தில் போட்டான் ஜீவநாதன். நீங்களும் ரவிகேஸரி என்ற பெயரை எடுத் தெறியுங்கள். என் ஜீவனைக் காப்பாற்றின ஜீவநாதா என்றழைக் கிறேன். என்னை ஏன் இத்தனைநாள் அழ வைத்தீர்களோ அறியேன் என்ருள் ஜெயத்ஸேனே.

கண்மணீ! அகமணீ! அருள்மணீ! கற்புக்கரசியே! உன்னை நான் வருத்துவேனு? என்னைப் பிடித்த சனி நோயல்லவோ உன்னை வாட்டி விட்டது. கடிதத்தில் அரூபியா யிருக்கிறேனென்று எழுதவில்லையா? நீ கவனிக்கவில்லைபோலும் என்ருன் ஜீவநாதன்.

நாதா! கற்றறிந்த மேதாவிகளுக்கும் கல்லாத காமினிகளுக்கும் வியத்யாஸத்தைப் பாருங்கள். அதிருக்கட்டும். பழைய எழுத்துக்களைப்

போலவும், புதிய அக்ஷரங்கள் மாதிரியும் எழுதுவதெங்ஙனம். தடையில்லாமல் கை ஓடுகையில் அனுபவமுள்ள லிபிகளே வரையப்படுமல்லவா என்று ஜெயத்ஸேனை கேட்டாள்.

ஆம் அன்பே! ஆனல் இந்த நோய் வந்தது முதல் வெறுங்கையால் எழுதினல் ஒருவித எழுத்தாகவும், டாக்டர் கொடுத்த விரல் கவசத்தால் எழுதினல் வழக்கம்போல்வும் காண்கின்றன. இன்னும் என்ன ஸந்தேகமிருந்தாலும் கேள். நான் பதிலளிக்கிறேன் என்று ஜீவநாதன் கூறினன்.

**ஜெயத்ஸேஞ.**—எல்லாச் சங்கடங்களும், ஸந்தேகங்களும் நீங்கிவிட்டன. ஸுகமான காலத்தில் வீணில் துயரப்படுவானேன். இரவு ஸமீபிக்கிறது. கீழே செல்வோம்.

**ஜீவநாதன்.**—கண்மணீ! வீட்டுக்குப் போகவேண்டுமென்று அவஸரப்படுகிருயோ? உன் தந்தையோடு செல்கிருயா? நானும் வரட்டுமா? தயவுசெய்து கூறு துரைசானீ?

**ஜெய.**—என் அருமைக் காதலரே! நான் ஏன் செல்கிறேன். உமது கல்பாவதி போகட்டும். நான்தான் ஜெயத்ஸேனை, ஜீவநாதபிரபுவின் அர்த்தாங்கியாயிருக்கிறேன்.

**ஜீவ.**—ஆம் கண்ணே! முற்றிலும் ஜெயித்தவள் நீயே? ஈசனே கெதியென்று உன் ஸத்யவிரதத்துடன் இருந்த விடத்தை விட்டகலாமல் புருஷனை ஜெயித்து வசமாக்கிக் கொண்டாய். அதனலல்லவோ உனக்கு ஜெயத்ஸேநா என்ற பட்டம் கிடைத்தது.

**ஜெய.**—இன்பமே! இனி எங்கும் செல்லுகிறதில்லை யென்று உறுதி தாரும். என்னைத் தனியேவிட்டுப் போகக்கூடாது. ஆனல் தெரியுமா?

**ஜீவ.**—போதும் கண்ணே! கோபக்கண்ணல் பார்ப்பாயென்று அறிந்திருக்கிறேன். எத்தனைமுறை அக்கண்களால் என்னை விரட்டியிருக்கிருய். நினைத்தால் இப்பொழுதும் நடுங்குகிறேன்.

கதவை யாரோ தட்டவே ஜீவநாதன் திறந்தான். ஹரேசன் மகளைப்பார்த்துப் "பெண்ணே! நீதான் ஸந்யாஸினியோ! உலகத்திலுள்ள ஸுக ஸந்தோஷங்கள் எனக்கு வேண்டாமென்று கூறினவள் யார்? கல்பாவதி என்ற பெயரை மாற்றி ஜெயத்ஸேனை என்று வைத்துக்

கொண்டதால் நான் கண்டுபிடிக்க முடியாதென்றெண்ணினையா? ஜீவ நாதன் பரபுருஷனையிற்றே! அவனுடன் தனித்திருப்பது தவறல்லவா? உன் தாயும், அத்தையும் வந்துவிட்டார்கள். கீழேவா" என்று கூறினன்.

வெட்கத்துடன் தலை குனிந்த வண்ணமாய் நின்றுள் ஜெயத் ஸேனே. "ஜீவநாதா! இன்னமும் பயப்படுகிறுயா? அவனை நன்ருய்ச் சிக்ஷிக்கவேண்டும். பிடித்தழைத்துக் கொண்டுவா" என்று ஹரேசன் சொல்லிக் கீழே சென்றுன்.

கண்ணே! நமக்காக எல்லோரும் காத்திருக்கிருர்கள் என்று ஜெயத்ஸேனையின் கையைப் பிடித்துக்கொண்டு நடந்தான் ஜீவநாதன்.

கீழே வதூவரர்களின் வரவை எதிர்பார்த்துப் பலப் பிரபுக்களும், சில வைதீகர்களும் உட்கார்ந்திருந்தனர். ஜீவநாதனுக்கும், ஜெயத் ஸேனைக்கும் இன்று விவாகம் நடக்கிறதாக லக்னபத்திரிகை வந்திருக் கிறது என்று சிலர் கூறிக்கொண்டிருந்தார்கள். மனேன்மணி ஆரோக் கிய சரீரத்துடன் வெகுஅழகாய் நின்றிருந்தாள். ஸுந்தரி வெகு அந்த மாய் ஜெயத்ஸேனையை முத்தமிட்டு அன்று நடந்த விவாஹத்துக்கு வந்தவர்களெல்லாம் உன்னைக் காண விரும்புகிறுர்கள் என்று வைதீ கர்கள் முன்னுள்ள விவாகமண்டபத்தில் கல்யாணப் பெண்ணை நிறுத்தினுள். ரகுநாதன் ஜீவநாதனேடு விவாகமண்டபம் வந்தான். ஹரேசனும் மனேன்மணியும் ஜெயத்ஸேனையைப் பிடித்துக்கொண்டு ஜீவநாதனிடம் கொடுக்க ரகுநாதனும், ஸுந்தரியும் மகனைப் பிடித்துக் கொண்டு தாரை ஏற்க எல்லோரும் சுபமுண்டாகட்டும் என்று வாழ்த்த வாத்யக்காரர்கள் ஜெய்ஜெய் என்று ஊதிக்கொண்டிருக்க, பலப் பிரபுக் கள் இந்த விவாகமே சிலாக்யமானதென்று புகழ விவாக மகோத்ஸவம் நடந்தது.

ஹரேசன் தன் மகளுக்கு அனேக சீர்வரிசைகளைக் கொடுத்தான். ஜீவநாதன் தங்கியிருந்த பங்களாவும், அதிலுள்ள ஸாமான்களும், ஜெயத்ஸேனைக்கும் ரவிகேஸரிக்கும் சொந்தமாயின. அத்தையம்மாள் ஆனந்தத்துடன் அங்குமிங்கும் சென்றுகொண்டே மகனையும், மருமக ளையும் வாழ்த்தினுள். மனேன்மணியின் மகிழ்ச்சிக்களவில்லை. என் கண்மணிக்கு ஒரு குறைவுமில்லாமலிருக்க வேண்டுமென்றுள்.

ரஸிகேஸரிக்கும், கல்பாவதிக்கும் ரகஸ்யத்தில் விவாகம் செய்து வைத்த வைதீகர்கள் ஆசீர்வாத வசனங்கள் சொல்லுகையில் பழய தாம்பத்யத்தை அங்குள்ளவர்களிடம் விவரித்தார்கள். கேட்டவர்களெல்லாம் ஆச்சர்யமடைந்தனர். வந்த ஏழை எளியவர்களுக்கும், பிரபு, ஸ்ரீமான்களுக்கும் விவாக பக்ஷ்ய போஜ்யாதிகளுடன் விருந்தளிக்கப்பட்டது. திக்கற்றவர்களுக்குத் திரவியம், வஸ்திரம், போர்வைகள் கொடுக்கப்பட்டன. ஹரேசனுடைய ஆநந்தத்துக்கு அளவில்லை. என் அருமைப் பெண்ணுக்கு அன்புள்ள மணவாளன் கிட்டினனே என்று ஜீவநாதனைக் கொண்டாடினன்.

ஜெயத்ஸேனை அன்றிரவு தனியே படுத்துக்கொள்ளாள் என்பதை நாம் விவரிக்கவேண்டியதில்லை யல்லவா? புஷ்ப மஞ்சத்தில் பற்பல ஸுகந்த வாஸனைகள் வீசப் பன்னீர் சொரிந்த அறையில் வெகு ஆநந்தமாய் ஜீவநாதனேடு நித்திரை செய்தாள்.

தங்கள் கதைகளைச் சொல்லிச் சொல்லி ஸுந்தரி, மனேன்மணி, ஹரேசன், ரகுநாதன் முதலியவர்கள் சிரித்தார்கள்.

அக்கா! தங்களைத்தெய்வமென்று வணங்கவேண்டும். பெற்றபிள்ளையை விட சகோதரியின் மகனை வளர்த்தீர்கள். எங்கள் மாமனர் பெண் சாதியுள்ளவனுக்கு என் பெண்ணைக் கொடேனென்று கூறினராம். தாங்கள் ஒரே பிடிவாதமாய் அவரை மணந்து மூத்த மனைவியையும் உங்களோடு சேர்த்துக்கொண்டு ஸம்ஸாரம் செய்து அவள் குலத்தையும் விருத்திசெய்தீர்கள். அந்த அம்மாளுக்குப் பாக்கியமில்லை. இச்சந்தோஷத்தைப் பார்த்திருந்தால் என்ன சொல்வார்களோ. மாது இறந்து விட்டாள். சொல்லிப் பிரயோஜனமென்ன? என்றாள்.

நல்ல ஸமயத்தில் பொல்லாத வார்த்தைகளைக் கூறுதே. ஜீவநாதனும், ஜெயத்ஸேனையும் நமக்குப் புதிதாய்ப் பிறந்த குழந்தைகளென்று நினை. எழுந்திரு. ஹரேசன் காத்திருப்பான். நீங்களும் நூதன தம்பதிகளல்லவா? என்று மனேன்மணியின் கரத்தைப் பிடித்து எழுப்பி அனுப்பினள் சுந்தரி.

ஸ்ரீமதியும், ஸுந்தரியும் ஒரு கட்டிலில் படுத்துக்கொண்டார்கள். ரகுநாதன் தன் படுக்கையில் நித்திரிக்கலானன். வந்தவர்கள், பேரினவர்கள் அவரவர்களிஷ்டப்படி உறங்கினர்கள்.

ஸூர்யோதயமாயிற்று. ஜெயத்ஸேனு! ஈச்வராலயம் செல்வோம். நீயும் நானும் கல்பகாம்பா ஸமேதராய் எழுந்தருளியுள்ள (மயிலைநகர்) கபாலீச்வரனைத் தரிசிக்கலாம். அவருடைய அருளால் நமக்கு அமோகமான பாக்யம் கிட்டிற்று என்று ஜீவநாதன் தன் பிரிய ஸதியை எழுப்பினான்.

வீட்டிலுள்ளவர்க ளெல்லாம் ஸ்நானம் செய்து கோவிலுக்குப் போக வண்டி யேறினார்கள். நூதன தம்பதிகள் ஹரேசனால் வெகுமதி யளிக்கப்பட்ட "மோடார்கார்" துரித சகடத்திலமர்ந்து ஸ்வாமி கோவிலை யடைந்தனர்.

பகவானுடைய ஸந்நிதானத்திலும்,பராசக்தியின் பாததலத்திலும் ஜெயத்ஸேனையும், ஜீவநாதனும் நமஸ்கரித்து நின்றார்கள்.

**ஹரேசன்.**—இன்றே என்மனம் களித்த தினம்!

**மனோன்மணி.**—நான் மகிழ்ந்த நாளும் இதுவே!

**ஸுந்தரி.**—என் சிந்தை நீங்கின ஸுதினம் ஈதாகும்!

**ரகுநாதன்.**—பேரானந்த மனுபவிக்கும் காலம் இன்றே!

**ஜெயத்ஸேனை.**—என் நாதனைக் கண்ட நல்ல நாள் என்பதற்குள் என் ஜீவேச்வரியான ஜெயத்ஸேனையை யடைந்த தினமாகும். இந்த நாளை நான் எப்பொழுதும் ஞாபகமாய் வைத்து வருஷாவருஷம் ஆசரிப்பேன் என்றான். மங்களம் பாடப்பட்டது.

---

## பின்னுரை

"ஸ்ரீகரி"யில் சொல்லியபடி "ஜ்வலிதாங்கி" முடியாததற்காக வருத்தமடைகிறேன். இனும் புஸ்தகம் சீக்கிரத்தில் வெளிவரவேண்டியிருந்ததால் ஷை புஸ்தகம் ஸம்பூர்ணமாகத் தாமதமாயிற்று. மேமாதக் கடைசியில் ஜ்வலிதாங்கி ஆரிய ஸ்திரீ புருஷர்களின் அன்பார்ந்த பார்வைக்கு வருமென்பதைத் தெரிவிக்கலானேன்.

*P. V. A.*

# "ஹிதகாரிணிப்" பத்திரிகை

இத்தலைப் பெயர்கொண்ட ஒரு மாஸப்பத்திரிகை **பண்டிதை விசாலாக்ஷியம்மாளால்** எளிய செந்தமிழ்நடையில் எழுதப்பட்டு அழகிய புஸ்தகரூபத்துடன் வெளியாகிறது. இதன் வருஷசந்தா ரூ. 1-10-0 ஆகிறது. இதற்குச் சந்தாதாரராகும் ஒவ்வொருவருக்கும் **பண்டிதை விசாலாக்ஷியம்மாளால்** எழுதப்பட்டுள்ள அதிமனோகரமான ஜெயத்ஸேனா புத்தகம் இனாம் கொடுக்கப்படும். இனாம் புஸ்தகத்துக்குள் உறுதிமொழிச்சீட்டை வைத்து ஒரு ரூபா பத்தணா சார்ஜு செய்து வி. பி. மூலம் வஸூலிக்கப்படும். ஹிதகாரிணியிலுள்ள விஷயங்கள் அதிமதுரமானவை. அநாவச்யமான ஸமாசாரங்களிரா. நமது நாட்டு ஸ்திரீ புருஷர்களுக்கு அத்யாவச்யமான பத்திரிகையாகும். சிறுவர், சிறுமிகளின் புத்தி தீக்ஷண்யமடையும்படி நீதிவிஷயங்களடங்கியிருக்கின்றன. விருத்தர்கள், ஞானாபேக்ஷிகளுக்கு மிகப் பிரயோஜனத்தைத் தரக்கூடியது. ஒருமுறை ஹிதகாரிணியைப் படித்தால் அதன் அருமை தெரியும். மாதம், மாதம் குறித்த தேதிக்குள் பத்திரிகை வெளியாய் சந்தாதாரர்களின் ஹஸ்தங்களை அலங்கரிக்கும் மததூஷணை, ராஜத்துவேஷம், பரநிந்தை முதலிய விரோதவிஷயங்கள் ஹிதகாரிணியில் வெளிவரா தேசக்ஷேமம், ஜனங்கநன்மை, வித்யாபிவிர்த்தி, இகபரசாதகமான முக்கியவிஷயங்கள், மகான்களின் திவ்யசரித்திரங்கள், வேதாந்த ரஹஸ்யம், பலதேசவர்த்தமானம், மகிமைபெற்ற ஸ்தலங்களின் மூலகாரணம், ஸத்தியத்தின் மகிமை, தர்மத்தின் பெருமை, பரோபகாரத்தின் பலன், ஆசாரத்தாலுண்டாகும் ஆரோக்யபாக்யம், ஈசுவரபக்தி, இத்யாதி விஷயங்கள் வெகு அழகாயும், ரஸமாயும் எழுதப்பட்டு ஹிருதயாநந்தத்தை விளைத்துக்கொண்டிருக்கும். மோகபாசத்தால் அலையும் மனதை ஓர்நிலையில் நிறுத்தும் மார்க்கத்தைப் போதிக்கிறது. டிம்மி நான்குபாரம் கொண்டது. உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் முத்துக்கோர்த்ததுபோல் புதிய ஏழுத்துக்களால் அத்யத்புத விஷயங்களடங்கப்பெற்று ஹிதகாரிணி சோபிக்கும். 32-பக்கம்கொண்ட ஹிதகாரிணி வருஷமுடிவில் சுமார் 400-பக்கங்களுள்ள ஒரு அழகிய புஸ்தகமாய் ஜ்வலிக்கும் என்பதற்குத் தடையுண்டோ? இதன் சந்தாதாரர்களுக்கு 8 அணா பெறுமான ஸத்விஷயங்க ளடங்கப்பெற்ற ஒரு அழகிய கதைப் புஸ்தகம் ஒவ்[illegible]ரு வருஷமும் இனாம் கொடுக்கப்படும். ஜனங்கள் படித்து ஆனந்[illegible]டவேண்டுமென்பதே எமது

நோக்கமானதால் குறைந்த சந்தாவும் புரோத்ஸாககரமான புஸ்தகமும் ஏற்படுத்தப்பட்டன. ஆரிய சிரோமணிகளும், பாஷாபிமானிகளும், வித்யாபிலாஷிகளும், கனதனவான்களும் இதை அன்போடு ஏற்று எமது பிரயத்நம் ஸார்த்தகமாகும்படி செய்வார்களென்று நம்பியிருக்கிறோம். புஸ்தகத்தின் விலையாகிய 8-அணுவைக் கழித்தால் பத்திரிகை வருஷம் முடிய ஒரு ரூபாவுக்கு வருமென்பதை நாம் சொல்லவும் வேண்டுமோ? ஹிதகாரிணியில் ஆறுமனோகரமான உத்தம ரமணிகளின் சரித்திரம் வெளியாகும். அவைகளின் பெயர்.—ராஜசேகரி, கல்பவல்லரி, கவிகுஞ்சரி, லாவண்யரேகா, இந்திரநீலா, ரஸிகவசனி. அநேக வருஷகாலம் ஹிதகாரிணி பிரயோசனப்படுமென்பதற்குச் சந்தேகமுண்டோ? விதேசசரித்திர வர்த்தமானங்கள் வெகு ஸ்வாரஸ்யமாயிருக்கும். ஆரியகுல சிரோமணிகள் ஹிதகாரிணியை அபிமானித்து ஆதரிக்கும்படி பிரார்த்திக்கிறோம்.

ஸ்ரீகரி.—மங்களாங்கி யென்றால் இவளுக்கே தகும் என்றபடி பிறருடைய நன்மையைக் கோரி நடக்கும் நாரீமணியின் கதை. வெகு விநோதமாயிருக்கும். படிக்கப்படிக்கக் கூர்மை புத்தியும், மனோத்ஸாகமும், தர்மத்தில் பிரியமும் உண்டாகும். கற்பின் மகிமையை அறிந்து நடப்பதற்கு இது ஸாதகமாயிருக்கிறது.

விலை அணு 8.

ஜ்வலிதாங்கி.—வெகு நேர்த்தியான வழியில் எழுதப்பட்டிருக்கிறது. ஆச்சர்யம், பிரமை, மனோமயக்கம் ஆகிய இவைகளை இக்கதையில் விசேஷமாய்க் காணலாம். ஆநந்தம், விநோதம், அந்தரங்கம் முதலியவைகள் அற்புதமாய் வரையப்பட்டுள. ஒருமுறை படித்தவுடன் திருப்தியடைய முடியாது. மறுபடியும் ஓதவேண்டுமென்ற ஆசை தூண்டிக்கொண்டேயிருக்கும். விலை அணு 8.

மேற்கண்ட கிரந்தங்களெல்லாம் பண்டிதை விசாலாக்ஷியம்மாளால் எழுதப்பட்டவை. தமிழ்நாட்டு ஸ்திரி புருஷர்கள் அவசியம் படிக்கவேண்டிய புஸ்தகங்களாகும். கீழ்க்கண்டுள்ள விலாஸத்துக்கு எழுதி வாங்கிக்கொள்ளலாம்.

R. K. சர்மா,
"கல்பக விலாஸ்"
மயிலாப்பூர், மதராஸ்.

MV9, J
171072
600 008